عَمَّا تَعْمَلُونَ ﴿۱۴۹﴾

149. இன்னும், எந்த இடத்திலிருந்து நீர் (பிரயாணத்திற்குப்) புறப்பட்டீரானாலும் (தொழுகைக்காக) உமது முகத்தை மஸ்ஜிதில் ஹராமின் பக்கம் திருப்புவீராக. இன்னும் நிச்சயமாக (கஃபாவைக் கிப்லாவாக மாற்றிய) இது உமது றப்பிடமிருந்துள்ள உண்மையாகும். மேலும், நீங்கள் செய்வதை விட்டு அல்லாஹ் மறந்தவனாயில்லை.

கஃபாவை அல்லாஹு தஆலா கிப்லாவாக ஆக்கியது உள்ளூரிலிருக்கும் காலத்தில் தொழும் போது அதன்பக்கம் முன்னோக்க வேண்டும் என்பதற்காக மட்டுமில்லை. உள்ளூரில் இருந்தாலும் சரி பிரயாணத்திற் சென்றாலும் சரி எல்லாக் காலத்திலும் கஃபாதான் கிப்லா என்ற விஷயத்தை இறைவன் இந்த ஆயத்தில் அறிவித்திருக்கிறான்.

وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ
الْحَرَامِ ۖ وَحَيْثُ مَا كُنْتُمْ فَوَلُّوا وُجُوهَكُمْ شَطْرَهُ
لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَيْكُمْ حُجَّةٌ ۙ إِلَّا الَّذِينَ
ظَلَمُوا مِنْهُمْ ۚ فَلَا تَخْشَوْهُمْ وَاخْشَوْنِي ۚ وَلِأُتِمَّ
نِعْمَتِي عَلَيْكُمْ وَلَعَلَّكُمْ تَهْتَدُونَ ﴿۱۵۰﴾

150. இன்னும், நீர் எங்கிருந்து புறப்பட்டீரானாலும் உமது முகத்தை மஸ்ஜிதுல் ஹராமுக்கு நேராகத் திருப்புவீராக. இன்னும் (மூமின்களே) ஜனங்களுக்கு உங்கள் மீது தர்க்கம் இல்லாதிருப்பதற்காகவும், எனது அருட்கொடையை உங்கள் மீது நான் பூர்த்தி செய்வதற்காகவும், நீங்கள் நேர்வழி பெறுவதற்காகவும் நீங்கள்

எங்கிருந்தாலும் உங்கள் முகங்களை அதற்கு நேராகத் திருப்புங்கள். ஆனால், அவர்களில் அநியாயம் செய்தவர்களைத் தவிர. (அவர்கள் எந்த விதத்தாலும் தர்க்கம் செய்வார்கள்). ஆதலின், அவர்களுக்கு நீங்கள் அஞ்ச வேண்டாம். இன்னும் என்னையே நீங்கள் அஞ்சுங்கள்.

وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ "மேலும் நீர் எங்கே புறப்பட்டீரானாலும் உமது முகத்தை மஸ்ஜிதுல் ஹராமுக்கு நேராகத் திருப்புவீராக" என்று இறைவன் மடக்கி மடக்கிக் கூறி இருப்பது கஃபத்துல்லாவை கிப்லாவாக ஏற்படுத்திய இந்த சட்டத்தை ஊர்ஜிதம் செய்வதற்கும், இதன் அவசியத்தை வற்புறுத்துவதற்குமேயாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பைத்துல் முகத்தஸை நோக்கித் தொழுத யூதர்களும் இணைவைப்பாளர்களும் இரண்டு விதமாக ஆட்சேபனைகளைச் செய்கின்றனர். அதாவது முஹம்மது எங்கள் மார்க்கம் சரியில்லை என்று கூறுகிறார். ஆயினும், எங்கள் கிப்லாவாகிய பைத்துல் முத்தஸை நோக்கித் தொழுகிறார் என்று யூதர்கள் கூறினர். ஹளரத் இப்ராஹீம் நபியுடைய மார்க்கத்தில் இருப்பதாக முஹம்மது சொல்லிக் கொள்கிறார். ஆயினும் அவரது கிப்லாவாகிய கஃபாவை அவர் முன்னோக்கித் தொழுவதில்லை என்று மக்காவிலுள்ள இணைவைப்பாளர்கள் கூறினர். இவ்விதமாக இரு பிரிவினரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தர்க்கம் செய்வதற்கு இடமில்லா திருப்பதற்காக மஸ்ஜிதுல் ஹராமை நோக்கித் தொழும்படி இறைவன் கட்டளை யிட்டான்.

ஆனால், அவர்களிலுள்ள அநியாயக்காரர்கள் வேண்டுமென்றே முரண்டு செய்வதால் அவர்கள் கஃபாவைக் கிப்லாவாக ஏற்படுத்தியதையுங் கூடக் குறையாகத்தான் கூறுவார்கள். முஹம்மது தனது சமூகத்தராகிய இணைவைப்பாளர்களின் மார்க்கத்தில் சாய்ந்தவராக இருப்பதற்காகவும் தனது ஊரின் மீது பிரியமுள்ளவராக இருப்பதற்காகவுமே கஃபாவை முன்னோக்கித் தொழுகிறாரே யன்றி அல்லாஹுதஆலாவின் கட்டளைப்படி திரும்பினாரில்லை என்று கூறினார்கள். இதனை குறித்துத்தான் இறைவன் إِلَّا الَّذِينَ ظَلَمُوا مِنْهُمْ

அவர்களில் அநியாயம் செய்தவர்களைத் தவிர என்று கூறிஇருக்கிறான்.

அல்லாஹுதஆலா தனது அடியார்களுக்குச் செய்த அருட்கொடைகள் இரண்டு வகை. (மௌஹூஃபுன்) தானாகக் கிடைக்கும் அருட்கொடை ஒருவகை. (முக்தஸபுன்) முயற்சியால் கிடைக்கும் அருட்கொடை மற்றொருவகை. உடல் ஆரோக்கியமாக இருத்தல், அங்கஹீனமில்லா திருத்தல் முதலியவைகள் முதலாவது வகையை (அதாவது மௌஹூபைசி) சேர்ந்தனவாகும். ஈமான் கொள்ளல், நற்கிரியைகளைச் செய்தல், அவனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடத்தல், விலக்கல்களை விட்டு விலகி இருத்தல் முதலிய காரியங்கள் இரண்டாவது வகையை (அதாவது முக்தஸபை)ச் சேர்ந்தனவாகும். எனவே, ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கிப்லாவை முன்னோக்கும்படி இறைவன் கட்டளை யிட்டது கிப்லாவுடைய விஷயத்தில் அவனுடைய அருட்கொடை பூர்த்தியானதாக இருக்கிறது.

كَمَآ أَرْسَلْنَا فِيكُمْ رَسُولًا مِّنكُمْ يَتْلُوا۟ عَلَيْكُمْ ءَايَٰتِنَا وَيُزَكِّيكُمْ وَيُعَلِّمُكُمُ ٱلْكِتَٰبَ وَٱلْحِكْمَةَ وَيُعَلِّمُكُم مَّا لَمْ تَكُونُوا۟ تَعْلَمُونَ ۝

151. (அறபிகளே! எனது அருட்கொடைகளைப் பூர்த்தி செய்வதற்காக) நம்முடைய (வேத) வசனங்களை உங்களுக்கு ஓதிக் காண்பித்து, உங்களைப் பரிசுத்தப்படுத்தி, உங்களுக்கு வேதத்தையும், விவேகத்தையும் கற்பித்து நீங்கள் அறியாமல் இருந்ததை உங்களுக்கு அறிவிக்கக் கூடிய ஒரு ரசூலை உங்களிலிருந்தே உங்களுக்கு நாம் அனுப்பியது போல (கிப்லாவுடைய விஷயத்தில் நாம் கட்டளையிட்டதும் எனது அருட்கொடையைப் பூர்த்தி செய்வதற்கே யாகும்.)

நபிமார்களை அனுப்பி ஜனங்களுக்கு இறைவன் நேர்வழி காட்டுவதும் அவனுடைய அருட்கொடையாகும். அதிலும் முக்கியமாக அவர்கள் இனத்தைச் சேர்ந்தவரையே அவர்களில் நபியாக அனுப்புவது பெரிய அருட்கொடையாக இருக்கிறது.

வேதத்தையும் விவேகத்தையும் கற்றுக் கொடுப்பவர் என்று கூறியபின் நீங்கள் அறியாமலிருந்ததை உங்களுக்கு அறிவித்துத் தரக்கூடிய ஒருவர் என்று மீண்டும் கூறியது வஹி மூலம் அல்லாது வேறு எவ்வகையிலும் அறிய முடியாத, அறிவுக்கெட்டாத விஷயங் களையும் கற்பித்துக் கொடுப்பார் என்பதை அறிவிக்கிறது.

ஆயாத்தினா அதாவது நம்முடைய (வேத) வசனங்கள் என்பதற்கு "திருக்குர்ஆன்" என்பது கருத்தாகும். **அல்கித்தாப்** அதாவது வேதத்தை என்பதற்கு திருக்குர்ஆனிலுள்ள விஷயங்களும் கருத்துக்களும் விதிவிலக்குகளும் என்பது கருத்து. **அல்ஹிக்மத்** அதாவது விவேகம் என்பதற்கு சொல்லாலும் செயலாலும் தவறாதிருத்தல் என்பது கருத்தாகும்.

فَٱذْكُرُونِىٓ أَذْكُرْكُمْ وَٱشْكُرُوا۟ لِى وَلَا تَكْفُرُونِ ۝

152. ஆதலின், என்னை நீங்கள் நினையுங்கள்; நான் உங்களை நினைக்கிறேன். இன்னும் எனக்கு நன்றி செலுத்துங்கள். இன்னும் எனக்கு நீங்கள் மாறு செய்யாதீர்கள்.

ஹதீஸ்:- எவன் அல்லாஹு தஆலாவுக்கு கீழ்ப்படிந்தானோ அவனுடைய தொழுகையும் அவனது நோன்புகளும் அவன் குர்ஆன் ஓதுவதும் குறைவாக இருந்தாலும் சரியே. அவன் அவனை நினைத்தவனாகி விட்டான். இன்னும் எவன் அல்லாஹுதஆலாவுக்கு மாறு செய்தானோ அவனுடைய தொழுகையும், அவன் குர்ஆன் ஓதுவதும் மிகுதமாக இருந்தாலும் சரியே அவன் அவனை மறந்தவனாகி விட்டான் என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆதலின் **"என்னை**

நினையுங்கள்” என்று இறைவன் கூறி இருப்பதற்கு “எனக்கு கீழ்ப்படியுங்கள்” என்பது கருத்தாகும்.

“ஆதமுடைய மகனே! நீ என்னை உன் மனதில் திக்ரு (ஞாபகம்) செய்தால் நான் உன்னை என் மனதில் திக்ரு செய்வேன். நீ என்னை ஒரு கூட்டத்தில் திக்ரு செய்தால் அதைக்காணச் சிறந்த கூட்டத்தில் நான் உன்னை திக்ரு செய்வேன். எனக்கு நீ ஒரு சாண் நெருங்கி வந்தால் நான் உனக்கு ஒரு முழம் நெருங்கி வருவேன்” என்று இறைவன் கூறியதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

அல்லாஹு தஆலாவுக்கு மறதி ஏற்படுவதை விட்டும் அவன் தூயவன். ஆதலின், “உங்களை நான் நினைக்கிறேன்” என்று இறைவன் கூறியதற்கு அவன் முன்னர் நம்மை மறந்திருந்தான் என்பதும், அப்பால் நாம் அவனுக்கு கீழ்ப்படிந்த பின் நம்மை எண்ணிக் கொண்டான் என்பதும் கருத்தல்ல. நாம் செய்கிற வழிபாடுகளுக்கும் வணக்கங்களுக்கும் தக்கவாறு நமக்கு நற்கூலி அளித்து நம் மீது நேசமாகவும் அன்பாகவும் இருந்து நமக்கு அருட்கொடைகளின் வாசல்களைத் திறந்துவிடுவான் என்பது கருத்தாகும்.

நன்றி செலுத்துதல் இரண்டு வகைப்படும். ஒருவர் நமக்குச் செய்துள்ள உதவிகளைக் கருதி அந்த உதவிகளுக்காக அவரைப் புகழ்வது ஒருவகை. ஒருவருடைய உதவிகளைக் கவனியாமல் அவரை மட்டும் கருதி அவரைப் புகழ்வது மற்றொருவகை. இந்த இடத்தில் நன்றி செலுத்தும்படி இறைவன் கூறியது முதலாவது வகை நன்றியாகும். ஏனெனில், அல்லாஹு தஆலாவை முற்றிலும் உணர்ந்து கொள்ள அடியார்களால் முடியாது. ஆனால், அவனது அருட்கொடைகளை அடியார்கள் உணர்ந்து கொள்ளமுடியும். ஆதலின் முதலாவது வகையான நன்றியையே இறைவன் இங்கு கூறி இருக்கிறான்.

மேலும், இந்த ஆயத்தில் இறைவன் என்னை நினையுங்கள் என்றும் எனக்கு நன்றி செலுத்துங்கள் என்றும் கூறி இருப்பதால் என்னை நினையுங்கள் என்று கூறியதற்கு என்னை நாவினால் ஜபியுங்கள் என்பதும், எனக்கு நன்றி செலுத்துங்கள் என்று

கூறியதற்கு அமல்களின் மூலம் நன்றி செலுத்துங்கள் என்பதும் கருத்தாகும் என்று **தைஸீர்** என்ற கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மேலும், எனக்கு நன்றி செலுத்துங்கள் என்று இறைவன் கூறியதுடன் நிற்காமல் எனக்கு மாறு செய்யாதீர்கள் என்று கூறியதற்குக் காரணம் என்ன வெனில், எனக்கு நன்றி செலுத்துங்கள் என்று மட்டும் கூறி இருந்தால் அவனுடைய அருட்கொடைகளில் ஏதேனும் ஒன்றுக்கு ஒரு முறை நன்றி செலுத்தி விட்டால் போதுமானது என்று எண்ண இடமிருக்கிறது. எனக்கு மாறு செய்யாதீர்கள் என்று மட்டும் கூறி இருந்தால் அவனுக்கு மாறான காரியம் செய்யாமல் இருந்தால் போதுமானது என்று எண்ண இடமிருக்கிறது. ஆகவே, நன்றி செலுத்தும் படி ஏவியும், மாறு செய்வதை விலக்கியும் இருப்பதிலிருந்து பாவமான காரியங்களைச் செய்யாமல் விலகிக் கொள்வதுடன் நன்மையான காரியங்களைச் செய்வதும் அவசிய மாகும் என்று தெரிகிறது.

தவிர, இதற்கு முன்னுள்ள உம்மத்துகளாகிய இஸ்ரவேல் கூட்டத்தாரை நோக்கி “இஸ்ராயீலின் சந்ததிகளே! நான் உங்களுக்குச் செய்த எனது அருட்கொடையை எண்ணிப் பாருங்கள்” என்பதாகக் கூறி இருக்கிறான். இப்படி இந்த உம்மத்துகளாகிய நமக்குக் கூறாமல் “என்னை நினையுங்கள்” என்று கூறி இருப்பது இறைவன் நமக்கு கொடுத்துள்ள அகப் பார்வையையும் மேன்மையையும் அறிவிக்கிறது என்பதாகச் சில உலமாக்கள் கூறி இருக்கிறார்கள்.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱسْتَعِينُوا۟ بِٱلصَّبْرِ وَٱلصَّلَوٰةِ ۚ إِنَّ
ٱللَّهَ مَعَ ٱلصَّٰبِرِينَ ۝

153. ஈமான் கொண்டவர்களே! பொறுமையையும் தொழுகையையும் கொண்டு நீங்கள் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஒரு காரியம் வருத்தப்படுத்துமாயின் உடனே அவர்கள் தொழுகையின்பால் தீவிரமாவார்கள். அத்துடன், மேற்கண்ட ஆயத்தையும் ஓதுவார்கள்.

அகக்காரியங்களில் பொறுமையானது மனதிற்கு மிகவும் கஷ்டமான காரியமாகும். இதுபோல புறக் காரியங்களில் தொழுகை யானது உடலுக்கு மிகவும் கஷ்டமான காரியமாகும். ஆதலால்தான் இறைவன் பொறுமையையும் தொழுகையையும் இணைத்துக் கூறி இருக்கிறான்.

தவிர, ஒருவர் தொழுகையாளியாக இருந்து கொண்டு பொறுமையுடையவராக இல்லாமல் இருக்கலாம். ஆனால், பொறுமை யுடையவராக இருப்பவர் தொழுகையாளியாக இல்லாமலிருக்க முடியாது. ஆகவே பொறுமையுள்ள இடத்தில் தொழுகையும் இருக்கும். ஆனால் தொழுகையுள்ள இடத்தில் சில சமயம் பொறுமை இல்லாமல் இருக்கவும் கூடும். ஆதலால்தான் இறைவன் إِنَّ اللَّهَ مَعَ الصَّابِرِينَ **"நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளருடன் இருக்கிறான்"** என்று கூறி இருக்கிறான். பொறுமையாளருடன் இருக்கிறான் என்ற வாக்கியத்திற்கு உள்ளாகவே அவன் தொழுகையாளிகளுடனும் இருக்கிறான் என்ற விஷயம் அடங்கி விடுகிறது.

ஹதீஸ்:- உடலுக்குத் தலை இருக்கும் அந்தஸ்தில் ஈமானுக்கு பொறுமை இருக்கிறது. என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஹதீஸ்:- பொறுமையானது அது முழுவதும் நன்மையாக இருக்கிறது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். எனவே, ஒருவர் பொறுமை என்ற ஆபரணத்தைப் பூண்டு கொள்வாராயின் அவர் வழிபாடுகள் என்னும் தாஆத்துகளைச் செய்வதும், வெறுக்கத்தக்க காரியங்கள் என்னும் விலக்கல்களை விட்டு விலகிக் கொள்வதும் அவருக்குச் சுலபமாகி விடுகின்றது. இதுபோலவே, தொழுகையானது வெறுக்கத்தக்க காரியங்களையும் மானக் கேடானவைகளையும் விட்டு விலக்குகிறது.

ஹதீஸ்:- "பொறுமையாளர்கள் எங்கே?" என்று ஒரு மலக்கு கியாமத்து நாளில் அழைப்பார். சிலர் எழும்பி சுவர்க்கத்தை நோக்கி விரைந்து செல்வார்கள். அப்பொழுது அங்குள்ள மலக்குகள் "நீங்கள் யார்" என்று கேட்பார்கள். அதற்கவர்கள் "நாங்கள் பொறுமை யாளர்கள்" என்று பதில் கூறுவார்கள். அப்பொழுது அம்மலக்குகள் அவர்களை நோக்கி "நீங்கள் சுவர்க்கம் புகுந்து கொள்ளுங்கள், சுவர்க்கம் புகுந்து கொள்ளுங்கள்" என்று சொல்வார்கள்.

وَلَا تَقُولُوا لِمَن يُقْتَلُ فِي سَبِيلِ اللَّهِ أَمْوَاتٌ ۚ بَلْ أَحْيَاءٌ وَلَٰكِن لَّا تَشْعُرُونَ ۝

154. இன்னும், அல்லாஹ்வின் பாதையில் கொல்லப் படுகிறவர்களை, இறந்தவர்கள் என்று நீங்கள் கூறாதீர்கள். மேலும், (அவர்கள்) உயிருள்ளவர்களாக இருக்கிறார்கள். என்றாலும் நீங்கள் (இதனை) அறிய மாட்டீர்கள்.

இந்த ஆயத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் மக்கத்து குறைஷியருக்கும் பத்ரு என்ற இடத்தில் ஹிஜ்ரீ 2ம் வருடத்தில் நடந்த போரில் ஷஹீதானவர்களைப் பற்றி அருளப்பட்டது. இந்தப் போரில் 14 ஸஹாபிகள் ஷஹீதானார்கள். இவர்களில் அறுவர் முஹாஜிர்கள். எண்மர் அன்ஸாரிகள். இவர்களைக் குறித்து ஜனங்கள் "இன்ன மனிதர் ஃபீஸபீலில் இறந்து விட்டார். இந்த உலகத்தின் அருட்கொடைகளும் இன்பங்களும் அவரை விட்டு நீங்கிவிட்டன" என்று கூறினர். இதனை மறுத்து இறைவன் இந்த ஆயத்தை அருளினான்.

அஹ்யாவுன் அதாவது உயிருடனிருப்பவர்கள் என்று இறைவன் இவர்களைக் குறித்துக் கூறி இருக்கிறான். இவர்கள் வெளித் தோற்றத்தில் மற்றவர்களைப் போல் புற வாழ்வைப் பெற்றிருக்கா விடினும் புறவாழ்வைப் பெற்றவர்கள் அடையக்கூடிய கிரியைகளின் பலனை இவர்கள் அடைந்து கொண்டே இருக்கிறார்கள். ஆதலின்,

இவர்கள் அகத்தில் உயிருடன் இருப்பவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் அல்லாஹு தஆலாவின் சன்மார்க்கத்திற்கு உதவி செய்வதற்காகச் செய்த போரில் கொல்லப்பட்டனர். ஆதலின், இவர்களின் இப்புனித காரியத்தின் நற்பயன் இவர்களுக்கு எப்பொழுதும் கிடைத்துக் கொண்டே இருக்கும். மார்க்கத்திற்காக உயிர்த்தியாகம் செய்கிற இம்முறையை இவர்கள் முதல் முதலாக ஏற்படுத்தியதால் இவ்வுலகில் இஸ்லாம் மார்க்கம் மேலோங்கி, மார்க்கத்திற்காக ஒருவரேனும் யுத்தம் செய்யும் காலம்வரை இவர்களுக்கு அதன் பலன் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

وَلٰكِنْ لَّا تَشْعُرُوْنَ **என்றாலும் நீங்கள் (இதனை) அறிய மாட்டீர்கள்** அதாவது ஃபீஸபீலில் கொல்லப்பட்டு ஷஹீதானவர்கள் எவ்வாறு உயிருடன் இருக்கிறார்கள்? இந்த உலகில் மனிதர் உயிருடன் இருப்பதுபோல் அவர்கள் உயிருடனிருக்கிறார்களா? அல்லது அவர்களுடைய வாழ்வு வேறு மாதிரி இருக்கிறதா? என்ற விஷயத்தை இவ்வுலக வாழ்க்கையில் அறிய முடியாது. இது ஆத்மார்த்த விஷயமாகும். இதனை யுக்தியைக் கொண்டோ அறிவைக் கொண்டோ ஆராய்ந்து உணர்ந்து கொள்வதற்கில்லை, வஹியின் மூலமாகவே இதனை உணர்ந்து கொள்ளுதல் சாலும். "இவர்களுடைய ஆன்மாக்கள் பச்சைப் பறவைகளுடைய வடிவத்திலிருந்து கொண்டிருக்கின்றன. சுவர்க்கத்தில் நாடின இடத்தில் இவைகள் மேய்ந்து கொள்ளும்" என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

"எவருடைய (ஜீவியம்) வாழ்வு அவ(ருடைய நஃப்ஸைசி)ரைச் சார்ந்ததாக இருக்கிறதோ அவனுடைய மரணம் அவரது ஆன்மா (உயிர்) உடலை விட்டுப்போய் விடுவதை பொறுத்திருக்கிறது. இன்னும் எவருடைய (ஜீவியம்) வாழ்வு அவரது ரப்பைச் சார்ந்திருக்கிறதோ அவர் தபஇயான (ஸ்தூல) ஜீவியத்திலிருந்து வாழ்க்கையிலிருந்து அசல் (ஜீவியத்தின்) வாழ்க்கையின்பால் மாறி விடுகிறார். இந்த அசல் (ஜீவியம்) வாழ்க்கைதான் உண்மையான ஹக்கீக்கத்தான (ஜீவியமாகும்) வாழ்வாகும்" என்று ஹளரத் ஜுனைதுல் பகுதாதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"எவர்களது உடல் அல்லாஹ்வில் பனாவாகுகின்றதோ (அழிகிறதோ) அவர்களது ஆன்மா அல்லாஹ்வைக் கொண்டு பாக்கியாக (நிலைத்து) இருக்கும்" என்று குஷைரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

தாவீலாத்துன்னஜ்மிய்யா என்னும் கிரந்தத்தில் "அல்லாஹ்வின் பாதையில் பனாவைக் கொண்டு அல்ஜிஹாதே அக்பர் செய்பவர்களிலிருந்து அல்லாஹ்வின் ஜலால் என்னும் வாளைக் கொண்டு கொல்லப்பட்டு அல்லாஹ்விலேயே அழிபவர்களை இறந்தவர்கள் என்று நினைக்கக் கூடாது. ஏனெனில், அவர்களது உஜுதின் (வெளித்தோற்றத்தின்) தன்மைகள் அழிந்து போனாலும் அவர்களை உண்டாக்கியவனின் ஷுஹுதைக் கொண்டு அவர்கள் ஹயாத்தாக (உயிருடன்) இருக்கிறார்கள். மேலும், எவருடைய அழிவானது அல்லாஹ்விலேயே இருக்கிறதோ அவருடைய பகாவானது (நிலையானது) அல்லாஹ்வைக் கொண்டிருக்கிறது. ஜலாலுடைய ஸிஃபத்துகள் என்னும் வலுப்பமான தன்மைகள் தஜல்லியாகுதலின் அதிர்ச்சிகளைக் கொண்டு அவர்களை அவன் பனாவாக்கினாலும் (இல்லாமலாக்கினாலும்) அவனது ஜமால் என்னும் தாமச குணங்களினுடைய இன்பக் காற்றுகளைக் கொண்டு அவர்களை உயிர்ப்பிக்கிறான். ஆகவே, அவர்கள் ஜமாலுடைய பூங்காவனங்களில் மேய்கின்றனர். எனினும், அவர்களது நிலைமைகளைப் பற்றி நீங்கள் அறிய மாட்டீர்கள் என்ற விஷயங்கள் இந்த ஆயத்தில் சமிக்ஞையாகக் கூறப்பட்டிருக்கின்றன" என்பதாக எழுதப்பட்டிருக்கிறது.

وَلَنَبْلُوَنَّكُمْ بِشَيْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوْعِ وَنَقْصٍ مِّنَ
الْاَمْوَالِ وَالْاَنْفُسِ وَالثَّمَرٰتِ ۗ وَبَشِّرِ الصّٰبِرِيْنَ ۝

155. மேலும் (முஸ்லிம்களே பகைவர்) பயம், பஞ்சம் ஆகியவற்றிலும், இன்னும் பொருள்களிலும், உயிர்களிலும், பழங்களிலுமிருந்து நஷ்டமாகுதலில் நின்றும் ஒன்றைக் கொண்டு

உங்களை நாம் நிச்சயமாகச் சோதிப்போம். இன்னும், பொறுமையாளர்களுக்கு நற்செய்தி கூறுவீராக.

அல்லாஹு தஆலா முஸ்லிம்களாகிய நம்மைச் சோதிப்பது நம்மவரில் அவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பவர் யார்? கீழ்ப்படியாமல் பாவம் செய்பவர் யார்? என்பதை நமக்கு வெளிப்படுத்திக் காண்பிப் பதற்கேயாகும், இதல்லாமல் தனக்குத் தெரியாதிருந்த ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்காக அவன் நம்மைச் சோதிப்பதில்லை.

தவிரவும் **பிஷையின்** என்ற அறபி வார்த்தைக்கு **ஒன்றைக் கொண்டு** என்பதாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், அதிலுள்ள **தன்வீன்** என்ற நூன் மிகவும் அற்பமானது என்ற கருத்தை அறிவிப்பதாக இருப்பதால் அவன் நம்மைச் சோதிப்பது மிகவும் அற்பமான சோதனையே தவிர பிரமாதமானது ஒன்றுமில்லை. ஏனெனில், அவன் நமக்கு அருளி இருக்கிற அருட்கொடைகள் மிகவும் மகத்தானவை. அவற்றின் முன் நமக்கு ஏற்படும் இந்த நஷ்டங்கள் மிகவும் சொற்பமானவைகளாக இருப்பதால் இவற்றை அற்பமானது என்று சொல்லப்பட்டது.

அன்ஃபுஸ என்பதற்கு உயிர்கள் என்பதாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. உயிர் நஷ்டம் என்பதற்கு கொலை, மரணம், நோய், முதுமை ஆகியவைகள் நிகழுதல் என்பது கருத்து.

தமராத் என்பதற்கு பழங்கள் என்பதாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. பழவர்க்கங்களில் நஷ்டம் என்பது வெட்டுக் கிளி, காற்று, பனி, ஆலங்கட்டி முதலியவற்றால் வெள்ளாண்மையின் பலன், மரங்களின் பலன் முதலியவைகள் குறைந்து விடுவது என்பது கருத்து.

ஹளரத் இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இவற்றிற்கு வேறு விதமான விளக்கம் கூறி இருக்கிறார்கள். அதாவது பயம் என்பது அல்லாஹ்வின் மீது பயம் வைத்தல், பசி என்பது ரமலான் மாதத்தில் நோன்பு நோற்றல், பொருள் நஷ்டம் என்பது ஜக்காத்து, ஸதக்காக்கள் முதலியவைகள் கொடுப்பதால் ஏற்படும் பணக்குறைவு, உயிர்கள் (நப்ஸுகள்) நஷ்டம் என்பது நோய்கள் உண்டாகுதல், பழங்கள் (தமராத்து) நஷ்டம் என்பது குழந்தைகள், மக்கள் மரணித்தல் என்பதாகக் கூறி இருக்கிறார்கள்.

وَبَشِّرِ **நீர் நற்செய்தி சொல்வீராக** என்ற கட்டளை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முன்னோக்கி ஏவிய கட்டளையாகும், அல்லது நற்செய்தி கூறுவதற்கு எவர் தகுதியுள்ளவரோ அவரைக் குறித்துச் சொன்னதாகும். ஏனெனில், மிகவும் மகத்தான நற்கூலியை அளிக்கவல்ல பெரும் கிருபையாகவும், வலிமார்கள், நபிமார்களின் தன்மைகளில் ஒன்றாகவும் பொறுமையிருக்கிறது. ஆகவே, பொறுமையுள்ளவர்கள் நற்செய்தி கூறப்படுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

الَّذِينَ إِذَا أَصَابَتْهُم مُّصِيبَةٌ قَالُوا إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

156. அவர்களுக்கு ஒரு கஷ்டம் ஏற்பட்டு விடுமாயின், நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வுக்கு (அடிமைப்பட்டவர்கள்) ரியவர்கள். இன்னும் நிச்சயமாக நாங்கள் அவன்பால் மீளுகிறவர் களாக இருக்கிறோம் என்று அவர்கள் கூறுவார்கள்.

இந்த ஆயத்தில் பொறுமையாளர்களின் தன்மையைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இறைவனது அடியார்களில் ஒருவரது குழந்தை இறந்து விட்டால் மலக்குகளை நோக்கி அல்லாஹு தஆலா "எனது அடிமையின் குழந்தையை நீங்கள் கைப்பற்றினீர்களா" என்று கேட்பான். அதற்கு அவர்கள் "ஆம்" என்று கூறுவார்கள். பிறகு, "அவனுடைய இதயக்கனியை நீங்கள் கைப்பற்றினீர்களா?" என்று கேட்பான். அதற்கவர்கள் "ஆம்" என்று கூறுவார்கள். அப்பொழுது "எனது அடிமை கூறியது என்ன?" வென்று அவன் கேட்பான்.

அதற்கவர்கள் إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ "உன்னைப் புகழ்ந்து உன் பால் மீண்டான்" (அதாவது இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் என்று சொன்னான் என்பதாகக் கூறுவார். அப்பொழுது அவன் "எனது அடியானுக்குச் சுவர்க்கத்தில் ஒரு மாளிகையைக் கட்டி அதற்கு பைத்துல் ஹம்த் (புகழ் மாளிகை) என்று பெயர் வையுங்கள் என்று கூறுவான்" என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

أُولَٰئِكَ عَلَيْهِمْ صَلَوَاتٌ مِّن رَّبِّهِمْ وَرَحْمَةٌ ۖ وَأُولَٰئِكَ هُمُ الْمُهْتَدُونَ

157. இவர்களுடைய றப்பிடமிருந்து ஸலவாத்துகளும் கிருபையும் அவர்கள் மீது உண்டாகி இருக்கிறது. இன்னும், அவர்கள்தான் நேர்வழி பெற்றவர்கள்.

இந்த ஆயத்தில் இறைவன் பொறுமையாளருக்குக் கிடைக்கும் பலனைக் குறித்துக் கூறி இருக்கிறான்.

ரிவாயத்து:- கஷ்டம் வந்தபோது எவன் தனது கையைக் கொண்டு தனது துடையின் மீது அடித்துக் கொள்கிறானோ அவனுடைய நற்கூலி அழிந்து விட்டது என்பதாக ஹளரத் அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஸலாத் என்பதும், **ரஹ்மத்து** என்பதும் கிட்டத்தட்ட ஒரே பொருள்கள் உள்ளவைகளாகும். ஆனால், இந்த ஆயத்தில் ஸலாத் என்ற பதத்தைப் பன்மையாக்கி ஸலவாத் என்பதாகக் கூறி இருப்பதில் விதம் விதமான ரஹ்மத்துகள் என்பதை அறிவிக்கிறது. ஸலவாத்துகளும் ரஹ்மத்தும் அவர்களுக்கு உண்டு என்பதாக இரண்டையும் சேர்த்துக் கூறி இருப்பது பொறுமையாளர்களுக்கு அவனளிக்கும் ரஹ்மத்து இடையில் முறிந்து போகாமல் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கும் என்பதை அறிவிக்கிறது.

வேறு சிலர், அல்லாஹ்விடமிருந்துள்ள ஸலாத்து என்பது அவனது பாராட்டுதலும் புகழும் மதிப்பும் என்றும், ரஹ்மத் என்பது

அவனது அன்பும், இரக்கமும் என்றும் விளக்கம் கூறி இருக்கிறார்கள். இன்னும் சிலர் ஸலவாத் என்பது பிழை பொறுத்தல் என்பதாகக் கூறி இருக்கிறார்கள்.

إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِن شَعَائِرِ اللَّهِ ۖ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ أَن يَطَّوَّفَ بِهِمَا ۚ وَمَن تَطَوَّعَ خَيْرًا فَإِنَّ اللَّهَ شَاكِرٌ عَلِيمٌ

158. நிச்சயமாக ஸஃபாவும், மர்வாவும் அல்லாஹ்வின் (மார்க்கத்திற்குரிய) அடையாளங்களில் உள்ளவைகளாகும். ஆகவே, எவர் அந்த வீட்டை ஹஜ்ஜுச் செய்கிறாரோ அல்லது உம்ராச் செய்கிறாரோ அவ்விரண்டிலும் அவர் தவாஃபு செய்வது அவர் மீது குற்றமில்லை. இன்னும் (தவாஃபு முதலானவற்றில் தன் மீது ஏற்பட்ட கடமையைப் பார்க்கினும்) அதிகமாக நன்மையைச் செய்வானாயின் நிச்சயமாக அல்லாஹ் (அவனுடைய அமலுக்குக்) கூலி கொடுக்கிறவனாக(வும் அவனுடைய வழிபாட்டை) அறிகிறவனாக(வும்) இருக்கிறான்.

அஸ்ஸஃபா என்பது மக்காவிற்கு அருகிலுள்ள ஒரு மலைக்குப் பெயர். ஹளரத் ஆதம் ஸஃபிய்யுல்லாஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இந்த மலையில் உட்கார்ந்திருந்ததால் இதற்கு இந்தப் பெயர் வந்தது.

அல்மர்வா என்பதும் மக்காவிற்கு அருகிலுள்ள மற்றொரு மலையாகும். இங்கு ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மனைவி ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்கள் வீற்றிருந்ததால் இந்தப் பெயர் வந்தது. **இம்ரஅத்** என்ற சொல்லிலிருந்து மர்வா என்ற சொல் பிறந்தது. இம்ரஅத் என்பதற்கு பெண், மனைவி என்பன பொருள்கள்.

ரிவாயத்து:- ஸஃபா மலையில் ஆண் பிள்ளையின் வடிவத்தில் ஒரு விக்கிரகம் இருந்தது. அவ்விக்கிரகத்திற்கு **அஸாஃப்** என்று பெயர். மர்வா மலையில் பெண்ணின் உருவத்தில் ஒரு விக்கிரகம் இருந்தது. அதற்கு **நாயிலா** என்று பெயர்.

இவர்களிருவரும் உண்மையாகவே ஆணும் பெண்ணுமாக இருந்தார்கள் என்றும், இவ்விருவரும் கஃபத்துல்லாவில் விபச்சாரம் செய்ததால் கல்லாகச் சமைக்கப்பட்டு இம்மலையில் ஜனங்களுக்குப் படிப்பினையாக இருப்பதற்காக வைக்கப்பட்டார்கள் என்றும், நாட்செல்லச் செல்ல ஜனங்கள் இவ்விரு கற்களையும் வணங்க ஆரம்பித்து விட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வருவதற்கு முந்தியுள்ள (ஜாஹிலிய்யத்தான) அறியாமைக் காலத்தில் ஜனங்கள் ஸஃபா மர்வா மலைகளுக்கிடையில் ஸயீ என்னும் தொங்கோட்டம் ஓடுவார்கள். அப்பொழுது இவ்விரு விக்கிரகங்களுக்கும் மரியாதை செய்யும் பொருட்டு இவ்விரண்டையும் அவர்கள் தொடுவது வழக்கம். பின்னர், இஸ்லாம் தோன்றவே அவ்விரு விக்கிரகங்களும் உடைக்கப்பட்டன. ஆதலால், முஸ்லிம்கள் இவ்விரு மலைகளுக்கு மிடையில் தவாஃபு செய்து தொங்கோட்டம் ஓடுவது (ஜாஹிலிய்யத்தான) அஞ்ஞான காலத்தின் வழக்கம் என்று நினைத்து அப்படிச் செய்வதை வெறுத்தார்கள். ஆகவே, அல்லாஹு தஆலா முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தத் தப்பெண்ணத்தை அகற்றி அவ்விரண்டிற்கு மிடையில் தவாஃபு செய்து தொங்கோட்டம் ஓடுவது குற்றமில்லை என்று இந்த ஆயத்தில் அறிவித்திருக்கிறான்.

இவ்விரண்டுக்கு மிடையில் தவாஃபு செய்து தொங்கோட்டம் ஓடுவதை இஸ்லாம் மார்க்கத்தில் ஏற்படுத்தியதற்குக் காரணம். ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி தமது மனைவி ஹாஜராவையும், புதல்வர் ஹளரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் கொண்டு வந்து இந்த வனத்தில் விட்டுச் சென்ற பின் இவ்விருவருக்கும் தாகம் உண்டாயிற்று. அப்பொழுது ஹாஜரா அவர்கள் தண்ணீர் இருக்கிறதா என்று

பார்ப்பதற்காக இவ்விரு மலைகளுக்கு மிடையில் ஓடினார்கள். பிறகு அல்லாஹுதஆலாவிடம் தண்ணீருக்காகத் துஆ கேட்டார்கள். அல்லாஹுதஆலா அந்த துஆவை ஒப்புக் கொண்டு ஜம் ஜம் கிணற்றை உண்டாகும்படி செய்தான். ஆகவே, அந்த நினைவாக அந்த ஓட்டத்தை முஸ்லிம்களுக்கு இறைவன் வணக்கமாக ஏற்படுத்தி விட்டான் என்று ஒரு ஹிக்காயத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

கபர்:- “ஸஃபாவும் மர்வாவும் சுவர்க்கத்திலுள்ள இரண்டு தலைவாசல்கள். துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும் இடங்களில் இவைகளும் சேர்ந்தவைகள். இவ்விரு மலைகளுக்கு மிடையில் எழுபதாயிரம் நபிமார்களின் கப்ருகளிருக்கின்றன. இவ்விரு மலைகளுக்கு மிடையில் தவாஃபு செய்து ஸயீ எனும் தொங்கோட்டம் ஓடுவது எழுபது அடிமைகளை விடுதலை செய்வதற்குச் சமமான நன்மை உள்ளது”.

ஹஜ்ஜு என்பதற்கு நாடுதல் என்பதும், உம்ரா என்பதற்கு ஜியாரத்துச் செய்தல் (தரிசித்தல்) என்பதும் பதவுரையாகும். ஆகவே, ஹஜ்ஜு உம்ரா ஆகியவற்றில் இவ்விரு காரியங்களும் வணக்கங்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தவாஃபு என்பதற்கு சுற்றிவருதல், வலம் வருதல் என்பது பதவுரை. ஆனால், ஸஃபா மர்வாவுக்கிடையில் செல்வதற்கும் தவாஃபு செய்தல் என்பதாக மார்க்கத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நிர்ப்பந்த மில்லாமல் மனப்பூர்வமாகத் தானாகச் செய்யும் காரியத்திற்கு **தத்தௌஉ** என்று ஆதியில் பெயர் இருந்தது. தன் மீது கடமையாகவுள்ள காரியத்தைச் செய்து விட்டு, அதில் அதிகமாகச் செய்வதற்கும் இப்பொழுதும் **தத்தௌஉ** என்று சொல்லப்படுகிறது.

ஷாக்கிர் என்பதற்கு நன்றியறிதல், நன்றி செலுத்துதல் என்பது பதவுரையாக இருந்தாலும் அல்லாஹு தஆலாவைக் குறித்து இந்தப் பதத்தைக் கூறுமிடத்தில் அவன் அடியார்களின் அமல்களென்னும் நற்கிரியைகளுக்குத் தக்கவாறு கூலி கொடுப்பவன் என்று பொருள் கொடுப்பதே ஏற்ற பொருளாகும்.

அல்லாஹு தஆலாவிடமிருந்து ஷுக்ரு உண்டாகுதல் என்பதற்கு அடியாரைப் பொருந்திக் கொள்ளுதல் என்பது கருத்தாகும். பொருத்தம் திருப்தி ஆகியவைகள் ஏற்பட்டதன் பலனாக கூலி கொடுத்தல் என்பது ஏற்படுகிறது. ஆகவே, ஷாக்கிர் என்ற பதத்திற்கு கூலி கொடுப்பவன் என்று பொருள் செய்வது மஜாஸியான (மாற்று அர்த்தம் என்பது) பொருளாகும் என்பதாகப் பல கிரந்தங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

إِنَّ الَّذِينَ يَكْتُمُونَ مَا أَنْزَلْنَا مِنَ الْبَيِّنَاتِ وَالْهُدَىٰ مِنْ بَعْدِ مَا بَيَّنَّاهُ لِلنَّاسِ فِي الْكِتَابِ أُولَٰئِكَ يَلْعَنُهُمُ اللَّهُ وَيَلْعَنُهُمُ اللَّاعِنُونَ ۝

159. நிச்சயமாக நாம் இறக்கிய (தெளிவான) அத்தாட்சிகளிலும் நேர்வழியிலுமிருந்து ஜனங்களுக்காக நாம் வேதத்தில் விபரித்த பின்னரும் மறைக்கிறார்களோ – அவர்களாகிறவர்கள் – அவர்களை அல்லாஹ்வும் சபிக்கிறான் இன்னும் சபிக்கிறவர்களும் அவர்களைச் சபிக்கிறார்கள்.

இந்த ஆயத்து யூதர்களின் தலைவர்கள், அவர்களிலுள்ள பாதிரிகள் ஆகியவர்களைக் குறித்து அருளப்பட்டாலும் மார்க்கக் கட்டளைகளை மறைக்கிற எவருக்கும் பொதுவானதாகும்.

அல்கத்தும் என்பது ஒரு காரியத்தை வெளிப்படுத்திக் கூறுவது அவசியமாக இருக்கும்போது அதனை வெளியிடாமலிருப்பது. ஆகவே, ஒரு காரியத்தை மறைப்பதும், ஒன்றை நீக்கிவிட்டு அதனுடைய இடத்தில் மற்றொன்றை வைப்பதும் இவ்வகையைச் சேர்ந்ததே யாகும்.

அல்பையினாத்து அதாவது (தெளிவான) அத்தாட்சிகள் என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிய வர்ணனைகள், கிப்லாவை மாற்றும் விஷயங்கள், ஹலால் ஹராம் சம்பந்தமானவைகள் முதலியவற்றைக் குறிக்கும்.

அல்ஹுதா அதாவது நேர்வழி என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விசுவாசித்துப் பின்பற்றுவது அவசியம் என்பதையும், அவனுடைய குன்ஹுவின்பால் வழி காட்டும் வசனங்கள் முதலியவற்றையும் குறிக்கும்.

சபிப்பவர்கள் என்பதில் பிராணிகளும் புழுப்பூச்சிகளும் சேர்ந்திருக்கின்றன. “இறைவா! ஆதமுடைய மக்களில் பாவிகளை நீ சபிப்பாயாக அவர்களது கெட்ட காரியத்தின் பலனாகத்தான் எங்களுக்கு மழை இறங்கவில்லை” என்பதாக அவைகள் கூறும் என்றும் சொல்லப்படுகிறது.

ரிவாயத்து:- ஒருவர் மற்றொருவரைச் சபித்துக் கொண்டால் இவ்விருவரில் எவர் அந்தச் சபித்தலுக்கு அருகதையாக இருக்கிறாரோ அவரை அது சேரும். இருவரும் அதற்குத் தகுதியில்லாதிருந்தால் அந்தச் சாபம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வர்ணனைகளை மறைத்த யூதர்களிடம் போய்ச் சேரும் என்பதாக இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

إِلَّا الَّذِينَ تَابُوا وَأَصْلَحُوا وَبَيَّنُوا فَأُولَٰئِكَ أَتُوبُ عَلَيْهِمْ ۚ وَأَنَا التَّوَّابُ الرَّحِيمُ ۝

160. (ஆனால் மறைக்கிறதை விட்டுத்) தவ்பாச் செய்து (தாங்கள் செய்த தீமைகளைத்) திருத்திக்கொண்டு, (தாங்கள் மறைத்தவைகளை மனிதருக்கு) விபரித்தார்களே அவர்களைத் தவிர – அத்தகையோர் – அவர்களுக்கு நான் பாவமன்னிப்புச் செய்வேன். இன்னும் நான் பாவங்களை மிகவும் மன்னிப்பவன் கிருபை செய்பவன்.

தவ்பாச் செய்தபின் தங்களது பாவச் செய்கையை விட்டு விலகிக் கொள்வது அவசியமென்பதும், தனக்கு அவசியமில்லாத

காரியங்களைத் தவிர்த்துக் கொள்வதுடன் தனக்கு அவசியமானதைச் செய்யவும் வேண்டும் என்பது இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது.

إِنَّ الَّذِينَ كَفَرُوا وَمَاتُوا وَهُمْ كُفَّارٌ أُولَٰئِكَ عَلَيْهِمْ لَعْنَةُ اللَّهِ وَالْمَلَائِكَةِ وَالنَّاسِ أَجْمَعِينَ

161. நிச்சயமாக எவர்கள் நிராகரிப்பவராகி - அவர்கள் நிராகரிப்பவராக இருக்கும் போது மரணமடைகின்றார்களே - அவர்கள் - அவர்கள் மீது அல்லாஹ்வுடையவும் மலக்குகளுடையவும் மனிதர்களுடையவும் எல்லோருடையவும் சாபமும் உண்டாகி இருக்கிறது.

மனிதர்கள் என்பதற்கு மூமின் என்பதாகச் சொல்லப்படுகிறது. ஏனெனில், இவர்கள்தான் மனிதத்தத்துவத்தைக் கொண்டு பிரயோஜனம் பெறுகிறவர்களாக இருப்பதால், யதார்த்தத்தில் மனிதர்களாக இருக்கிறார்கள். நிராகரிப்பாளர்கள் வெளிக்கு மனித உருவத்திலிருந்தாலும் அந்தரங்கத்தில் மிருகங்களைப் போலவே இருக்கிறார்கள். ஆதலின் அல்லாஹூ தஆலாவிடத்தில் அவர்கள் மனிதர்களின் கணக்கில் சேர்ந்தவர்களல்ல.

இதற்கு மற்றொரு விதமாகவும் கருத்துச் சொல்லப்படுகிறது. அதாவது மனிதர்கள் என்பது பொது மக்கள் அனைவரையும் பொதுவாகக் குறிக்கும். ஏனெனில், கியாமத்து நாளில் நிராகரிப்பாளர்கள் ஒருவரை ஒருவர் சபித்துக் கொள்வார்கள்.

خَالِدِينَ فِيهَا ۖ لَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْظَرُونَ

162. அந்த நிராகரிப்பாளர்கள் அந்த சாபத்தில் அல்லது நரகத்) தில் எந்நாளும் இருப்பார்கள், அவர்களை விட்டு (ஒரு கணப்பொழுதேனும்) வேதனை இலேசாக்கப்படமாட்டாது. இன்னும் அவர்கள் தவணை கொடுக்கப்படவும் மாட்டார்கள்.

நிராகரிப்பாளர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் விக்கிரகத்தை வணங்கியதால் அவர்களுக்கு வேதனையை நிரந்தரமாக்கப்பட்டது. இன்னும் நிராகரிப்பாளர்கள் அல்லாஹூ தஆலாவின் விஷயத்தில் தவறான கொள்கைகள் உள்ளவர்களாக இருந்ததால் அவர்களுக்குச் சுவர்க்கம் ஹராமாக்கப்பட்டதுடன் நரகமும் நிரந்தரமாக்கப்பட்டது.

وَإِلَٰهُكُمْ إِلَٰهٌ وَاحِدٌ ۖ لَا إِلَٰهَ إِلَّا هُوَ الرَّحْمَٰنُ الرَّحِيمُ

163. இன்னும் உங்கள் (வணக்கத்திற்குரிய) நாயன் ஒரே ஒரு நாயனாகும். அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் (வேறுயாரும்) இல்லை. (அவன்) இம்மையில் அனைவருக்கும் கருணை புரிபவன். (மறுமையில் ஈமான் உள்ளவர்களுக்கு மட்டும்) அருள் பாலிப்பவன்.

குறைஷி நிராகரிப்பாளர்கள் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி உமது இறைவன் எப்படி இருப்பான்? அவனது வம்சம் என்ன வென்று கேட்டார்கள். அதற்கு இறைவன் இந்த ஆயத்தை இறக்கினான்.

இந்த ஆயத்து ஜனங்கள் அனைவரையும் குறித்துச் சொல்லப்பட்ட கட்டளையாகும். இதில் அவ்வல்லோன் ஒருவனே வணக்கத்துக்குரியவன் என்பது வற்புறுத்தப்பட்டிருப்பதுடன் அதற்குரிய காரணமும் கூறப்பட்டிருக்கிறது. அதாவது ரஹ்மான், (இம்மையில் அனைவருக்கும் கருணை புரிபவன்) ரஹீம் (மறுமையில் ஈமான் உள்ளவர்களுக்கு மட்டும் அருள் பாலிப்பவன்) என்ற இரண்டு தன்மைப் பெயர்களும் அவனுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே இவ்வுலகில் இருக்கிற சகலமும் அவனது அருட்கொடையாக அல்லது அவனது அருட்கொடையை அடைவனவாக இருக்கின்றனவே யன்றி இவ்விரண்டிற்கும் புறம்பானதாக இல்லை. எனவே, மற்றவைகள் வணக்கத்திற்குரியனவாகா.

நிற்க, இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட **ஹுவ** என்ற பதம் பெயருக்குப் பிரதிச் சொல்லாக இருப்பதால் அது அல்லாஹு தஆலாவுடைய திருப்பெயராகக் கணிக்கப்படுமா? அல்லவா? என்ற விஷயத்தைப் பற்றி **தஃப்ஸீருல் கபீரில்** விவாதிக்கப்பட்டு அது அவனது திருப்பெயர்தான் என்பதை அதன் ஆசிரியர் ஊர்ஜிதம் செய்திருக்கிறார். பெயர்ச் சொற்கள் இரண்டு வகைப்படும். அவை பகிரங்கமான சொல்லாகவும், அந்த பகிரங்கமான சொல்களுக்குப் பிரதிச் சொல்லாகவும் இருக்கின்றன. **ஹுவ** என்ற சொல் பெயருக்குப் பிரதிச் சொல்லாக இருப்பது அது பெயர்ச்சொல்லாக இருப்பதற்கு முரணாக இல்லை என்று அவர் விவாதித்திருக்கிறார்.

தவிரவும், அஹ்லே ஹகீகத்தான மெஞ்ஞானிகளும் **ஹுவ** என்ற இந்தச் சொல் அவனது திருப்பெயர்களில் ஒன்றென ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹு தஆலாவின் அஹதியத்தை அறிவிக்கும் எந்தச் சொல்லும் அது பகிரங்கமான சொல்லாக இருந்தாலும் சரி அல்லது பிரதிச் சொல்லாக இருந்தாலும் சரி அவனது திருப்பெயரேயாகும் என்பது அம்மெஞ்ஞானிகளின் கருத்தாகும்.

ரிவாயத்து:- இந்த ஆயத்திலும் **அல்லாஹ் அவனைத் தவிர (வணக்கத்துக்குரிய) இறைவன் (வேறுயாரும்) இல்லை. (அவன்) ஹயாத்தானவன், நிலை நிறுத்துபவன்** (ஆயத்துல் குர்ஸி) என்ற ஆயத்திலும் அல்லாஹு தஆலாவுடைய இஸ்முல் அஃலம் இருக்கிறது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன் என்பதாக அஸ்மா பின்து யஜீத் ரலியல்லாஹு தஆலா அன்ஹா என்ற நங்கை கூறி இருக்கிறார்.

إِنَّ فِي خَلْقِ السَّمٰوٰتِ وَالْأَرْضِ وَاخْتِلَافِ
اللَّيْلِ وَالنَّهَارِ وَالْفُلْكِ الَّتِي تَجْرِي فِي الْبَحْرِ
بِمَا يَنْفَعُ النَّاسَ وَمَا أَنْزَلَ اللّٰهُ مِنَ السَّمَاءِ مِنْ
مَاءٍ فَأَحْيَا بِهِ الْأَرْضَ بَعْدَ مَوْتِهَا وَبَثَّ فِيهَا مِنْ

كُلِّ دَابَّةٍ وَتَصْرِيفِ الرِّيٰحِ وَالسَّحَابِ الْمُسَخَّرِ
بَيْنَ السَّمَاءِ وَالْأَرْضِ لَآيٰتٍ لِقَوْمٍ يَعْقِلُونَ ۝

164. நிச்சயமாக வானங்களையும் பூமியையும் படைத்ததிலும், இரவும் பகலும் (மாறி) மாறி வருவதிலும், மனிதருக்குப் பிரயோஜனமான (வியாபாரச்சரக்கு முதலான) தை (ஏற்றிக்) கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும், அல்லாஹ் வானத்திலிருந்து தண்ணீரை இறக்கி, அப்பால் பூமியை அது (உலர்ந்து புற்பூண்டுகளில்லாமல்) இறந்த பின்னர் (அந்த தண்ணீரைக்) கொண்டு புற்பூண்டுகள் உற்பத்தியாகும் படி செய்து பூமியை உயிர்ப்பித்து, அதில் சகல (விதமான) ஊர்வனங்களை(ப் பல திசைகளிலும்) பரவச் செய்ததிலும், காற்றுகளை (வலம் இடம் ஆக) த் திருப்புவதிலும், வானத்திற்கும் பூமிக்குமிடையில் (ஓடித் திரியும்படியாக) கட்டுப்படுத்தப்பட்ட மேகத்திலும் (சிந்தித்து) உணரும் கூட்டத்தினருக்கு (இறைவன் ஒருவன்தான் என்பதற்குரிய) அத்தாட்சிகள் (பல) இருக்கின்றன.

ரிவாயத்து:- முற்காலத்தில் இணைவைப்பாளர்கள் மக்காவிலுள்ள கஃபத்துல்லாவைச் சுற்றிலும் முன்னூற்று அறுபது விக்கிரகங்களை வைத்திருந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரே ஒரு இறைவன்தான் என்று ஓர் இறைக் கொள்கையைப் போதித்த போது நிராகரிப்பாளர்கள் மிகவும் ஆச்சரியமடைந்து "ஜனங்களுக்கு ஒரே ஒரு இறைவன் எப்படிப் போதுமானதாகும்? ஒரே ஒரு இறைவன்தான் உளன் என்பதாக முஹம்மது கூறுகிற அவருடைய தாவாவில் அவர் உண்மையாளராக இருப்பாராயின் அவர் இவ்விஷயத்தில் உண்மை கூறுகிறவர் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ளத்தக்க ஆதாரத்தை அவர் எங்களுக்குக் காண்பிக்கட்டும்" என்பதாகக் கூறினார்கள். அப்பொழுது அல்லாஹு தஆலா இந்த ஆயத்தை அருளினான்.

வானங்கள் எல்லாம் ஒரே இனமாக இல்லாமலும் ஒரு வானத்திற்கும் மற்றொரு வானத்திற்கு மிடையில் ஐனூறு வருடத் தொலைதூரம் இருப்பதினாலும் அல்லது ஒவ்வொரு வானமும் மற்றைய வானங்களுக்கு வேறானதாக இருப்பதினாலும் பூமிகள் அனைத்தும் ஒரே இனமாக அதாவது மண்ணாக இருப்பதினால் வானங்கள் என்று வானத்தை மட்டும் பன்மையாகவும் பூமி என்று பூமியை ஒருமையாகவும் இறைவன் கூறியிருக்கிறான்.

இரவும் பகலும் மாறி (மாறி) வருவதென்பது இரவு சென்றவுடன் அதனைத் தொடர்ந்து பகல் வருகிறது. இதுபோல பகல் கழிந்தவுடன் அதனைத் தொடர்ந்து இரவு வருகிறது. தவிரவும், பகல் இரவு கூடுதலாகவும் குறைவாகவும் இருக்கிறது.

“காற்றுகளினால்தான் உலகத்திற்கு பல நன்மைகள் இருக்கின்றன. காற்றும் ஈயும் இல்லாவிட்டால் உலகம் நாற்றமெடுத்து விடும்” என்று வக்கீஹ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள். “நோய்களைக் குணப்படுத்துவதற்காகவே காற்றுகள் வீசுகின்றன” என்பதாக ஷுறைஹுல் காழீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

அல்லாஹு தஆலா ஒருவன் என்பதை அறிவிப்பதற்கான ஆதாரங்கள் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருப்பதால் இந்த ஆயத்தை ஓதி இதிலுள்ள நுட்பமான விஷயங்களைக் கவனித்து அல்லாஹ் ஒருவன் என்பதை உணர்ந்து கொள்ளாமலிருப்பவர்களைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “இந்த ஆயத்தை ஓதி இதில் சிந்தனை செய்யாதிருப்பவர்களுக்கு வைல் என்னும் நரக ஓடை இருக்கிறது” என்பதாகக் கூறி இருக்கிறார்கள்.

وَمِنَ النَّاسِ مَنْ يَّتَّخِذُ مِنْ دُوْنِ اللّٰهِ اَنْدَادًا
يُّحِبُّوْنَهُمْ كَحُبِّ اللّٰهِ ؕ وَالَّذِيْنَ اٰمَنُوْٓا اَشَدُّ حُبًّا لِّلّٰهِ ؕ
وَلَوْ يَرَى الَّذِيْنَ ظَلَمُوْٓا اِذْ يَرَوْنَ الْعَذَابَ ۙ اَنَّ الْقُوَّةَ

لِلّٰهِ جَمِيْعًا ۙ وَّاَنَّ اللّٰهَ شَدِيْدُ الْعَذَابِ ﴿١٦٥﴾

165. இன்னும், மனிதர்களிற் சிலர் அல்லாஹ்வைத் தவிர விக்கிரகங்களைத் தெய்வங்களாக) எடுத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வை நேசிப்பதேபோல் நேசிப்பவர்களுமுண்டு. ஆனால், விசுவாசங் கொண்டவர்களோ அல்லாஹ்வை நேசிப்பதில் மிகக் கடுமையாக இருக்கிறார்கள். இன்னும், (நபியே) அநியாயஞ் செய்தவர்கள் (மறுமையில் நரக) வேதனையைப் பார்க்கும் பொழுது அவர்களைப் பார்த்தால், நிச்சயமாக சக்தி யாவும் அல்லாஹ்வுக்கே உரியன (என்றும்), இன்னும் நிச்சயமாக அல்லாஹ் வேதனை செய்வதில் மிகக் கடினமானவன் (என்றும் கண்டுகொள்வார்கள்).

ரிவாயத்து:- கியாமத்து நாளில் அல்லாஹு தஆலா நிராகரிப்பாளர்களை நோக்கி “நீங்கள் உங்கள் விக்கிரங்களுடன் நரகத்தில் நுழையுங்கள்” என்று சொல்வான். அவர்கள் நரகத்தில் நுழையமாட்டார்கள். அப்பொழுது மூமின்களைப் பார்த்து “நீங்கள் என்னை நேசித்திருப்பீர்களாயின் இந்த நரகத்தில் நுழையுங்கள்” என்று கூறுவான். அப்பொழுது மூமின்கள் ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு நரகத்தை நோக்கிச் செல்வார்கள். அப்பொழுது ஈமான் கொண்டவர்கள் அல்லாஹு தஆலாவை நேசிப்பதில் மிகக் கடுமையானவர்கள் என்று அர்ஷின் கீழிலிருந்து ஒரு சப்தம் உண்டாகும்.

اِذْ تَبَرَّاَ الَّذِيْنَ اتُّبِعُوْا مِنَ الَّذِيْنَ اتَّبَعُوْا وَرَاَوُا الْعَذَابَ
وَتَقَطَّعَتْ بِهِمُ الْاَسْبَابُ ﴿١٦٦﴾

166. அந்நேரத்திலே, அவர்கள் வேதனையைப் பார்க்கையில் பின்பற்றியவர்களை விட்டுப் பின்பற்றப் பட்டவர்கள் (தலைவர்கள்) நீங்கி விடுவார்கள். இன்னும் (அவர்களுக்குள் உள்ள நேசத்துக்குரிய) உறவுகள் அறுபட்டுப்போகும்.

وَقَالَ الَّذِينَ اتَّبَعُوا لَوْ أَنَّ لَنَا كَرَّةً فَنَتَبَرَّأَ
مِنْهُمْ كَمَا تَبَرَّءُوا مِنَّا ۗ كَذَٰلِكَ يُرِيهِمُ اللَّهُ أَعْمَالَهُمْ
حَسَرَاتٍ عَلَيْهِمْ ۖ وَمَا هُمْ بِخَارِجِينَ مِنَ النَّارِ ۝

167. மேலும், எங்களுக்கு (உலகிற்குச் செல்ல) ஒரு மீட்சி கிடைக்குமானால் (இன்று) அவர்கள் எங்களைவிட்டுப் பிரிந்ததுபோல் நாங்களும் அவர்களை விட்டுப் பிரிந்திடுவோம் என்று பின்பற்றியவர்கள் கூறுவார்கள். இவ்விதமாகவே அல்லாஹ் அவர்களுக்கு அவர்களின் (பாவச்) செயல்களை கைசேதத்திற்கு உரியவைகளாகக் காண்பிப்பான். ஆனால், அவர்களோ நரகத்தை விட்டு வெளியேறுபவர்களல்லர்.

இவ்விரண்டு ஆயத்துகளிலும் நிராகரிப்பாளர்களது நிலைமை கியாமத்து நாளில் எப்படி இருக்கும் என்பது விளக்கப்பட்டிருக்கிறது. தவிரவும், அவர்கள் தங்களது கிரியைகளான விக்கிரக ஆராதனை, மாறுபாடான செய்கை முதலியவைகள் தங்களுக்கு துக்கத்தையும் வருத்தத்தையும் கொடுப்பனவாகக் காட்டப்படும் போது, சுவர்க்கத்தில் அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த மாளிகைகள் அவர்களுக்குக் காட்டப்படும் என்றும், சுவர்க்கத்தையும் அதில் தங்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட மாளிகைகளையும் அவர்கள் பார்ப்பார்கள் என்றும், அப்பொழுது அவர்களை நோக்கி "நீங்கள் அல்லாஹு தஆலாவுக்கு கீழ்ப்படிந்திருந்தால் இந்த மாளிகைக்குள் உங்களுக்கு அளிக்கப் பட்டிருக்கும்" என்று கூறப்பட்டு அவைகள் மூமின்களுக் கிடையில் பகிர்ந்து கொடுக்கப்படும் என்றும் ஸதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

يَا أَيُّهَا النَّاسُ كُلُوا مِمَّا فِي الْأَرْضِ حَلَالًا طَيِّبًا
وَلَا تَتَّبِعُوا خُطُوَاتِ الشَّيْطَانِ ۚ إِنَّهُ لَكُمْ

عَدُوٌّ مُبِينٌ ۝

168. மனிதர்களே! பூமியில் உள்ளவற்றிலிருந்து (அதாவது உணவாக) அனுமதிக்கப்பட்டதை (இன்னும்) பரிசுத்தமானதைப் புசியுங்கள். ஆனால் ஷைத்தானுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்க விரோதியாவான்.

குத்துவாத்து என்பதற்கு காலடியின் அடையாளங்கள் என்பது பொருள். முதலில் சென்ற ஒருவரின் காலடியின் அடையாளத்தைப் பார்த்து அதன்படி செல்பவருக்கு காலடிகளைப் பின்பற்றினார் என்று சொல்லுவதுண்டு.

إِنَّمَا يَأْمُرُكُمْ بِالسُّوءِ وَالْفَحْشَاءِ وَأَنْ تَقُولُوا
عَلَى اللَّهِ مَا لَا تَعْلَمُونَ ۝

169. பாவத்தைக் கொண்டும், மானக்கேட்டைக் கொண்டும், இன்னும் நீங்கள் அறிந்து கொள்ளாததை அல்லாஹ்வைப் பற்றி நீங்கள் கூறும்படியாகவுமேதான் உங்களை ஷைத்தான் ஏவுகிறான்.

அந்திய காலத்தில் கெடுதல் செய்யக்கூடிய சகல காரியங் களுக்கும் **அஸ்ஸூஉ** அதாவது கெடுதி என்று சொல்லப்படுகிறது. இவை அவயவங்களின் மூலமாகவும், இருதயங்கள் மூலமாகவும் செய்யப்படும் காரியங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவானவைகளாகும். பாவங்களிலும் தீமைகளிலும் மிகவும் கேவலமானவற்றிற்கு **அல்ஃபஹ்ஷாஉ** அதாவது மானக்கேடானவைகள் என்று சொல்லப் படுகிறது. எனவே, விபச்சாரம் கஞ்சத்தனம் முதலிய கேவலமான வைகளெல்லாம் மானக் கேடானவைகளேயாகும்.

وَإِذَا قِيلَ لَهُمُ اتَّبِعُوا مَا أَنْزَلَ اللَّهُ قَالُوا بَلْ

نَتَّبِعُ مَآ أَلْفَيْنَا عَلَيْهِ آبَآءَنَا ۗ أَوَلَوْ كَانَ آبَآؤُهُمْ
لَا يَعْقِلُونَ شَيْـًٔا وَلَا يَهْتَدُونَ ﴿١٧٠﴾

170. இன்னும், அல்லாஹ் இறக்கிய (நேரான மார்க்கத்)தை நீங்கள் பின்பற்றுங்கள் என்று (இணைவைப்பவர்களாகிய) அவர்களுக்குக் கூறப்பெற்றால்,(அதற்கு அவர்கள்) “ஆம்! நாங்கள் எங்கள் மூதாதையர்களை எதன் மீது பார்த்தோமோ அந்த விக்கிரக வணக்கத்)தையே நாங்கள் பின்பற்றுவோம்” என்று கூறுகிறார்கள், அவர்களுடைய மூதாதையர்கள் எதையும் உணராதவர்களாகவும் நேர்வழி பெறாதவர்களுமாக இருந்தாலுமா? (அவர்களை அவர்கள் பின்பற்றுவார்கள்).

இந்த ஆயத்து அறபி நாட்டிலுள்ள முஷ்ரிக்குகளையும் குறைஷியரிலுள்ள நிராகரிப்பாளர்களையும் குறித்து அருளப்பட்டது. அல்லாஹு தஆலாவினால் அருளப்பட்ட சகலத்தையும் விசுவாசிக்க வேண்டுமென்று இவ்வசனம் அவர்களுக்குக் கட்டளையிட்டு இருப்பதுடன், அவர்கள் கண் மூடித் தனமாகத் தங்கள் மூதாதை யரைப் பின்பற்றுகின்றனர் என்பதையும் விளக்கிக் கூறி இருக்கின்றது.

وَمَثَلُ الَّذِينَ كَفَرُوا كَمَثَلِ الَّذِي يَنْعِقُ بِمَا
لَا يَسْمَعُ إِلَّا دُعَآءً وَنِدَآءً ۚ صُمٌّ بُكْمٌ عُمْيٌ فَهُمْ
لَا يَعْقِلُونَ ﴿١٧١﴾

171. நிராகரிப்பாளர்களுக்கும் அவர்களை நேர்வழியில் அழைப்பவர்களுக்கும்) உதாரணம், கூப்பாட்டையும் கூச்சலிடுவதையும் தவிர (வேறு ஒன்றையும்) கேட்க முடியாததற்கு (அதாவது மனிதரின் பேச்சுகளை உணர்ந்து கொள்ளாத மிருகங்களுக்கு)ச் சப்தமி(ட்டு அழைப்) பவரைப் போன்றதாகும். (அந்நிராகரிப்போர்)

செவிடர்களாகவும் ஊமையர்களாகவும் குருடர்களாகவும் இருக்கின்றனர். எனவே அவர்கள் உணரமாட்டார்கள்.

நிதாஉன் என்பதும் **துஆஉன்** என்பதும் ஒரே பொருளுள்ள இரண்டு சொற்களாகும். ஆனால், சமீபத்திலிருப்பதை அழைப்பதற்கு **துஆஉன்** என்றும், தூரத்திலுள்ளதை அழைப்பதற்கு **நிதாஉன்** என்றும் சொல்லப்படுகிறது. தவிரவும், துஆஉன் என்பது நிதாஉன் என்பதைப் பார்க்கினும் விரிந்த பொருள் உள்ளதாகவும் கொள்ள இடமிருக்கிறது.

இந்த ஆயத்தில் நிராகரிப்பாளர்களை அழைப்பவரைச் சப்தமிடுபவர்களுக்கும், நிராகரிப்பாளர்களைச் சப்த மிட்டு அழைக்கப்படுகிற மிருகங்களுக்கும், ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது.

يَٰٓأَيُّهَا الَّذِينَ آمَنُوا كُلُوا مِن طَيِّبَٰتِ مَا رَزَقْنَٰكُمْ
وَاشْكُرُوا لِلَّهِ إِن كُنتُمْ إِيَّاهُ تَعْبُدُونَ ﴿١٧٢﴾

172. விசுவாசங் கொண்டவர்களே! உங்களுக்கு நாம் அளித்த பரிசுத்தமான(ஹலாலான) வற்றிலிருந்து புசியுங்கள். இன்னும், (உங்களுக்கு உணவளிக்கும்) அவனையே நீங்கள் வணங்குபவர்களாக இருப்பீர்களாயின் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள்.

தைய்யிபாத்து என்பதற்கு ஹலாலானவைகள் அதாவது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட(ஹலாலான)வைகள் என்பதாகவும், **நாம் அளித்த** என்ற வார்த்தைகளுக்குள் ஹலால், ஹராம் ஆகிய இரண்டு வகைகளும் அடங்கி இருக்கின்றன என்பதாகவும் அஹ்லு சுன்னத்துகள் கருதுகின்றனர். தைய்யிபாத்து என்ற வார்த்தைக்கு இன்பமானவைகள் என்பதாகவும் அர்த்தம் செய்துள்ளனர். இவ்விரண்டாவது அர்த்தம்தான் இந்த இடத்திற்கு மிகவும் பொருத்தமானது என்பதாக இப்னுஷ் ஷெய்கு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

அல்லாஹ்வை நீங்கள் வணங்குபவர்களாக இருந்தால் அவனுக்கு நீங்கள் நன்றி செலுத்துங்கள் என்ற வாக்கியம் அல்லாஹு தஆலாவுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற விஷயத்தைத் தூண்டுவதற்காகவே கூறப்பட்டது. அவனை வணங்குபவர்கள்தான் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். மற்றவர்கள் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டியதில்லை என்ற கருத்தில் இவ்வாக்கியம் அருளப்படவில்லை. ஆகவே, அவனை வணங்கினாலும் வணங்கா விட்டாலும் அவனுக்கு நன்றி செலுத்துவது அவசியமாகும்.

إِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ الْمَيْتَةَ وَالدَّمَ وَلَحْمَ الْخِنْزِيرِ وَمَا أُهِلَّ بِهِ لِغَيْرِ اللَّهِ ۖ فَمَنِ اضْطُرَّ غَيْرَ بَاغٍ وَلَا عَادٍ فَلَا إِثْمَ عَلَيْهِ ۚ إِنَّ اللَّهَ غَفُورٌ رَحِيمٌ

173. (உண்ணுவதற்கு) உங்களின் மீது (அல்லாஹ்வாகிய) அவன் தடை செய்திருப்பதெல்லாம் (தானாகச்) செத்ததையும், இரத்தத்தையும், பன்றியின் இறைச்சியையும், அல்லாஹ் அல்லாதவருக்காக (அறுப்புப் பிராணிகளில்) எதற்கு பெயர் கூறப்பட்டு விடப்பட்)டதோ அதையும்தான். எனவே, எவரேனும் ஒருவர் விருப்பமில்லாத நிலையிலும், வரம்பு மீறாத நிலையிலும் நிர்ப்பந்திக்கப்பட்டால் (இவற்றைப் புசிப்பது) அவர் மீது குற்றமில்லை. நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிக்கிறவன். மிகக் கிருபை உடையவன்.

இந்த ஆயத்தில் ஹராமாக்(கி விலக்)கப்பட்ட சகல பொருட்களையும் கூறவில்லை. ஹராமாக்கப்பட்டவற்றில் எந்தெந்த பொருட்களை அவர்கள் தவிர்த்துக் கொள்ளாமல் புசித்து வந்தார்களோ அந்த பொருட்கள் மட்டுமே கூறப்பட்டிருக்கின்றன. அக்காலத்தில் உள்ளவர்கள் நீங்கள் அறுத்ததை நாங்கள் புசிக்கிறோம். அல்லாஹு தஆலா மரணிக்கச் செய்ததை அதாவது தானாகச் செத்ததை நாங்கள் புசிக்கா திருப்பதா என்று கூறி தானாகச் செத்ததையும் புசித்து

வந்தார்கள். இதுபோலவே, இரத்தத்தையும், பன்றியின் மாமிசத்தையும், விக்கிரகங்களுக்காக அறுக்கப்பட்டதையும் போலிக் காரணத்தைக் கூறிக் கொண்டு புசித்து வந்தார்கள். இதனை மறுத்து இந்த ஆயத்தில் இறைவன் கூறி இருக்கிறான்.

பன்றியின் உடல் முழுவதும் அதாவது மயிர், பல், நகம், இறைச்சி, வியர்வை முதலிய எல்லாம் அசுத்தமானவை அப்படி இருக்க அவன் இறைச்சியைப் பற்றி மட்டும் இங்கு கூறி இருப்பது மற்றைய பொருட்கள் அதைப் பின்றொடர்ந்தவை என்பதனாலும் பன்றியில் இறைச்சிதான் பிரதானமானது என்பதனாலுமாகும்.

அறிந்துகொள்:- அல்லாஹு தஆலா இந்த ஆயத்தில் புறப்பொருள்களில் சிலவற்றைப் புசிப்பதை விலக்கி வைத்திருப்பது போல அகத்திலும் அல்லாஹு தஆலாவைத் தவிரவுள்ள மற்றவை களை அதாவது அல்லாஹு தஆலா அல்லாததை ஷுஹூது செய்வதையும் விலக்கி வைத்திருக்கிறான். ஆகவே செத்தது என்பதற்கு இவ்வுலகமாகிய பிணம், உதிரம் என்பதற்கு மன இச்சைகள் அதாவது ஷஹ்வாத்தே நஃப்ஸானிய்யா, பன்றியின் மாமிசம் என்பதற்கு மனதின் பேரவா, அல்லாஹுக்கு அல்லாமல் மற்றவைகளுக்காக அறுக்கப்பட்டது என்பதற்கு கலப்பற்ற இக்லாஸான நிய்யத்தில்லாமல் பிறர் மெச்சுவதற்காகவும் புகழ்வதற்காகவும் பொருள் சம்பந்தமான தானதர்மங்களைக் கொடுப்பதும் உடல் சம்பந்தமான வணக்கங்களும் என்பதாகச் சமிக்ஞை செய்யப்பட்டிருக்கிறது. மீறுகிறவனாக என்பதற்கு இவ்வுலகில் பேராசை கொள்ளலாகாது என்பதும் வரம்பை மீறாமல் என்பதில் உலகப் பொருள்களை தேவைக்கு அதிகமாக விரும்பக் கூடாது என்பதும் சமிக்ஞையாகும். இதில் சொல்லப்பட்ட ஷர்த்துகளின்படி பாவ மன்னிப்புக் கேட்டால் அல்லாஹு தஆலா பிழை பொறுப்பான் என்பதாக **தாவீலாத்துன்னஜ்மிய்யா** என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

إِنَّ الَّذِينَ يَكْتُمُونَ مَا أَنْزَلَ اللَّهُ مِنَ الْكِتَابِ وَيَشْتَرُونَ بِهِ ثَمَنًا قَلِيلًا ۙ أُولَٰئِكَ مَا يَأْكُلُونَ

فِى بُطُوْنِهِمْ اِلَّا النَّارَ وَلَا يُكَلِّمُهُمُ اللّٰهُ يَوْمَ الْقِيٰمَةِ وَلَا يُزَكِّيْهِمْ ۖۚ وَلَهُمْ عَذَابٌ اَلِيْمٌ

174. நிச்சயமாக எவர்கள் (தவ்ராத்) வேதத்தில் அல்லாஹ் இறக்கியதை மறைத்து அதை அற்பக்கிரயத்திற்கு விற்பனை செய்கிறார்களோ அவர்கள், தங்கள் வயிறுகளில் நெருப்பைத் தவிர (வேறொன்றையும்) புசிப்பதில்லை. மேலும் இறுதி (த்தீர்ப்பு) நாளில் அவர்களுடன் அல்லாஹ் பேசவும் மாட்டான். இன்னும், அவர்களைப் பரிசுத்தப் படுத்தவுமாட்டான். அவர்களுக்கு நோவினை செய்யக்கூடிய வேதனையுமுண்டு.

இந்த ஆயத்து யூதர்களில் படித்தவர்களாக இருந்த (அஹ்பார்)களைக் குறித்து அருளப்பட்டது. அவர்கள் யூதர்களில் தங்களுக்கிருந்த செல்வாக்கும் ஆதிக்கமும், வருமானமும் போய்விடும் என்று பயந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி தவ்ராத் வேதத்தில் கூறப்பட்டுள்ள வர்ணனைகளை மாற்றிக் கூறி வந்தார்கள். இதனைக் குறித்து இந்த ஆயத்தில் கண்டிக்கப் பட்டிருக்கிறது.

யூதர்களிலுள்ள படித்தவ (அஹ்பார்)ர்கள் பாமர மக்களிடம் ஏமாற்றி, வாங்கும் பணம் அவர்களை நரகத்திற் போடுவதற்குக் காரணமாக இருப்பதால், அவர்கள் நெருப்பைத்தான் புசிக்கிறார்கள் என்று இந்த இடத்தில் கூறப்பட்டது. இவ்விதமாகக் கூறுவது அறபி இலக்கியத்திலும் வழக்கமாகும்.

اُولٰٓئِكَ الَّذِيْنَ اشْتَرَوُا الضَّلٰلَةَ بِالْهُدٰى وَالْعَذَابَ بِالْمَغْفِرَةِ ۚ فَمَآ اَصْبَرَهُمْ عَلَى النَّارِ

175. இவர்கள்தாம். நேர்வழிக்குப் பதிலாக வழிகேட்டையும் பாவ மன்னிப்புக்குப் பதிலாக (நரக) வேதனையையும் விலைக்கு

வாங்கிக் கொண்டவர்கள். எனவே, அவர்களை (நரக) நெருப்பில் பொறுமையாக இருக்கும்படி செய்தது எது?

அவர்கள் நேர்வழியை விட்டு விட்டு வழிகேடான காரியங்களைச் செய்து வந்ததால் அவர்களைக் குறித்து, “நரகத்தில் அவர்களைப் பொறுமையாக இருக்கும்படி செய்தது எது?” என்பதாகச் சொல்லப்பட்டது. இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட நரகம் என்பதற்கு நரகத்திற் சேருவதற்குக் காரணமாகவுள்ள செயல்கள் என்பதாகும்.

ذٰلِكَ بِاَنَّ اللّٰهَ نَزَّلَ الْكِتٰبَ بِالْحَقِّ ؕ وَاِنَّ الَّذِيْنَ اخْتَلَفُوْا فِى الْكِتٰبِ لَفِىْ شِقَاقٍۢ بَعِيْدٍ

176. இது, நிச்சயமாக அல்லாஹ் சத்தியத்தைக் கொண்டு இவ்வேதத்தை இறக்கி வைத்து அதில் அவர்கள் சிலதை ஒப்புக் கொண்டு சிலதை மறைத்ததனாலேயாகும். இன்னும் நிச்சயமாக எவர்கள் வேதத்தில் (சிலதை ஒப்புக் கொண்டு சிலதில்) மாறுபட்டிருக்கின்றனரோ அவர்கள் (சத்தியத்தை விட்டு) வெகுதூரமான பிளவிலேயே இருக்கின்றனர்.

அறிந்துகொள்:- உலக சம்பந்தமான ஒரு நன்மையைக் கருதி சுய நலத்திற்காக உண்மையை மறைக்கிற ஒவ்வொருவருக்கும் இந்த ஆயத்து முன்னெச்சரிக்கையாகும். ஆகவே, ஜனங்கள் உண்மையை மறைப்பதை விட்டு விலகிக் கொள்ளட்டும். படித்தவர்களிற் சிலர் அரசர்களுக்கும் மந்திரி பிரதானிகளுக்கும் பிரபுக்களுக்கும் அஞ்சுவதினாலோ அல்லது தங்கள் அந்தஸ்திற்குப் பங்கம் ஏற்பட்டுவிடும் என்பதினாலோ அல்லது அவர்களது உபகாரத்தையும் வெகுமதியையும் ஆசை வைத்ததனாலோ சத்தியத்தை அறிந்து கொண்டே அதனைக் கூறாமல் மறைத்து விடுகின்றனர். இதனைத்தான் இறைவன் கண்டித்து மேற்கண்ட ஆயத்துகளில் கூறி இருக்கிறான்.

சத்தியத்தைத் தைரியமாக வெளியிடுவதைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "மிகச் சிறந்த ஜிஹாது (மார்க்க யுத்தம்) அக்கிரமஞ் செய்யும் அரசனிடம் சத்தியத்தைக் கூறுவதேயாகும்" என்று கூறி இருக்கிறார்கள். சத்தியத்தை மறைப்பதற்குக் காரணம் உலக ஆதாயத்தின் மீதுள்ள பிரியமேயாகும். இவ்வுலக ஆசைதான் எல்லாக் குற்றங்களுக்கும் தலையாக இருக்கிறது.

لَيْسَ الْبِرَّ أَنْ تُوَلُّوا وُجُوهَكُمْ قِبَلَ الْمَشْرِقِ وَ
الْمَغْرِبِ وَلَٰكِنَّ الْبِرَّ مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَ
الْمَلَائِكَةِ وَالْكِتَابِ وَالنَّبِيِّينَ وَآتَى الْمَالَ عَلَىٰ
حُبِّهِ ذَوِي الْقُرْبَىٰ وَالْيَتَامَىٰ وَالْمَسَاكِينَ وَابْنَ
السَّبِيلِ وَالسَّائِلِينَ وَفِي الرِّقَابِ وَأَقَامَ الصَّلَاةَ
وَآتَى الزَّكَاةَ وَالْمُوفُونَ بِعَهْدِهِمْ إِذَا عَاهَدُوا
وَالصَّابِرِينَ فِي الْبَأْسَاءِ وَالضَّرَّاءِ وَحِينَ الْبَأْسِ
أُولَٰئِكَ الَّذِينَ صَدَقُوا وَأُولَٰئِكَ هُمُ الْمُتَّقُونَ

177. நீங்கள் உங்கள் முகங்களை கிழக்குத் திசையிலும், மேற்குத் திசையிலும் திருப்புவது (மட்டும்) நன்மையல்ல, ஆனால், எவன் அல்லாஹ்வையும், இறுதி நாளையும், அமரர்களையும், வேதத்தையும், நபிமார்களையும் விசுவாசித்து உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் (யாசகம்) கேட்போருக்கும், அடிமைகளுக்கு (அவர்களை விடுவிப்பதிலும்) தனக்குப் பிரியமான பொருளைக் கொடுத்து தொழுகையை நிறைவேற்றி, 'ஜக்காத்'தைக் கொடுத்து வந்தார்களோ அவர்களும், இன்னும் வாக்குறுதி அளித்தால் தங்களின் வாக்குறுதியை நிறைவேற்றியவர்களும், தரித்திரத்திலும், வியாதியிலும் யுத்த காலத்திலும் பொறுமையாக இருந்தவர்களும் நன்மையுடையவர்களாவார்கள். இவர்கள்தாம் (தங்கள் விசுவாசத்தில்) உண்மையாளர்கள். இன்னும் இவர்கள்தாம் (அல்லாஹ்வின்மீது) பயபக்தியுடையவர்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கிப்லா மாற்றப்பட்டு கஃபத்துல்லாவின் திசையை நோக்கி முஸ்லிம்கள் தொழ ஆரம்பித்தது சம்பந்தமாக யூதர்களும் கிறிஸ்துவர்களும் கிப்லா விஷயத்தை மிகப் பெரிதாகக் கூறி ஆட்சேபித்தனர். தங்களுடைய கிப்லாவின் பக்கம் திரும்புவதுதான் நன்மையான காரியம் என்பதாக அவர்கள் ஒவ்வொருவரும் எண்ணிக் கொண்டனர். இவர்களது இந்த எண்ணத்தையும் தாவாவையும் மறுத்து இறைவன் இந்த ஆயத்தை அருளி கிப்லாவை முன்னோக்கி விடுதல் மட்டும் நன்மையான காரியம் அன்று என்பதாகவும் மேற்படி ஆயத்தில் கூறப்பட்ட எல்லாக் காரியங்களையும் செய்வதுதான் நன்மையான காரியம் என்பதாகவும் விளக்கி இருக்கிறான். அல்லாஹு தஆலாவுக்கு திருப்தியளித்து, அதனைச் செய்யும் எவரையும் சுவர்க்கத்தின்பக்கம் அழைத்துச் செல்லக்கூடிய எந்தக் காரியத்திற்கும் **அல்பிர்ரு** (நன்மையான காரியம்) என்று சொல்லப்படும்.

அல்லாஹ்வை விசுவாசித்தவர் என்று கூறியது ஏனென்றால் யூதர்களும் கிறிஸ்துவர்களும் கூட அல்லாஹ்வை விசுவாசிப்பதாகத்தான் கூறுகிறார்கள். ஆனால், யூதர்கள் ஹளரத் உஜைர் அலைஹிஸ் ஸலாம் அவர்களை அல்லாஹ்வின் புதல்வர் என்றும், கிறிஸ்துவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ்வின் புதல்வர் என்றும் நம்புவதால் இவர்களது ஈமானில் ஷிர்க்குடைய தொடர்பு இருக்கிறது. ஆதலால்தான் இங்கு அல்லாஹு தஆலாவை விசுவாசிக்க வேண்டியதைப் பற்றிக் கூறப்பட்டது.

கடைசி நாளைப் பற்றி வேதக்காரர்கள் நம்பிக்கை கொண்டுதான் இருக்கிறார்கள். ஆயினும் அவர்களது நம்பிக்கை சரியான முறையிலில்லை. தங்களைச் சில நாட்களுக்கு மேல் அதிகமாக இறைவன் நெருப்பில் போடமாட்டான் என்றும் தங்களது மூதாதையர் நபிமார்களாக இருப்பதால் தங்களுக்கு ஷஃபாஅத்துச் செய்து விடுவார்கள் என்றும் அவ்வேதக்காரர்கள் நம்பி வந்தனர். இந்த நம்பிக்கையை மறுத்து இறைவன் கடைசி நாளைப் பற்றி விசுவாசங் கொள்ள வேண்டிய முறைப்படி விசுவாசங் கொள்ள வேண்டுமென்று கூறி இருக்கிறான்.

மலக்குகள், வேதங்கள், நபிமார்கள் ஆகியவர்களைப் பற்றியும் அவ்வேதக்காரர்களுக்கு விசுவாசமுண்டு. ஆனாலும் அவர்கள் சில மலக்குகளை ஒப்புக் கொண்டும், சில மலக்குகளின் மீது கோபமாகப் பேசியும் அவர்களுக்கிடையில் பாகுபாடு செய்கின்றனர். இதுபோலவே வேதங்களிலும் பாகுபாடு செய்து சிலவற்றை ஒப்புக் கொண்டும், சிலவற்றை ஒப்புக் கொள்ளாமலும் இருக்கின்றனர். நபிமார்களிலும் வித்தியாசம் பாராட்டிச் சிலரை விசுவாசித்தும் சிலரை விசுவாசிக்காமலும் இருக்கின்றனர். ஆகவே, மலக்குகள், வேதங்கள் நபிமார்கள் விஷயத்தில் அவர்கள் கொண்டுள்ள ஈமான் அல்லாஹூ தஆலாவுக்கு திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை. ஆதலின், இறைவன் இவ்விஷயத்தையும் இதில் சேர்த்துக் கூறி இருக்கிறான். மேலே கூறப்பட்ட ஐந்து காரியங்களும் மார்க்கத்திலுள்ள அடிப்படைக் (உஸூலிய்யத்தான) கொள்கைகளும், ஈமானின் சட்டங்களுமாகும்.

விசுவாசத்தைப் பற்றிக் கூறிய பின் மற்றவர்களுடன் கூடி வாழ்வது சம்மந்தமாகவுள்ள விபரங்களைப் பற்றி இறைவன் கூறி இருக்கிறான். இதில் முதலாவதாக பணத்திற்குத் தேவை இருக்கும் போது அதனை அல்லாஹூ தஆலாவுக்காக உறவினர்களுக்கு தர்மம் செய்வதைப் பற்றிக் கூறி இருக்கிறான். உறவினர்களுக்கு தர்மம் செய்வதில் இரண்டு மடங்கு நன்மை இருப்பதாக நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹதீஸ்:- "முஸ்லிம்களுக்கு நீ செய்யும் உனது ஸதக்கா ஒரு ஸதக்காவா (தர்மமாக) கும். உனது இரத்த பந்தங்களுக்கு (நீ அந்த தர்மத்தைச் செய்வது) இரண்டு ஸதக்காவாகும்". ஏனெனில், தர்மம் செய்வதுடன் உறவினர்களை அரவணைப்பதும் இருக்கிறது.

இரண்டாவதாக ஏழைகளாகவுள்ள அனாதைகளுக்கு தர்மங் கொடுக்க வேண்டும். செல்வந்தர்களாகவுள்ள அனாதைகளுக்கு தர்மங் கொடுக்க வேண்டியதில்லை. ஏனெனில் ஏழையாகவும் சிறு பிள்ளைகளாகவும் இருப்பதுடன் தந்தையோ அல்லது சம்பாதித்துக் கொடுப்பவரோ இல்லாமலிருப்பவர்கள் மிகவும் வறுமையுள்ளவர் களாயிருப்பார்கள். ஆதலின் சாதாரணமாக ஏழைக்கு உபகாரம் செய்வதைப் பார்க்கிலும் அனாதையான ஏழைக்கு உபகாரம் செய்வது முதன்மையாகும். இதனால்தான் இறைவன் அனாதைகளை முதலில் கூறி அப்புறம் ஏழை (மிஸ்கீன்)களைப் பற்றிக் கூறி இருக்கிறான். அதிலும் ஏழை (மிஸ்கீன்)கள் இரண்டு வகையினராக இருக்கின்றனர். ஒரு வகையினர் தங்களுக்கு எவ்வளவு வறுமை யிருந்தாலும் பொறுத்துக் கொண்டு யாசகம் கேட்காமலிருப்பவர்கள். மற்றொரு வகையினர் யாசகம் கேட்பவர்கள். இவ்விரு வகையினரில் முதலாவது வகையினர்தான் மிஸ்கீன் (ஏழை)கள் என்று இறைவன் கூறியதில் கருதப்படுவார்கள்.

மிஸ்கீன்களுக்குப் பிறகு வழிப்போக்கர்கள் அதாவது இப்னுஸ்ஸபீல்களுக்கு உதவி புரியவேண்டும். ஏனெனில், இவர்கள் தங்களது சொத்துக்களை விட்டு வெகுதூரத்தில் இருப்பதால் அந்தச் சொத்துக்களைக் கொண்டு தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். இவ்வழிப்போக்கர்கள் விருந்தினராக இருக்கிறார்கள். விருந்தினருக்கும் **இப்னுஸ்ஸபீல்** என்று அழைப்பது வழக்கம்.

ஹதீஸ்:- "எவர் அல்லாஹ்வையும் கடைசி நாளையும் விசுவாசித் திருக்கிறாரோ அவர் தனது விருந்தினரைக் கண்ணியப் படுத்த வேண்டும்" என்று நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

மற்றொரு ஹதீஸில் "விருந்தினரைக் கண்ணியப் படுத்துங்கள். அவர் நிராகரிப்பாளராக இருந்தாலும் சரியே" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

இவர்களுக்குப் பிறகு இறைவன் யாசகம் கேட்பவர்களைக் கூறி இருக்கிறான். யாசகம் கேட்பவர்களைத்தான் இந்த ஆயத்தில் **ஸாயிலீன்** என்பதாகக் கூறி இருக்கிறான்.

ஹதீஸ்:- "இரப்போருக்கு ஒரு பாத்தியமுண்டு. அவர் தமது குதிரையின் மீது ஏறி வந்தாலும் சரியே" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

இந்த ஹதீஸின் படி யாசகம் கேட்போர் எப்படிப்பட்டவர் என்பதைக் கவனிக்காமலே அவர்களுக்கு தர்மம் கொடுக்க வேண்டுமென்று தெரியவருகிறது.

அடிமைகளை விடுதலை செய்வதற்காக உதவி புரிவதை இறைவன் இறுதியில் கூறி இருக்கிறான் **வஃபிர்ரிகாப்** என்பதற்கு கைதிகளாக வந்தவர்களை விடுதலை செய்பவதற்காகப் பணம் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது.

கூடி வாழும் விஷயத்தைப் பற்றிக் கூறிய பின் மூன்றாவதாக அகத் தூய்மையைப் பற்றி இறைவன் கூறி தொழுகையை நிலை நிறுத்துதல், ஜக்காத்துக் கொடுத்தல், வாக்குறுதியை நிறைவேற்றுதல், கஷ்ட காலத்தில் பொறுமையாக இருத்தல் முதலியவற்றைப் பற்றியும் கூறி இருக்கிறான். மேலும், யூதர்கள் தொழுகை, ஜக்காத்து முதலியவற்றைச் செய்ய வேண்டாமென்றும் அக்காலத்தில் உள்ளவர்களை விலக்கிக் கொண்டிருந்தார்கள். வாக்குறுதிகளை நிறைவேற்றும் விஷயத்திலும் இந்த ஆயத்தில் இறைவன் கூறி இருக்கிறான்.

"எவன் அல்லாஹு தஆலாவுக்கு வாக்குறுதி கொடுத்துப் பின்னர் அதனை முறித்து விட்டானோ அவனை அல்லாஹ் பார்க்க மாட்டான்" என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆயத்து

மனிதனின் பரிபூரணத் தன்மைக்குள்ள முக்கிய அம்சங்கள் அனைத்தையும் மறைமுகமாகவும் நேரடியாகவும் கூறி இருக்கிறது. இதனால்தான் இதில் கூறப்பட்டுள்ள தன்மைகள் உள்ளவர்களை உண்மையாளர்கள் என்றும் தக்வா உள்ளவர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அவர்களது நம்பிக்கை என்னும் விசுவாசத்தைக் கவனித்து அவர்களை உண்மையாளர்கள் என்றும் அவர்களது ஒழுக்கம், கூடி வாழ்தல் முதலிய புறக்காரியங்களைக் கவனித்து அவர்களை தக்வாவுள்ளவர்கள் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் இதனைக் குறித்து "எவனொருவன் இந்த ஆயத்தின்படி நடக்கிறானோ அவனுடைய ஈமான் பரிபூரணமாகிவிட்டது" என்று கூறி இருக்கிறார்கள்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الْقِصَاصُ فِي
الْقَتْلَى ۖ الْحُرُّ بِالْحُرِّ وَالْعَبْدُ بِالْعَبْدِ وَالْأُنْثَىٰ
بِالْأُنْثَىٰ ۚ فَمَنْ عُفِيَ لَهُ مِنْ أَخِيهِ شَيْءٌ فَاتِّبَاعٌ
بِالْمَعْرُوفِ وَأَدَاءٌ إِلَيْهِ بِإِحْسَانٍ ۗ ذَٰلِكَ تَخْفِيفٌ
مِنْ رَبِّكُمْ وَرَحْمَةٌ ۗ فَمَنِ اعْتَدَىٰ بَعْدَ ذَٰلِكَ
فَلَهُ عَذَابٌ أَلِيمٌ

178. விசுவாசங் கொண்டவர்களே! கொலை செய்யப் பட்டவர்கள் விஷயத்தில், சுதந்திரனுக்குப் பதில் சுதந்திரமான வனையும், அடிமைக்குப் பதில் அடிமையும், பெண்ணுக்குப் பதில் பெண்ணும் பழிவாங்கப்படும். எனினும், (கொலை செய்யப்பட்ட) அவனுடைய சகோதர (பாத்தியஸ்த)ர் மூலம் (கொலை செய்த) இவனுக்கு ஏதேனும் மன்னிப்பு அளிக்கப்பட்டால், அப்போது (கொலையாளி) நல்ல வழக்க முறையைப் பின்பற்றி (அதற்கான நஷ்ட

ஈடு முதலியவற்றை) நன்றியறிதலுடன் (கொலை செய்யப்பட்ட) அவ(னுடைய பாத்தியஸ்தர)ரிடம் நிறைவேற்ற வேண்டும். இது (உங்களுக்கு) உங்களுடைய ரப்பின் சார்பிலிருந்துள்ள சலுகையாகவும் கருணையுமாகும். இதன் பிறகும் எவன் (நமது கட்டளையை) மீறுகிறானோ அவனுக்கு (இகத்திலும் பரத்திலும்) நோவினை செய்யக் கூடிய வேதனையுண்டு.

அறபிக் கோத்திரங்களிலுள்ள இரண்டு கோத்திரங்களுக்குள் பழிவாங்க வேண்டிய கொலைக் குற்றச் செய்கையிருந்தது. அவ்விரு கூட்டத்தினரில் ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தினரைப் பார்க்கினும் வலிமை மிகுந்தவராகவும் அதிகக் கண்ணிய முள்ளவராகவும் இருந்தனர். ஆகவே வலிமை மிகுந்த கூட்டத்தினர் எங்களிலுள்ள ஒரு அடிமையின் கொலைக்கு அவர்களிலுள்ள ஒரு சுதந்திரவானையும் ஒரு பெண்ணுக்குப் பதிலாக அவர்களிலுள்ள ஒரு ஆடவனையும் எங்களிலுள்ள ஒருவருக்குப் பதிலாக அவர்களிலுள்ள இரண்டு பேரையும் பழி வாங்குவோம் என்று சத்தியம் செய்து கொண்டனர். பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைக் கொண்டு வந்த போது அவர்களிடம் பஞ்சாயத்திற்கு வந்தனர். ஆகவே, அல்லாஹு தஆலா அவர்களுக்கிடையில் தீர்ப்பு செய்வதற்காக இந்த ஆயத்தை அருளினான்.

தவிர, அடிமைக்குப் பதில் அடிமை, சுதந்திரவானுக்குப் பதில் சுதந்திரவான், பெண்ணுக்குப் பதில் பெண் என்று இறைவன் அருளி இருப்பது அடிமைக்குப் பதில் அடிமையைத்தான் பழி வாங்க வேண்டும், சுதந்திரவானைப் பழி வாங்கக்கூடாது, சுதந்திரவானுக்குப் பதிலாக சுதந்திரவானைத்தான் பழிவாங்க வேண்டும்,வேறு எவரையும் பழிவாங்கக் கூடாது, பெண்ணின் கொலைக்குப் பதிலாக பெண்ணைத் தான் பழிவாங்க வேண்டும் வேறு எவரையும் பழிவாங்கக் கூடாது என்ற கருத்தில் இந்த ஆயத்து அருளப்பட்டதல்ல. தங்களிலுள்ள அடிமைக்குப் பதிலாக தங்கள் எதிரிகளிலுள்ள சுதந்திரவானையும், தங்களிலுள்ள பெண்ணுக்குப் பதிலாக தங்கள் எதிரிகளிடமுள்ள ஆடவரையும் பழிவாங்க வேண்டும் என்று அவர்கள் ஒரு தலைப்பட்சமாக ஏற்படுத்தி இருந்த ஏற்றத்தாழ்வை மறுத்து இருவருக்கு

மிடையிற் சமமாகவே தீர்ப்புச் செய்ய வேண்டும் என்பதை விளக்குவதற்காகவே இது அருளப்பட்டது.

தவிர இந்த ஆயத்து எல்லா முஸ்லிம்களையும் முன்னோக்கிக் கூறப்பட்டது. ஆயினும், இதிலுள்ள கட்டளையை நிறைவேற்று வதற்குள்ள உரிமை தொழுகை நோன்பு சம்மந்தமான சட்டங்களைப் போல் ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டப்படி நிறைவேற்றிக் கொள்வதற்காக வைக்கப்படவில்லை. அதிகார வர்க்கத்தின் தீர்ப்புப்படி அவர்கள் மூலமாகத்தான் இதனை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

وَلَكُمْ فِي الْقِصَاصِ حَيٰوةٌ يّٰۤاُولِي الْاَلْبَابِ
لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

179. மேலும், அறிவுடையோரே! நீங்கள் (கொலைச் செயலைத்) தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு, பழிக்குப்பழி வாங்குவ(தென்னும் இச்சட்டத்)தில் உங்களுக்கு வாழ்வுண்டு.

கொலை செய்தால் மரணதண்டனை கிடைக்கும் என்று நிச்சயமாக அறிந்த ஒருவன் தனக்கு மரணதண்டனை நிச்சயமாகக் கிடைக்கும் என்ற பயத்தினால் கொலைக்குற்றம் செய்யமாட்டான். இதன் மூலம் கொலை செய்யப்படுபவனுடைய உயிரும், கொலை செய்பவனுடைய உயிரும் காப்பாற்றப்படுகின்றன. மேலும் கொலை செய்த ஒருவனை மரணத்தண்டனைக்கு உட்படுத்துவதை மற்றவர்கள் பார்த்தால் அவர்களும் கொலைக் குற்றம் செய்யாமல் தங்களைக் காத்துக் கொள்வார்கள். இவ்விதமாகக் கொலைக்கு மரண தண்டனை ஏற்படுத்துவதால் பொது மக்களுக்கு ஜீவியம் இருந்து வருகிறது.

كُتِبَ عَلَيْكُمْ اِذَا حَضَرَ اَحَدَكُمُ الْمَوْتُ اِنْ تَرَكَ
خَيْرَاۨ ۖۚ الْوَصِيَّةُ لِلْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ بِالْمَعْرُوْفِ ۚ

حَقًّا عَلَى الْمُتَّقِينَ ۝

180. உங்களில் ஒருவனுக்கு மரணம் சம்பவிக்கும் போது அவன் (அதிகச்) சொத்தை விடுத்துச் செல்) பவனாக இருந்தால் பெற்றோர்களுக்காகவும், பந்துக்களுக்காகவும், நீதமாக வஸியத்துச் செய்வது உங்கள் மீது கடமையாக்கப்பட்டிருக்கிறது. இது (பொருள் வீணாகி விடுவதையும் பந்துக்கள் பாகமில்லாமல் போய் விடுவதையும்) தவிர்த்துக் கொள்பவர்களுக்கும் கடமையாகும்.

மரணம் சம்பவிப்பதற்கான அறிகுறிகள் அதாவது நோய் முதலியவைகள் வந்து விடுமாயின் செல்வந்தர்கள் தங்கள் பெற்றோர்களுக்கும் இதர சுற்றத்தாருக்கும் தங்கள் சொத்தில் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று வஸிய்யத்துச் செய்வது அவசியம் என்ற விதி வாரிசு பாத்தியத்தைப் பற்றி அருளப்பட்ட ஆயத்தையும் வாரிசு தாரருக்கு வஸியத்தில்லை என்ற ஹதீஸையும் கொண்டு மாற்றப்பட்டு விட்டது.

மரணம் சம்பவிக்கும் போது என்பதற்கு மரணத்திற்குரிய அறிகுறி தோன்றுதல் என்பது கருத்து. மரண வேதனை ஏற்பட்ட பிறகு வஸிய்யத்துச் செய்தால் அந்த வஸிய்யத்துச் செல்லாது.

கைரன் (நல்லதை) என்பதற்கு பெருஞ் செல்வம் என்றும் அந்தச் செல்வம் அதிகமாக இருந்தாலும் சரி அல்லது குறைவாக இருந்தாலும் சரி பொதுப்படையாக செல்வம் என்றும் கொள்ளப் படுகிறது.

ரிவாயத்து:- "ஒரு மனிதர் வஸிய்யத்துச் செய்ய விரும்பினார். அப்பொழுது உம்முல் மூமினீன் ஹளரத் ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்கள் அம்மனிதரை நோக்கி "உம்மிடம் எவ்வளவு பொருள்கள் இருக்கின்றன?" என்று வினவினார்கள். அதற்கு அவர் "மூவாயிரம் திர்ஹம்" என்பதாகக் கூறினார். அப்பொழுது "உமக்கு எத்தனை மக்கள்" என்று உம்முல் மூமினீன் ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்கள் விசாரித்தார்கள். அதற்கவர் "நான்கு பேர்" என்று கூறினார். அப்பொழுது உம்முல் மூமினீன் ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்கள் 'நல்லதை விட்டால்' என்பதாகத்தான் அல்லாஹு தஆலா கூறி இருக்கிறான். இந்த மூவாயிரம் திர்ஹம் மிகவும் கொஞ்சமான பொருள். இதனை உமது மக்களுக்காக விட்டுவை. அந்தப் பொருளின் மீது ஆசைப்படுகிற ஒவ்வொருவருக்கும் பிரயோஜனப் படக்கூடிய அளவிற்கு பாகம் கிடைக்க வேண்டும். இப்படிப் பாகம் கிடைப்பதுதான் தீங்கு ஏற்படுவதற்கு மாறானது" என்று கூறினார்கள் என்பதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

இஸ்லாம் மார்க்கம் வருவதற்கு முன்னுள்ள (ஜாஹிலிய் யத்தான) அறியாமைக் காலத்தில் அறபியர்கள் தங்களைப் பிறர் புகழ்வதற்காகவும் கீர்த்திக்காகவும் தங்களுடைய சுற்றத்தாரை தரித்திரத்திலும் வறுமையிலும் கஷ்டப்பட விட்டு விட்டு தூரத்து உறவினர்களுக்குத் தங்கள் சொத்துக்களை வஸிய்யத்துச் செய்து கொடுத்து விடுவார்கள். எனவே, இஸ்லாம் மார்க்கம், ஆரம்பமான காலத்தில் இவ்வழக்கத்தை மாற்றிச் சுற்றத்தாருக்கும் பெற்றோர் களுக்கும் வஸிய்யத்துச் செய்யும்படி இந்த ஆயத்தின் மூலம் கட்டளை யிடப்பட்டது.

فَمَنْ بَدَّلَهُ بَعْدَمَا سَمِعَهُ فَإِنَّمَا إِثْمُهُ عَلَى
الَّذِينَ يُبَدِّلُونَهُ إِنَّ اللَّهَ سَمِيعٌ عَلِيمٌ ۝

181. எவனேனும் அ(வ்வஸியத்)தைக் கேட்ட பின்பு அதை மாற்றுவானாயின் (அந்த) மாற்றியபவர்கள் மீதே அதன் பாவமிருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் கேட்பவன், (இன்னும்) அறிபவன்.

தனது பெற்றோர்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் ஒருவர் தனது சொத்தில் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று வஸிய்யத்துச் செய்து

விட்டு இறந்து போயிருந்தால் அந்த வஸிய்யத்தின் பிரகாரம் அவர்களுக்குரிய பாத்தியதை கிடைக்காமல் செய்கிற ஒவ்வொருவரும் ஆயத்தில் சொல்லப்பட்டபடி குற்றவாளியாவார்கள்.

فَمَنْ خَافَ مِنْ مُّوْصٍ جَنَفًا اَوْ اِثْمًا فَاَصْلَحَ
بَيْنَهُمْ فَلَآ اِثْمَ عَلَيْهِ ۭ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ

182. ஆனால், ஒருவன் 'வஸிய்யத்து'ச் செய்பவனில் (நியாய) வழுவுதலையோ அல்லது பாவத்தையோ அஞ்சி அவர்களுக்கிடையில் சீர்திருத்தம் செய்தால், அவன் மீது குற்றமில்லை. நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவன் பேரன்புடையவன்.

அறிந்துகொள்:- வஸிய்யத்துச் செய்ய வேண்டுமென்ற விருப்பம் உள்ளவர்கள் இக்காலத்திலும் வஸிய்யத்துச் செய்யலாம். ஏனெனில், மனிதன் இனிமேலும் வெகு காலத்திற்கு வாழ வேண்டும் என்பதிலேயே விருப்பமுள்ளவனாகி மறு உலக வாழ்வுக்கான காரியங்களைச் செய்வதில் அஜாக்கிரதையாக இருந்து விடுகிறான். எனவே, அவனுக்கு மரணம் வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டு, வஸிய்யத்துச் செய்ய விரும்புவானாயின், தன்னிடமிருந்து ஏற்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்காக வஸிய்யத்துச் செய்து கொள்ளலாம். ஆகவே, தவறிப்போன ஃபர்லான தொழுகை நோன்பு ஆகியவற்றிற்கு ஃபித்யா கொடுக்க வேண்டுமென்றும் வஸிய்யத்துச் செய்யலாம். ஹஜ்ஜு, கஃப்பாரா என்னும் தண்ட குற்றம் ஆகியவற்றிற்கு வஸிய்யத்துச் செய்வது வாஜிபாகும்.

ஹதீஸ்:- உங்களுடைய கடைசி வயதில் உங்களுடைய அமல்களில் நீங்கள் அதிகப்படுத்திக் கொள்வதற்காக உங்களுடைய பொருள்களில் மூன்றிலொரு பாகத்தை உங்களுக்கு அல்லாஹு தஆலா தர்மமாகக் கொடுத்திருக்கிறான். அதனை நீங்கள் இஷ்டப்பட்ட இடத்தில் செலவழித்துக் கொள்ளலாம்.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا
كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

183. விசுவாசங் கொண்டவர்களே! நீங்கள் (தீமையைத்) தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு உங்களுக்கு முன்னுள்ளவர்களின் மீது கடமையாக்கப்பட்டதேபோல உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப் பட்டிருக்கிறது.

நோன்பு என்பது மூவகைப்படும். நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்வதுடன் பகற்பொழுதில் உண்ணாமலும், தண்ணீர் முதலியவற்றை அருந்தாமலும் உடலுறவு கொள்ளாமலும் இருப்பது ஒருவகை. இது பொது மக்களது நோன்பாகும். அல்லாஹு தஆலாவால் விலக்கப்பட்ட சகல காரியங்களையும் விட்டு விலகி இருப்பது மற்றொருவகை. இது (காஸ்ஸானவர்கள் அதாவது) குறிப்பிட்டவர்களது நோன்பாகும். அல்லாஹு தஆலாவை தவிரவுள்ள அனைத்தையும் விட்டுத் தன்னை விலக்கி இருப்பது மூன்றாவது வகை. இது (காஸ்ஸாக வுள்ளவர்களில் அகஸ்ஸாக இருப்பவர்களது அதாவது) வலிமார்களில் உயர் பதவி யடைந்தவர்களது நோன்பாகும்.

யா என்ற அட்சரம் விழிவேற்றுமையின் உருபாகும். அதாவது ஒரு நண்பர் தன்னுடைய மற்றொரு நண்பரை அழைக்கும்போது உபயோகிக்கும் பதமாகும். **அய்யுஹா** என்பது ஒரு நண்பர் தனது மற்றொரு நண்டருக்கு எச்சரிக்கை செய்வதற்கு உபயோகிக்கும் பதமாகும்.

ஆமனூ என்பது ஒரு நண்பர் தன்னுடைய மற்றொரு நண்பரைக் குறித்துச் சாட்சியம் கூறியதுபோல இருக்கிறது என்பதாக அறபி இலக்கிய அறிஞர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் இருந்து நோன்பு நோற்பது எல்லா நபிமார்களுக்கும் உம்மத்து களுக்கும் ஃபர்லாக்க (கடமையாக்க)ப் பட்டிருந்தது. ஹளரத் ஆதம்

அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அய்யாமுல் பீல் அதாவது 13,14,15வது பிறைகளில் நோன்பு நோற்பது கடமையாக இருந்தது. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது உம்மத்துகளுக்கு ஆஷூராவின் நாளில் அதாவது முஹர்ரம் மாதம் பத்தாவது நாளில் நோன்பு நோற்பது கடமையாக்கப் பட்டிருந்தது. நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் அவர்களது உம்மத்துகளுக்கும் நோன்பு நோற்பது கடமையாக்கப் பட்டிருக்கிறது. ஆனால் முன்னுள்ளவர்களுக்கு நோன்பு நோற்பது கடமையாக்கப் பட்டது போல மூமீன்களுக்கும் நோன்பு நோற்பது கடமை யாக்கப்பட்டிருக்கிறது என்பதிலிருந்து ஆஷூராவின் நோன்பு கடமை யாக்கப்பட்டிருக்கிறது என்றோ அய்யாமுல்பீல் நோன்புகள் கடமையாக்கப்பட்டிருக்கின்றன என்றோ கருத்துக் கொள்ள வேண்டியதில்லை. நோன்பு நோற்க வேண்டும் என்ற விஷயத்தில் முன்னுள்ளவர்கள் கடமையாக்கப்பட்டிருந்ததுபோல மூமின்களும் கடமையாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் கருத்தாகும்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை ஹிஜ்ரத்துச் செய்த மூன்று வருடங்களுக்குப் பிறகு நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எட்டு ரமலான் மாதம் நோன்பு நோற்றார்கள். அதாவது 5 வருடத்திய ரமலானில் இருபத்தொன்பது நோன்புகளும், மூன்று வருடத்திய ரமலானில் முப்பது நோன்புகளும் நோற்றார்கள் என்று ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

"அல்லாஹு தஆலா அவனது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முதலாவதாக ஷஹாதத்துக் கலிமாவைக் கொண்டு (அதாவது ஓர் இறைக் கொள்கையைப் பிரசாரம் செய்யும்படி) அனுப்பினான். அதனை ஜனங்கள் ஒப்புக் கொண்ட பிறகு தொழுகை, ஜக்காத், நோன்பு, ஹஜ்ஜு, ஜிஹாது ஆகியவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கடமையாக ஏற்படுத்தி தீனை நிறப்பமாக்கி வைத்தான்" என்று ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

أَيَّامًا مَّعْدُودَٰتٍ ۚ فَمَن كَانَ مِنكُم مَّرِيضًا أَوْ
عَلَىٰ سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ أَيَّامٍ أُخَرَ ۚ وَعَلَى ٱلَّذِينَ
يُطِيقُونَهُۥ فِدْيَةٌ طَعَامُ مِسْكِينٍ ۖ فَمَن تَطَوَّعَ خَيْرًا
فَهُوَ خَيْرٌ لَّهُۥ ۚ وَأَن تَصُومُوا۟ خَيْرٌ لَّكُمْ ۖ إِن كُنتُمْ
تَعْلَمُونَ ۝

184. (அது) எண்ணிக்கையுள்ள சில தினங்களில் (நோன்பு நோற்கவேண்டும்). எனவே, (அந்நாட்களில்) உங்களில் எவரேனும் நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ (இருந்து நோன்பு நோற்கத் தவறி) இருந்தால் வேறு நாட்களில் (அந்த) எண்ணிக்கை இருக்கிறது. ஆனால், (முதுமை, மரண வியாதி ஆகிய காரணங்களினால்) சக்தியற்றவர்களின் மீது ஒரு ஏழைக்கு உணவளிப்பது பரிகாரமாகும். ஆயினும் நன்மையைத் தானாகவே செய்வானாயின் அவனுக்கு அது நல்லதே. நீங்கள் அறிந்திருந்தால் உங்களுக்கு நோன்பு நோற்பது நன்மையாகும்.

எண்ணப்பட்ட சில நாட்களில் நோன்பு நோற்பது கடமையாக இருப்பது உடல் ஆரோக்கியமுள்ளவர்களுக்குத்தான் என்பதையும், நோயாளியாகவோ அல்லது பிரயாணியாகவோ இருப்பாராயின் அவர் வசதி போல் நோன்பு நோற்கலாம் என்பதையும் அறிவிக்கிறது. எனவே, ஒருவர் இவ்விரண்டில் ஏதேனும் ஒரு காரணத்தால் குறிப்பிட்ட அந்த நாட்களில் நோன்பு நோற்க வில்லையாயின் எத்தனை நாட்கள் நோன்பு நோற்கவில்லையோ அந்த நாட்களைக் கணக்கு வைத்து வேறு காலங்களில் நோன்பு நோற்க வேண்டும். அப்படி நோன்பு நோற்பதும் கூடத் தொடர்ந்து நோற்க வேண்டுமென்ற அவசியமில்லை, ஒன்று மிரண்டுமாகப் பிரித்து, இடைவிட்டும் நோன்பு நோற்று தவற விட்ட நோன்புகளை நிறைவேற்றலாம். இப்படி இறைவன் செய்தது இந்த உம்மத்துகளுக்கு ரஹ்மத்தாகும்.

உடல் ஆரோக்கியத்துடன் உள்ளூரிலேயே இருந்து மறுபடியும் நோன்பு காலம் வருவதற்குள் மரணித்துப் போகுபவர்களுக்கு இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் நோன்பு நோற்றுக் கொள்ளவும் அல்லது நோற்காமல் (ஃபித்யா என்னும்) பரிகாரம் கொடுத்துக் கொள்வதற்கும் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. பின்னர், இதற்கடுத்த 185 வது ஆயத்து அருளப்படவே உடல் ஆரோக்கியத்துடன் உள்ளூரில் இருப்பவருக்கு இந்தச் சலுகை நிறுத்தப்பட்டது என்று பல விரிவுரையாளர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கருத்தின்படி وَعَلَى الَّذِيْنَ يُطِيْقُوْنَهٗ என்ற வாக்கியத்திற்கு நோன்பு நோற்கச் சக்தியுள்ளவர்கள் மீது என்று பொருள் செய்ய இடமுண்டு. ஆனால், சில விரிவுரையாளர்கள் يُطِيْقُوْنَهٗ என்ற வார்த்தைக்கு நோன்பு நோற்க இயலாதவர்கள் என்று அர்த்தம் செய்து, இவ்வார்த்தத்திற்குரிய காரணங்களையும் கூறி இருக்கிறார்கள் இந்த இடத்தில் நாம் இவ்விரண்டாவது அர்த்தத்தையே கூறியுள்ளோம்.

நன்மையைத் தானாகவே செய்வானாயின் என்பதற்கு நோன்பு நோற்க இயலாதவர்கள் நோன்புக்குப் பதிலாகக் கொடுக்கும் ஃபித்யாவென்னும் பரிகாரத்தில் அதிகப்படுத்துதல். அதாவது ஒரு மிஸ்கீனுக்கு உணவு அளிப்பதை விட ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு மூன்று பேருக்குக் கொடுத்தல் அல்லது ஒரே மிஸ்கீனுக்கு உணவு கொடுப்பதில் குறிப்பிட்ட அளவைப் பார்க்கினும் அதிகமாகக் கொடுத்தல் அல்லது நோன்பையும் கலாச் செய்து ஃபித்யாவும் கொடுத்தல் என்பது கருத்து. ஒரு நோன்புக்குப் பதிலாக அரைஸாஉ (மரக்கால்) மணிக்கோதுமை அல்லது இதர தானியங்களில் ஒரு ஸாஉ என்பதாக **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** கூறப்பட்டிருக்கிறது. அறபுத் தமிழ் தஃப்ஸீராகிய **அல்ஃபத்ஹுல் கரீமில்** வழக்கத்தில் அதிகமாக உபயோகிக்கப்பட்டு வருகிற தானியத்தில் நோன்பு ஒன்றுக்கு ஒரு ஏழைக்கு இரண்டு கையாலும் ஒரு சிரங்கை என்பதாக எழுதப்பட்டிருக்கிறது.

شَهْرُ رَمَضَانَ الَّذِيْٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ ۚ فَمَنْ

شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ ۗ وَمَنْ كَانَ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ۗ يُرِيْدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ ۖ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ۝

185. ரமலான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு நேர்வழி காட்டியாகவும், நேர்வழியிலிருந்து (சத்தியத்தையும் அசத்தியத்தையும்) பிரித்து அறிவிக்கக் கூடியதிலிருந்தும் தெளிவான விளக்கமாகவுமுள்ள குர்ஆன் இறக்கப்பட்டது. எனவே, உங்களில் எவர் அந்த மாதத்தை அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். (ஆனால்) எவரேனும் அதில் நோயாளியாகவோ, அல்லது பிரயாணியாகவோ (நோன்பு நோற்கமுடியாத நிலையில்) இருந்தால், வேறு நாட்களில் (அந்த) எண்ணிக்கை(யைப் பூர்த்தி செய்யக் கடமை)யுண்டு. இன்னும் நீங்கள் (தவறவிட்ட நோன்பின்) எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும் உங்களுக்கு அவன் நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வை நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும் இன்னும் நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவுமே அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறான். இன்னும், (அவன்) உங்களுக்குக் கஷ்டத்தை நாடவில்லை.

அறபி மாதங்களின் பெயர்கள் பூர்வீக காலத்திலேயே வைக்கப்பட்டனவாகும். எந்தெந்தக் காலத்தில் இந்த மாதங்கள் வந்தனவோ அந்தக் காலத்தைய நிலைமையை அனுசரித்து இந்தப் பெயர்கள் வைக்கப்பட்டன. தண்ணீர் உறையும்படியான பனியுள்ள காலத்தில் வந்த மாதங்களுக்கு ஜமாதுல் அவ்வல் ஜமாதுல் ஆகிர் என்றும், வசந்த காலத்தில் வந்த மாதங்களுக்கு ரபீஉல் அவ்வல், ரபீஉல் ஆகிர் என்றும், இதுபோல வெய்யிற் காலத்தில் சூரியனது

உஷ்ணத்தால் புற்பூண்டுகளெல்லாம் கருகி, கல், மண் முதலியவற்றில் உஷ்ணம் தாக்குவதால் அக்காலத்தில் வந்த மாதத்திற்கு ரமலான் என்றும் பெயர்கள் வைக்கப்பட்டன. ரமலான் என்பதற்கு கரிக்குபவன், சுடுபவன் என்பது பொருளாகும். இந்த மாதத்தில் நோன்பு நோற்பதால் பாவங்கள் கரிக்கப்படுவதால் இந்தப் பெயர் வந்ததென்றும் சிலர் கூறுவர். தவிரவும் ரமலான் என்று அல்லாஹு தஆலாவுக்கு ஒரு பெயர் இருப்பதால் இந்த மாதம் வருவதைக் குறித்துச் சொல்லும்போது ரமலான் வந்தது என்று கூறாமல் ரமலான் மாதம் வந்தது என்று கூறவேண்டும் என்பதாகவும் ஒரு ரிவாயத்து இருந்து வருகிறது.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அருளப்பட்ட சுஹுஃபுகள் ரமலான் மாதம் முதலாவது தேதியிலும், தவ்ராத் வேதம் ஆறாவது தேதியிலும், இஞ்ஜீல் வேதம் பதின் மூன்றாவது தேதியிலும், திருக்குர்ஆன் இருபத்து நான்காவது தேதியிலும், அருளப்பட்டன என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என்பதாக ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

இந்த மாதத்தில் திருக்குர்ஆன் முதலாவது வானத்திலுள்ள பைத்துல் இஸ்ஸத் என்னும் வீட்டிற்கு மொத்தமாக இறக்கப் பட்டதாகவும், பின்னர் இருபத்து மூன்று வருட காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாக இறைவனது நாட்டப்படி ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கொண்டு வந்தார்கள் என்பதாகவும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

நேர்வழி என்பது இரண்டுவகை. ஜனங்களுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் தெரியக்கூடியது ஒரு வகை. அவ்வாறு தெரியாமலிருப்பது மற்றொரு வகை. ஆகவே, இந்த ஆயத்தில் இறைவன் இந்த இரு வகைக்கும் பொதுவாகவுள்ளதை முதலில் "ஜனங்களுக்கு நேர்வழிகாட்டியாகவும்" என்ற வசனத்திலும், இவ்விரண்டு வகையிலும் சிறந்ததாகிய முதலாவது வகையை "நேர்வழியிலிருந்து பிரித்து அறிவிக்கக் கூடியதிலிருந்தும் தெளிவான விளக்கமாகவுள்ள ஆயத்துகளாகவும்" என்ற வசனத்திலும் குறிப்பிட்டுக் கூறியுள்ளான்.

"உங்களில் எவர் அந்த மாதத்தை அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்க வேண்டும்" என்ற வசனம் பொதுவாக யாவருக்கும் இடப்பட்ட கட்டளையாக இருப்பதால் இதற்கு முந்திய ஆயத்தில் உள்ளூரில் இருந்து கொண்டு நோன்பு நோற்கச் சக்தியில்லாமல் இருப்பவர்கள் ஃபித்யாக் கொடுத்துக் கொள்ளலாம் என்று சலுகை காட்டி இருந்தது இதன் மூலம் ரத்துச் செய்யப்பட்டு விட்டது. ஆகவே, நோயாளியாக இருத்தல் பிரயாணத்தில் இருத்தல் ஆகிய இரண்டு காரணத்திற்காகவே தவிர வேறு காரணத்திற்காக நோன்பு நோற்காமலிருக்கக் கூடாது என்பது இந்த வசனத்திலிருந்து தெரியவருகிறது.

ஹதீஸ்:- ஒரு முஸ்லிமான அடியான் நோன்பு துறக்கும் போது, அவன் காலால் நிகழ்ந்த பாவம், கண்ணால் பார்த்த பாவம், காதால் கேட்ட பாவம், நாவாலுரைத்த பாவம், இருதயத்தில் நினைத்த பாவம், எல்லாம் மன்னிக்கப்படுமென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ ۖ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ ۖ فَلْيَسْتَجِيبُوا لِي وَلْيُؤْمِنُوا بِي لَعَلَّهُمْ يَرْشُدُونَ

186. மேலும் (நபியே) உம்மிடம் என்னைப்பற்றி என்னுடைய அடியார்கள் வினவினால், அதற்கு (நீர்) நிச்சயமாக நான் (அவர்கள்) சமீபத்திலேயே இருக்கிறேன் (என்று கூறும்). என்னிடத்தில் கேட்பவனின் பிரார்த்தனைக்கு அவன் பிரார்த்திக்கும் பொழுதே நான் பதில் கூறுவேன். எனவே, அவர்கள் நேர்வழி பெறும் பொருட்டு என்னிடமே கேட்கட்டும், இன்னும் என்னையே விசுவாசம் கொள்ளட்டும்.

இதற்கு முந்திய ஆயத்தில் நோன்பு நோற்கும்படி ஜனங்களை இறைவன் ஏவியும், தக்பீர் முதலியவற்றுடன் அவனை வணங்கி நன்றி செலுத்தும்படி தூண்டியும் இருக்கிறான். இந்த ஆயத்தில் அவன்

அடியார்களது நிலைமைகளையும், அவர்கள் திக்ரு செய்வதையும் அவர்கள் நன்றி செலுத்துவதையும் அவன் அறிகின்றான் என்பதை விளக்கி யுள்ளான்.

ஒரு கிராமப் புறத்து அரபி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, "நமது இறைவன் நமக்குச் சமீபத்திலிருக்கிறானா? அப்படி யிருந்தால் நாம் அவனிடமும் பேசலாம். (முனாஜாத்துச் செய்யலாம்) அல்லது அவன் தூரத்திலிருக் கிறானா? அப்படி யிருந்தால் நாம் அவனை அழைக்கலாம்" என்று கூறினார். அதற்கு இறைவன் தனது அடியார்கள் தன்னிடம் கேட்கும் பிரார்த்தனைக்கு பதில் கூறுவதைப் பற்றி இந்த ஆயத்தை அருளினான்.

"நிச்சயமாக நான் (அவர்களுக்குச்) சமீபத்திலிருக்கிறேன்" என்பதற்கு அறிவைக் கொண்டும் இல்மைக் கொண்டும் அறிந்திருக்கிறேன் என்பது கருத்தாகும். நாம் ஒருவருக்கொருவர் நெருங்கி இருப்பதுபோல அவன் நெருங்கி இருக்கவில்லை. நமக்கு நெருங்கி இருக்கிற ஒருவன் நமது நிலைமைகளை நன்றாகத் தெரிந்து கொள்வதுபோல அல்லாஹுதஆலா நம் அனைவருடைய சொல், செயல், நிலை ஆகிய அனைத்தையும் நன்கு அறிந்திருக்கிறான் என்பது இங்கு உருவமாகக் கூறப்பட்டிருக்கிறது.

أُحِلَّ لَكُمْ لَيْلَةَ الصِّيَامِ الرَّفَثُ إِلَىٰ نِسَائِكُمْ
هُنَّ لِبَاسٌ لَّكُمْ وَأَنتُمْ لِبَاسٌ لَّهُنَّ عَلِمَ
اللَّهُ أَنَّكُمْ كُنتُمْ تَخْتَانُونَ أَنفُسَكُمْ فَتَابَ
عَلَيْكُمْ وَعَفَا عَنكُمْ فَالْآنَ بَاشِرُوهُنَّ وَابْتَغُوا مَا
كَتَبَ اللَّهُ لَكُمْ وَكُلُوا وَاشْرَبُوا حَتَّىٰ يَتَبَيَّنَ لَكُمُ
الْخَيْطُ الْأَبْيَضُ مِنَ الْخَيْطِ الْأَسْوَدِ مِنَ

الْفَجْرِ ثُمَّ أَتِمُّوا الصِّيَامَ إِلَى اللَّيْلِ وَلَا تُبَاشِرُوهُنَّ
وَأَنتُمْ عَاكِفُونَ فِي الْمَسَاجِدِ تِلْكَ حُدُودُ اللَّهِ
فَلَا تَقْرَبُوهَا كَذَٰلِكَ يُبَيِّنُ اللَّهُ آيَاتِهِ لِلنَّاسِ
لَعَلَّهُمْ يَتَّقُونَ

187. நோன்பின் இரவு (நேரங்)களில் நீங்கள் உங்களது மனைவியருடன் உடலுறவு கொள்வது உங்களுக்கு அனுமதிக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் உங்களுக்கு ஆடையாக இருக்கின்றனர். நீங்களும் அவர்களுக்கு ஆடையாக இருக்கின்றீர்கள். நீங்களே உங்களுக்கு மோசஞ் செய்துகொண்டீர்கள் என்பதை அல்லாஹ் அறிந்திருக்கிறான். எனவே, உங்களது பாவமன்னிப்புப் பிரார்த்தனையை ஒப்புக் கொண்டு உங்களை மன்னித்து விட்டான். ஆதலால், நீங்கள் இப்பொழுது அவர்களுடன் உடலுறவு கொண்டு அல்லாஹ் உங்களுக்கு ஏற்படுத்தியதை (சந்ததி விருத்தியைத்) தேடுங்கள். 'ஃபஜ்ரின்' கருப்புக் கயற்றிலிருந்து வெள்ளைக் கயறு வெளித்தோன்றும் வரையிலும் (அதாவது கிழக்கு வெளுக்கும் வரையிலும்) நீங்கள் புசியுங்கள்; பருகுங்கள்; பின்பு இரவு வரை நோன்பைப் பூர்த்தி செய்யுங்கள். மஸ்ஜிதுகளில் நீங்கள் தங்கி (இஃதிகாப்) இருக்கும் போது நீங்கள் அவர்களுடன் உடலுறவு கொள்ளாதீர்கள். இவைகள் அல்லாஹ்வின் வரம்புகள். ஆகவே இவற்றை (மீறுவதற்காக) நெருங்காதீர்கள். அவர்கள், தீமையைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு அல்லாஹ் தன்னுடைய வசனங்களை இவ்வாறே மனிதர்களுக்கு விவரிக்கிறான்.

அர்ரஃபது என்பது ஆதியில் கெட்ட பேச்சுக்கு மட்டும் பெயராக இருந்தது. பின்னர் பெண்களுடன் கலவி செய்வதற்கும் ஏற்படுத்தப் பட்டிருந்தது. அதாவது பெண்களை முத்தமிடல், அவர்களுடன் காதல் சம்மந்தமாகப் பேசுதல், விளையாடுதல், புணர்தல் முதலிய சகல

காரியங்களுக்கும் பொதுவாகவே வைக்கப்பட்டிருந்தது. பிறகு, இது புணர்ச்சியை மட்டும் அறிவிக்கக்கூடிய சமிக்ஞை சொல்லாக ஏற்படுத்தப்பட்டது.

கணவன் மனைவி இவர்களிருவரும் ஒருவருடைய நிலையை மற்றொருவர் மறைப்பவராகவும் பாவமான மானக்கேடான தொழிலை விட்டு விலக்குபவராகவும் இருப்பதால் **"அவர்கள் (மனைவியர்கள்) உங்களுக்கு ஆடையாக இருக்கின்றார்கள். இன்னும் நீங்கள் அவர் (மனைவி)களுக்கு ஆடையாக இருக்கின்றீர்கள்"** என்று கூறப்பட்டது.

அல்லாஹு தஆலாவின் வணக்கத்திற்காக மஸ்ஜிதிலேயே இருப்பதற்கு இஃதிகாப் என்று பெயர். ஜாமிஆ மஸ்ஜிதுகளில் இருப்பதற்கு அதிகம் மேன்மை இருக்கிறது. இது எல்லா அமல்களிலும் சிறந்த அமலாகும். ஏனெனில், இப்படி இருப்பதால் அல்லாஹு தஆலாவைத் தவிரவுள்ள எல்லாக் காரியங்களையும் விட்டு மனதை அவன் வழியில் திருப்புதல் இருக்கிறது. தனது தேவை ஒன்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக அதற்குரியவரின் வீட்டுத் தலைவாயலில் உட்கார்ந்து கொண்டிருக் கிறவரைப்போல் இஃதிகாஃபிருப்பவர் அல்லாஹு தஆலாவின் வீட்டில் இருந்து கொண்டு, "எனக்குப் பாவ மன்னிப்புச் செய்தால்தான் நான் இதைவிட்டுச் செல்வேன் என்று கூறிக் கொண்டிருக்கிறார்" என்பதாக அத்தாஉ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹதீஸ்:- தனது சகோதரனின் தேவையை நிறைவேற்றி வைப்பதற்காகச் செல்பவர் இருபது வருட காலம் இஃதிகா ஃபிருந்தவரைப் போலிருக்கிறார். ஒருவர் ஒரு நாள் இஃதிகா ஃபிருப்பாராயின் அவருக்கும் நரகத்திற்குமிடையில் அல்லாஹ் மூன்று அகழிகளை ஏற்படுத்துகிறான். ஒவ்வொரு அகழியும் சூரியன் உதயமாகும் இடத்திற்கும் சூரியன் மறையும் இடத்திற்கும் இடையிலுள்ள தூரமிருக்கிறது.

ரமலான் மாதத்தின் கடைசி பத்து தினங்களில் இஃதிகாஃப் இருப்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுக் கூறி இருக்கிறார்கள்.

وَلَا تَأْكُلُوٓا أَمْوَالَكُم بَيْنَكُم بِالْبَاطِلِ وَتُدْلُوا بِهَآ
إِلَى الْحُكَّامِ لِتَأْكُلُوا فَرِيقًا مِّنْ أَمْوَالِ النَّاسِ
بِالْإِثْمِ وَأَنتُمْ تَعْلَمُونَ ﴿١٨٨﴾

188. மேலும், உங்கள் சொத்துக்களை உங்களுக்குள் தகாத விதமாய் புசிக்காதீர்கள். இன்னும் நீங்கள் அறிந்திருந்தே ஜனங்களுடைய பொருளிலிருந்து - சொற்பத்தைப் பாவமான வழியில் நீங்கள் புசிப்பதற்காக அதன் பொருட்டு நீங்கள் நீதிபதிகளிடம் செல்லாதீர்கள்.

புசிக்காதீர்கள் என்று விலக்கியது புசிப்பதைப் பற்றி மட்டும் கூறியதல்ல. திருட்டுத்தனமாக, அக்கிரமமாக, பொய் சத்தியம் செய்தல், சூதாடல், லஞ்சம் வாங்குதல் இதுபோன்ற இதர தகாத செய்கைகள் மூலமாகப் பொருள் சம்பாதிக்கக் கூடாது என்ற விஷயங்களையும் இந்த வசனம் உணர்த்துகின்றது.

ஜனங்களுடைய பொருள்களிலிருந்து சொற்பத்தைப் பாவமான வழியில் நீங்கள் புசிப்பதற்காக அதன் பொருட்டு நீங்கள் நீதிபதிகளிடம் செல்லாதீர்கள் என்ற வாக்கியத்திலிருந்து பொய் வழக்குத் தொடரக் கூடாது என்பதும், லஞ்சம் கொடுத்துத் தனக்குச் சாதகமாகத் தீர்ப்பு வாங்கக் கூடாது என்பதும் தெரியவருகிறது.

يَسْـَٔلُونَكَ عَنِ الْأَهِلَّةِ ۖ قُلْ هِيَ مَوَاقِيتُ لِلنَّاسِ
وَالْحَجِّ ۗ وَلَيْسَ الْبِرُّ بِأَن تَأْتُوا الْبُيُوتَ مِن
ظُهُورِهَا وَلَٰكِنَّ الْبِرَّ مَنِ اتَّقَىٰ ۗ وَأْتُوا الْبُيُوتَ
مِنْ أَبْوَابِهَا ۚ وَاتَّقُوا اللَّهَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ ﴿١٨٩﴾

189. (நபியே) உம்மிடத்தில் அவர்கள் பிறைகளை

(சந்திரனை)ப் பற்றிக் கேட்கின்றனர்; அவைகள் மனிதர்களுக்கு (பிரயோஜனந் தருவதற்காகவும் ஹஜ்ஜுச் செய்வதற்காகவும் காலத்தை அறிவிப்பவைகள் என்று (அவர்களுக்கு) நீர் கூறுவீராக. மேலும், வீடுகளில் அவற்றின் பின்புற வழியாக நீங்கள் வருவது நன்றல்ல. ஆனால் பயப்படுபவனே நன்மை புரிபவனாவன். எனவே, நீங்கள் வீடுகளில் அதன் தலைவாசலின் பக்கமாக வாருங்கள். நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்.

பிறை பிறந்த மூன்று தேதி வரைக்கும் ஹிலால் என்று பெயர். அஹில்லத் என்பது ஹிலால் என்பதின் பன்மைச் சொல்.

குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்ற வேண்டிய மார்க்கக் கடமைகள் பல இருக்க அவற்றில் ஹஜ்ஜை மட்டும் இங்கு குறிப்பிட்டிருப்பதற்குக் காரணம், ஹஜ்ஜிலுள்ள விசேஷத்துவத்தை அறிவிப்பதற்காகவேயாகும். அதாவது மார்க்கத்தில் விதியாக்கப்பட்ட காரியங்கள் குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று இருந்தாலும் அவைகள் தவறி விட்டால் வேறு காலத்தில் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள இடமுண்டு. ஆனால் ஹஜ்ஜு தவறிப் போனாலும் அதை நிறைவேற்றுவதற்கு அந்த குறித்த காலமே நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் ஹஜ்ஜை மட்டும் இங்கு விசேஷமாகக் குறித்துக் கூறப்பட்டது.

அறியாமைக் (ஜாஹிலிய்யத்தான) காலத்தில் அறபியர்கள் ஹஜ்ஜுக்கு அல்லது உம்ராவுக்கு இஹ்ராம் கட்டினால் வழக்கத்திற்கு மாறாக உடை அணிந்திருப்பதால் வீடுகளில் அதன் தலைவாசல் வழியாகச் செல்வது கூடாது என்று எண்ணிக் கொண்டு, வழக்கத்திற்கு மாறாக வீட்டுச் சுவரில் கன்னம் வைத்தும், ஏணிவைத்து முகட்டின் மீது ஏறியும் வீட்டினுள் நுழைவது வழக்கம். இதனைக் குறித்து இறைவன் **"வீடுகளில் அவற்றின் பின்புற முகடுகளின் வழியாக வருவது நன்றியல்ல, ஹராமான வைகள் இச்சைகள் ஆகியவற்றைத் தவிர்த்துக் கொள்வதுதான் நன்று"** என்பதாக விளக்கி இருக்கிறான்.

وَقَاتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ الَّذِيْنَ يُقَاتِلُوْنَكُمْ وَلَا تَعْتَدُوْا

اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ ⊙

190. மேலும், உங்களிடம் யுத்தம் செய்பவர்களுடன் (அவர்களை எதிர்த்து) அல்லாஹ்வின் பாதையில் நீங்களும் யுத்தம் செய்யுங்கள். ஆனால், நீங்கள் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிக்க மாட்டான்.

ஃபீஸபீலில்லாஹ் என்பதற்கு அல்லாஹ்வின் பாதையில் என்பதாக மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. என்றாலும் அல்லாஹ்வின் சன்மார்க்கம் என்பதுதான் இதன் கருத்து. ஏனெனில், சன்மார்க்கம்தான் அல்லாஹு தஆலாவால் காண்பிக்கப்பட்ட நேரான பாதையாக இருப்பதுடன் திருப்தியான பாதையாகவும் இருக்கிறது. எனவே, சன்மார்க்கத்திற்கு உதவியாகச் செய்யும் போருக்கு ஃபீஸபீல் என்ற பெயர் வந்தது.

இந்த ஆயத்து அருளப்பட்ட பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தங்களுடன் யுத்தம் செய்வதற்காக வலுவில் வந்து போரை ஆரம்பித்தவர்களை எதிர்த்து யுத்தம் செய்வதும், தங்களிடம் யுத்தத்திற்கு வராதவர்களிடம் யுத்தத்திற்குச் செல்லாமலுமிருந்து வந்தார்கள். நிராகரிப்பாளர்களில் யுத்தத்திற்கு வருகிற அனைவரையும் எதிர்த்து யுத்தம் செய்யும்படி பொதுக் கட்டளை வருவதற்கு முன்னர் இந்த ஆயத்து அருளப்பட்டது. ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்களது ரிவாயத்தும் இதனையே ஊர்ஜிதம் செய்கிறது. அதாவது இந்த ஆயத்து ஹுதைபிய்யா உடன் படிக்கை சம்மந்தமாக அருளப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரி 6வது வருடத்தில் உம்ராச் செய்வதற்காக 1400 ஸஹாபிகளுடன் திருமக்காவை நோக்கிச் சென்றார்கள். அப்போது மக்காவிற்குச் சமீபத்தில் நீர்வளம் பொருந்திய இடமாகிய ஹுதைபிய்யா என்ற இடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறங்கி

இருந்தபோது, மக்கத்து இணைவைப்பாளர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பைத்துல்லாவிற்கு வரக்கூடாதென்று தடுத்தார்கள். ஆகவே, அவ்விடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு மாத காலம் வரை தங்கி இருந்தார்கள். இந்த வருடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் முஸ்லிம்களும் திரும்பச் சென்று விட வேண்டுமென்றும் வருகிற வருடத்தில் அவர்கள் திருமக்காவிற்கு வந்து உம்ராச் செய்யலாம் என்றும் மக்கத்து இணைவைப்பாளர்கள் கூறினார்கள். அதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அங்கீகரித்து உடன்படிக்கை செய்து கொண்டார்கள். மேலும், அடுத்த வருடத்திலும் மக்கத்து இணைவைப்பாளர்கள் தடைசெய்து யுத்தம் செய்ய வேண்டியது ஏற்பட்டால் ஹரம் ஷரீஃபில் சங்கையான மாதத்தில் யுத்தம் வேண்டியதாக இருக்குமே என்பதாக முஸ்லிம்கள் கவலைப்பட்டார்கள். அப்போது இந்த ஆயத்தை இறைவன் அருளினான். ரஜபு, துல்கஃதா, துல்ஹஜ்ஜு, முஹர்ரம் ஆகிய நான்கு மாதங்களிலும் அறபியர்கள் யுத்தம் செய்ய மாட்டார்கள். இந்த மாதங்களுக்கு முன்பிருந்து யுத்தம் செய்து கொண்டிருந்தாலும் இந்த மாதங்கள் பிறந்தவுடன் போரை நிறுத்திவிடுவார்கள். மக்காவிலுள்ள கஅபா என்ற இறை ஆலயத்தைச் சுற்றிலும் கொஞ்ச தூர அளவிற்கு ஒரு எல்லை வரையறுக்கப் பட்டிருக்கிறது. அந்த எல்லைக்குள் இருக்கிற பூமிக்கு ஹரம் ஷரீஃப் என்று பெயர். இதற்குள் யுத்தம் செய்யக் கூடாது என்றும், வேட்டையாடக் கூடாது என்றும், சண்டை சச்சரவு செய்யக்கூடாது என்றும் அங்குள்ள மரங்களை வெட்டக்கூடாது என்றும் ஜனங்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவும் இஸ்லாத்திற்கு முன்பிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒரு கடமையாகும்.

وَاقْتُلُوْهُمْ حَيْثُ ثَقِفْتُمُوْهُمْ وَاَخْرِجُوْهُمْ مِّنْ حَيْثُ
اَخْرَجُوْكُمْ وَالْفِتْنَةُ اَشَدُّ مِنَ الْقَتْلِ ۚ وَلَا تُقٰتِلُوْهُمْ
عِنْدَ الْمَسْجِدِ الْحَرَامِ حَتّٰى يُقٰتِلُوْكُمْ فِيْهِ ۚ فَاِنْ

قٰتَلُوْكُمْ فَاقْتُلُوْهُمْ ۗ كَذٰلِكَ جَزَآءُ الْكٰفِرِيْنَ ۝

191. மேலும் (உங்களுடன் யுத்தம் செய்யும்) அவர்களை நீங்கள் கண்ட இடத்தில் வெட்டுங்கள். இன்னும் உங்களை அவர்கள் வெளியேற்றிய இடத்தை விட்டு நீங்களும் அவர்களை வெளியேற்றுங்கள். இன்னும், குழப்பஞ் செய்வது யுத்தம் செய்வதைக் காட்டிலும் மிகக் கொடியதாகும். ஆனால், அவர்கள் உங்களை மஸ்ஜிதுல் ஹராமில் யுத்தம் தொடுக்கும் வரை அவர்களுடன் நீங்கள் அங்கு யுத்தம் செய்ய வேண்டாம். ஆனால், அவர்கள் உங்களை வெட்டி நீங்களும் அவர்களை (அங்கு) கொல்லுங்கள். இதுதான் நிராகரிப்போருக்குரிய தண்டனையாகும்.

அந்த நிராகரிப்பாளர்கள் சங்கையான மாதத்தினுடையவும் ஹரம் ஷரீஃபினுடையவும் கண்ணியத்தை மதிக்காமல் வலுவில் யுத்தத்தை ஆரம்பித்து மீறிவிட்டதால் கஅபத்துல்லாவைச் சுற்றிலும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிற எல்லைக்குள்ளும் (அதாவது ஹரமுக் குள்ளிலும்) அதற்கு வெளியிலும் (அதாவது ஹில்லிலும்) சங்கையான மாதங்களிலும் மற்றைய காலங்களிலும் கண்ட இடத்தில் நிராகரிப்பாளர்களை அதாவது ஹரத்தினுடையவும் சங்கையான மாதத்தினுடையவும் கண்ணியத்தை மதிக்காமல் வலுவில் போரை ஆரம்பித்து வெட்டிய நிராகரிப்பாளர்களை வெட்டும்படியும், அவர்கள் மக்கமா நகரை விட்டு முஸ்லிம்களை வெளியேற்றியதுபோல அவர்களையும் வெளியேற்றும்படியும் அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது. இவ்வனுமதிப்படி மக்கமா நகரை கைப்பற்றிய தினத்தன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விசுவாசங் கொள்ளாதவர்களை வெளியேற்றினார்கள்.

"மஸ்ஜிதுல் ஹராமில் உங்களை அவர்கள் வெட்டும்வரை அவர்களை அங்கு நீங்கள் வெட்டாதீர்கள்" என்ற வசனம் அதற்கு முன்னதாகக் கூறப்பட்டுள்ளது **"அவர்களை நீங்கள் கண்ட இடத்தில் வெட்டுங்கள்"** என்று சொல்லப்பட்ட பொது விதிக்கு நிபந்தனையாக

கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, முஸ்லிம்கள் ஹரம் ஷரீஃபில் தாங்களாக முதலில் போரிடக்கூடாது என்பதையும் நிராகரிப்பாளர்கள் அங்கு முதலிற் போரை ஆரம்பித்து விட்டால் தற்காப்பின் நிமித்தமாக முஸ்லிம்களும் போரிடலாம் என்பதையும் விளக்குகிறது.

فَإِنِ انْتَهَوْا فَإِنَّ اللَّهَ غَفُورٌ رَحِيمٌ

192. பிறகு, அவர்கள் (நிராகரிப்பிலிருந்து) விலகிவிட்டால் நிச்சயமாக அல்லாஹ் (அவர்களின் பாவங்களை) மிக மன்னிப்பவன், பேரன்புடையவன்.

யுத்தம் செய்வதை விட்டு விலகிக் கொள்வது மட்டும் மன்னித்துக் கிருபை செய்வதற்குத் தகுதியாக்கிவிட மாட்டாது. ஆகவே, அவர்கள் யுத்தம் செய்வதை விட்டு விலகுவதுடன் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவவும் வேண்டும் என்ற விஷயம் இதிலிருந்து தெரியவருகிறது.

وَقَاتِلُوهُمْ حَتَّىٰ لَا تَكُونَ فِتْنَةٌ وَيَكُونَ الدِّينُ لِلَّهِ ۖ فَإِنِ انْتَهَوْا فَلَا عُدْوَانَ إِلَّا عَلَى الظَّالِمِينَ

193. இன்னும் இணை வைத்தல் காணப்படாமல், வணக்கம் அல்லாஹ்வுக்கே (உரியதாக) ஆகும் வரையில் அவர்களிடம் யுத்தம் செய்யுங்கள். பிறகு அவர்கள் (இணை வைத்தலைத்) தவிர்த்துக் கொண்டால் அநியாயக்காரர்கள் மீதே தவிர (வேறு எவருடனும்) பகை எண்ணம் கூடாது.

“**இணை வைத்தல் காணப்படாமல், வணக்கம் அல்லாஹ் வுக்கென்று ஆகும் வரை**” என்பதற்கு அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவ வேண்டும் என்பது கருத்து. ஏனெனில், நிராகரிப்பாளர்களாகிய இணைவைப்பவர்களிடம் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுவதைத் தவிர வேறு எக்காரியத்தையும் ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது.

ஒருவர் நிராகரிப்பை விட்டு நீங்கி விட்டால் அவர் அநியாயக்காரரென்று அவர் மீது பகையெண்ணம் கூடாது. இதனைக் குறித்துத்தான் “**அநியாயக்காரர்கள் மீதே தவிர (வேறு எவருடனும்) பகை எண்ணம் கூடாது**” என்று மேற்கண்ட ஆயத்தில் இறைவன் கூறி இருக்கிறான்.

الشَّهْرُ الْحَرَامُ بِالشَّهْرِ الْحَرَامِ وَالْحُرُمَاتُ قِصَاصٌ ۚ فَمَنِ اعْتَدَىٰ عَلَيْكُمْ فَاعْتَدُوا عَلَيْهِ بِمِثْلِ مَا اعْتَدَىٰ عَلَيْكُمْ ۚ وَاتَّقُوا اللَّهَ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ مَعَ الْمُتَّقِينَ

194. (போரிடுவது விலக்கப்பட்டுள்ள நான்கு மாதங்களில்) புனித மாதத்திற்குப் பதிலாக புனிதமான மாதமே பகரமாகும் (அவற்றின் கண்ணியம் எவராலும் சீர் குலைக்கப்பட்டால் அவரிடம்) பழிவாங்கப்படும். எனவே எவரேனும் ஒருவர் உங்கள் மீது வரம்பு மீறினால் அவர் உங்கள் மீது வரம்பு மீறியது போன்று நீங்களும் வரம்பு மீறுங்கள்; மேலும், நீங்கள் (வரம்பு மீறுவதில்) அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். இன்னும், நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுள்ளவர்களுடன் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

ஹிஜ்ரீ 6வது வருடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஸஹாபிகளும் உம்ராச் செய்வதற்காக மக்கமா நகரை நோக்கி வந்தார்கள். அப்பொழுது நிராகரிப்பாளர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் ஸஹாபி களையும் மக்கத்திற்கு வரக்கூடாதென்று தடை செய்ததுடன் அம்புகளையும், கற்களையும் கொண்டு முஸ்லிம்கள் மீது எறிந்தனர். பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும்

மக்கத்து இணைவைப்பாளர்களுக்கும் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்படிக்கை ஹுதைபிய்யாவில் நடைபெற்றதால் இதற்கு ஹுதைபிய்யா உடன்படிக்கை என்று பெயர். இந்தச் சம்பவம் துல்கஅதா மாதத்தில் நிகழ்ந்தது. இந்த மாதம் புனிதமான மாதங்களில் ஒன்றாக இருப்பதால் முஸ்லிம்கள் அச்சமயம் பதிலுக்குப் பதில் தாக்கவில்லை. பிறகு, அதற்கடுத்த 7ம் வருடத்தில் அவ்வுடன் படிக்கையின் நிபந்தனையின்படி உம்ராச் செய்வதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தோழர்களும் மதீனா முனவ்வராவை விட்டு மக்காபுரிக்கு வந்தார்கள். அவர்கள் புறப்பட்டு வந்த மாதமும் அதே துல்கஅதா மாதமாக இருந்தது. ஆதலால், மக்கத்து இணைவைப்பாளர்கள் உடன்படிக்கை நிபந்தனைகளை மீறி யுத்தத்தை ஆரம்பித்து விட்டால் ஷஹ்ருல் ஹராமாகிய புனிதமான மாதமாக இருப்பதால் பதிலுக்குப்பதில் யுத்தம் செய்ய முடியாதே என்று முஸ்லிம்கள் கவலைப்பட்டார்கள். ஆகவே, புனிதமான மாதத்தில் இணைவைப்பாளர்கள் போரை ஆரம்பித்தால் முஸ்லிம்களும் அந்த மாதத்தில் பதிலுக்குப்பதில் தாக்க வேண்டியதுதான் என்பதையும், மாதத்தினுடைய புனிதத்தையோ அல்லது இஹ்ராம் கட்டியிருப்பதன் புனிதத்தையோ அல்லது ஹரம் ஷரீஃபினுடைய புனிதத்தையோ வேறு எந்த புனிதத்தையோ குலைப்பார்களாயின் அதற்கு அதே மாதத்தில் பதிலுக்குப் பதில் செய்யலாம் என்பதையும், அந்த மாதத்தினுடைய புனிதத்தைப் பேணி நடந்து கொள்பவரிடம்தான் முஸ்லிம்களும் பேணி நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் இந்த ஆயத்தில் இறைவன் விளக்கிக் கூறி இருக்கிறான்.

وَأَنفِقُوا فِي سَبِيلِ اللَّهِ وَلَا تُلْقُوا بِأَيْدِيكُمْ إِلَى
التَّهْلُكَةِ ۛ وَأَحْسِنُوا ۛ إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُحْسِنِينَ ۝

195. மேலும், நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுங்கள்; இன்னும், உங்கள் கைகளை அபாயத்திற்குள்ளாக்கிக்

கொள்ளாதீர்கள். ஆனால், நீங்கள் நன்மை செய்யுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்கிறவர்களை நேசிக்கிறான்.

ஸபீலுல்லாஹ் அதாவது **அல்லாஹ்வின் பாதை** என்பதற்கு இவ்விடத்தில் அல்லாஹுதஆலாவுடைய கிருபையும், நற்கூலியும் கிடைக்கக் கூடிய காரியங்கள் என்பது கருத்து. ஆகவே **அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுங்கள்** என்பது அவனது சன்மார்க்கத்தின் கௌரவத்தை நிலைநாட்டுவதற்காகச் செலவு செய்யுங்கள் என்பது விளக்கமாகும். ஆகவே, ஹஜ்ஜு உம்ராச் செய்வதற்காகவும், உறவினர்களுக்கு உதவியாகவும், ஏழை எளியோருக்கு உபகாரமாகவும் குடும்பத்தினரை போஷிப்பதற்காகவும், மார்க்க யுத்தத்திற்காகவும், மேலும் செலவு செய்யும்படி அல்லாஹு தஆலா கூறியுள்ள இதர காரியங்களிலும் செலவு செய்வது அனைத்தையும் இந்த ஆயத்து பொதிந்து கொண்டிருக்கிறது.

மனிதர் செய்யும் காரியங்களில் பெரும்பாலானவை கைகளினாலேயே நிகழ்வதால் இந்த இடத்தில் கைகள் கூறப்பட்டன. ஆகவே, கைகள் என்பதால் மனிதருக்குள்ள இரு கரங்கள் மட்டும் கருதப்படவில்லை. உடல் முழுவதையுமே கருதப்பட்டிருக்கிறது. எனவே, **உங்கள் கைகளை அபாயத்திற்குள்ளாக்கிக் கொள்ளாதீர்கள்** என்பதற்கு பணத்தை வீணாக செலவு செய்யாதீர்கள், ஜீவனோ பாயங்களைச் செய்யாமல் வீணாக இருந்து விடாதீர்கள், மார்க்க யுத்தத்திலும், அதற்குரிய முஸ்திப்புகளிலும் செலவு செய்யாதிருந்து விடாதீர்கள் என்பது கருத்தாகும். ஏனெனில், ஜீவனோபாயத்திற்குரிய காரியங்களைச் சரியாக கவனிக்காமல் வீண் விரயம் செய்து கொண்டிருப்பதாலும், மார்க்க விரோதிகளை அடக்குவதற்கு உதவி புரியாமலிருப்பதாலும் ஜனங்களுக்கு ஆபத்துகளும் கஷ்டங்களும் சம்பவிக்கின்றன. ஆதலின், இப்படிப்பட்ட காரியங்களில் ஜாக்கிரதையாக இருந்து முன்னதாகவே தக்கன செய்ய வேண்டும் என்பதை இறைவன் இங்கு எச்சரிக்கை செய்துள்ளான்.

وَأَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلَّهِ ۚ فَإِنْ أُحْصِرْتُمْ فَمَا

اسْتَيْسَرَ مِنَ الْهَدْيِ ۖ وَلَا تَحْلِقُوا رُءُوسَكُمْ حَتَّىٰ
يَبْلُغَ الْهَدْيُ مَحِلَّهُ ۚ فَمَن كَانَ مِنكُم مَّرِيضًا
أَوْ بِهِ أَذًى مِّن رَّأْسِهِ فَفِدْيَةٌ مِّن صِيَامٍ أَوْ
صَدَقَةٍ أَوْ نُسُكٍ ۚ فَإِذَا أَمِنتُمْ فَمَن تَمَتَّعَ بِالْعُمْرَةِ
إِلَى الْحَجِّ فَمَا اسْتَيْسَرَ مِنَ الْهَدْيِ ۚ فَمَن لَّمْ
يَجِدْ فَصِيَامُ ثَلَاثَةِ أَيَّامٍ فِي الْحَجِّ وَسَبْعَةٍ إِذَا
رَجَعْتُمْ ۗ تِلْكَ عَشَرَةٌ كَامِلَةٌ ۗ ذَٰلِكَ لِمَن لَّمْ يَكُنْ
أَهْلُهُ حَاضِرِي الْمَسْجِدِ الْحَرَامِ ۚ وَاتَّقُوا اللَّهَ
وَاعْلَمُوا أَنَّ اللَّهَ شَدِيدُ الْعِقَابِ ۝

196. மேலும், அல்லாஹ்வுக்காக நீங்கள் ஹஜ்ஜையும், உம்ராவையும் பூர்த்தி செய்யுங்கள். ஆயினும், (இதை நிறைவேற்றுவதில்) நீங்கள் தடுக்கப் பட்டால் பலியில் நின்றும் இலேசானது (ஓர் ஆட்டையேனும் அறுத்துப் பலியிடுதல் உங்கள் மீது விதிக்கப்பட்டிருக்கிறது). ஆனால் பலிக்குரிய பிராணி அதன் இடத்தை அடையும் வரை உங்களது தலை (முடி)யை சவரஞ் செய்து கொள்ளாதீர்கள். எனவே உங்களில் எவரேனும் நோயாளியாகவோ அல்லது அவருக்கு அவருடைய தலையில் நோயுள்ளவராகவோ இருந்தால் நோன்பு நோற்பதனாலும் அல்லது தர்மம் செய்வதனாலும் அல்லது (பலிக்குரிய உயிர்ப்பிராணியை) அறுப்பதனாலும் பகரம் கொடுக்க வேண்டும். ஆகவே, நீங்கள் அச்சந்தீர்ந்திருந்தால்; ஹஜ்ஜுடன், உம்ராவையும் செய்ய விரும்புபவனுக்குப் பலியில் நின்றும் இலேசானது (ஓர்

ஆட்டையேனும் அறுத்துக் குர்பானி செய்தல் வேண்டும்) ஆனால், (அதைப்) பெற்றுக் கொள்ளாதவர்கள் ஹஜ்ஜில் மூன்று நோன்புகளும் (வீட்டுக்குத்) திரும்பிய பின்பு ஏழு நோன்புகளும் (நோற்றல் வேண்டும்). இவைகள் பரிபூரணமான பத்து (நோன்புகள்) ஆகின்றன. இ(வ்விதியான)து எவருடைய வீட்டுக்காரர் (அதாவது வீடு) மஜ்ஜிதுல்ஹராமில் இல்லையோ அவருக்குத்தான். மேலும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் (மாறு செய்பவர்களை) வேதனை செய்வதில் மிகக் கடுமையானவன் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

“இன்னும் ஹஜ்ஜையும் உம்ராவையும் அல்லாஹ்வுக்காக பூர்த்தி செய்யுங்கள்” என்று இறைவன் கட்டளை யிட்டதற்குக் காரணம் முற்காலத்திலிருந்த அறபியர்கள் கூட்டங் கூடுவதற்காகவும், கடைகளை ஏற்படுத்தி வியாபாரம் செய்வதற்காகவும், தங்களுடையவும் தங்கள் முன்னோர்களினுடையவும் அருமை பெருமைகளைப் பிறருக்குச் சொல்லிக் காண்பிப்பதற்காகவும் ஹஜ்ஜுச் செய்ய திருமக்காவுக்கு வருவது வழக்கம். இந்நோக்கத்திற்காக செய்யப்படும் ஹஜ் அல்லாஹு தஆலாவிற்குச் செய்யும் வணக்கமாக இல்லை. ஆகவே, இவ்வாறான எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு ஹஜ்ஜு உம்ரா ஆகியவற்றை நிறைவேற்றாமல், அல்லாஹு தஆலாவிற்காகவே அவற்றை நிறைவேற்றுங்கள் என்று குறிப்பிட்டுக் கூறி இருக்கிறான்.

எனவே, ஒருவர் ஹஜ்ஜு அல்லது உம்ராச் செய்வதற்கென்று இஹ்ராம் கட்டிய பின் நோயினாலோ அல்லது பகைவர்களினாலோ வேறு காரணத்தாலோ ஹஜ்ஜு அல்லது உம்ராவை நிறைவேற்ற முடியாமல் தடுக்கப்பட்டு விட்டால் அவர் பலியிடுவதற்காக ஹதியு அனுப்ப வேண்டும் அதை அறுத்துப் பலியிட்டபின் இஹ்ராமை விட்டு விலகிக் கொள்ளலாம். ஹத்யு என்பது பன்மைச் சொல். திருமக்காவிலுள்ள கஃபா என்னும் இறை ஆலயத்தில் அறுத்துப் பலியிடுவதற்காக அனுப்பப்படும் ஆடு, மாடு ஒட்டகை ஆகிய இம்மூவகைப் பிராணிகளையும் குறிக்கும். இவற்றில் மிகவும்

இலேசானது ஆடு, நடுத்தரமானது மாடு, உயர்ந்தது ஒட்டகை ஆகியவைகளாகும். ஹனஃபி மதுஹபின் படி இந்த ஹத்யு ஹரம் ஷரீஃபுக்கு அனுப்பப்பட்டு அங்கு அறுக்கப்பட வேண்டும். ஷாஃபிஈ மதுஹபின்படி இந்த ஹத்யை எந்த இடத்திலும் அறுத்து குர்பானி செய்யலாம்.

ஹஜ்ஜு அல்லது உம்ராவுக்குச் செல்வதற்கு இஹ்ராம் கட்டியபின் நோயாளியாகி விட்டாலும், அல்லது தலையில் புண் அல்லது பேன் போன்ற ஏதேனும் ஒரு நோயுண்டாகி ஹஜ்ஜு அல்லது உம்ராச் செய்வதற்கு முன் தலை முடியைச் சிறைத்துக் கொள்ள அல்லது வெட்டிவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு அவ்விதம் செய்து விட்டால் அக்குற்றத்திற்கு பரிகாரமாக மூன்று நாள் நோன்பு நோற்க வேண்டும் அல்லது ஆறு ஏழைகளுக்கு ஆள் ஒன்றுக்கு அரை மரக்கால் வீதம் மூன்று மரக்கால் மணிக்கோதுமை அளிக்க வேண்டும் அல்லது ஆடு மாடு ஒட்டகை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை அறுத்துக் குர்பானி கொடுக்க வேண்டும்.

எனவே, ஹஜ்ஜு அல்லது உம்ராவுக்காக இஹ்ராம் கட்டிய பின் தடை ஏற்படாமலும், இஹ்ராமுக்கு விரோதமான காரணம் ஏற்பட்டு தலை மயிரைச் சிறைத்துக் கொள்ள அல்லது வெட்டிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாமலுமிருந்து உம்ராச் செய்து முடித்த பின் இஹ்ராமை முறித்து விட்டு சாதாரணமான ஜனங்களைப் போல் இருந்து விட்டு பின்னர் மறுபடியும் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டினால் அல்லது ஹஜ்ஜுடைய மாதத்தில் ஹஜ்ஜுச் செய்வதற்கு முன்னர் உம்ராச் செய்தால் ஆடு, மாடு ஒட்டகை ஆகியவற்றில் இலேசானதைப் பலியிட வேண்டும். இவ்வாறான பலி மிருகத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் ஹஜ்ஜுடைய காலத்தில் மூன்று நோன்புகளும், ஹஜ்ஜுச் செய்து முடிந்த பின்பு 7 நோன்புகளுமாக 10 நோன்புகள் நோற்க வேண்டும். இவ்விதமாக தமத்துஉ செய்வது மக்காவிற்கு வெளியில் வசிப்பவர்களுக்கேயாகும். மக்காவிலிருப் பவர்கள் ஹஜ்ஜுடைய மாதத்தில் ஹஜ்ஜையும் மற்றைய காலத்தில் உம்ராவையும் தனித்தனியே நிறைவேற்ற வேண்டும்.

ஹஜ்ஜு மூன்று வகைப்படும். ஹஜ்ஜுடைய மாதத்தில் ஹஜ்ஜையும் மற்றைய காலத்தில் உம்ராவையும் தனித்தனியே நிறைவேற்றல் ஒரு வகை. ஹஜ்ஜுடைய மாதத்தில் உம்ராவை முதலில் நிறைவேற்றிவிட்டு இஹ்ராமை முறித்து, சாதாரணமான ஜனங்களைப் போல் இருந்து விட்டுப் பின்னர் மறுபடியும் இஹ்ராம் கட்டி ஹஜ்ஜை நிறைவேற்றுதல் மற்றொரு வகை. முதலில் ஹஜ்ஜை நிறைவேற்றி விட்டு, அதே இஹ்ராமில் உம்ராச் செய்வது ஒருவகை. எனவே, இந்த ஆயத்தின் இறுதியில் மேற்கண்ட இரண்டாவது வகையைப் பற்றிய விதிவிலக்குகள் கூறப்பட்டிருக்கின்றன.

اَلْحَجُّ اَشْهُرٌ مَّعْلُوْمٰتٌ ۚ فَمَنْ فَرَضَ فِيْهِنَّ الْحَجَّ
فَلَا رَفَثَ وَلَا فُسُوْقَ ۙ وَلَا جِدَالَ فِى الْحَجِّ ؕ وَمَا
تَفْعَلُوْا مِنْ خَيْرٍ يَّعْلَمْهُ اللّٰهُ ؕ وَتَزَوَّدُوْا فَاِنَّ
خَيْرَ الزَّادِ التَّقْوٰى ۚ وَاتَّقُوْنِ يٰۤاُولِى الْاَلْبَابِ ۝

197. ஹஜ்ஜு (ச் செய்வதற்குரிய காலம்) ஆனது (நன்கு) அறியப்பட்ட மாதங்களாக இருக்கும். ஆகவே, அவற்றில் ஒருவன் ஹஜ்ஜை (த்தன் மீது) கடமையாக்கிக் கொண்டால் ஹஜ்ஜில் உடலுறவு கொள்வதும் பாவஞ் செய்தலும் சச்சரவு செய்தலும் கூடாது; மேலும், நீங்கள் யாதேனும் ஒரு நன்மையைச் செய்தால் அதை அல்லாஹ் அறிவான். நீங்கள் (வழிப்பிரயாணத்திற்காக) கட்டமுது (தயார்) செய்து கொள்ளுங்கள். ஏனெனில் நிச்சயமாக கட்டமுதில் சிறந்தது (யாசகம் கேட்பதைத்) தவிர்த்துக் கொள்வதுதான். அறிவுடையோரே! என்னை அஞ்சுவீர்களாக.

ஷவ்வால், துல்கஅதா ஆகிய இரண்டு மாதங்களும் துல்ஹஜ்ஜு மாதத்தில் முதல் பத்து நாட்களும் ஹஜ்ஜுடைய காலமாகும். எனவே, ஒருவர் இந்த மாதங்களில் ஹஜ்ஜுச் செய்வதாக நிய்யத்துச் செய்து இஹ்ராமும் கட்டி ஹஜ்ஜுச் செய்வதைத் தம் மீது கடமையாக்கிக் கொண்டால் அவர் உடலுறவு கொள்ளுதல், கலவி

செய்தல் முதலிய காரியங்களைச் செய்யவும் கூடாது, திட்டுதல், கேவலமாகப் பரிகசித்துக் கூறல் முதலிய பாவச் செய்கைகளைச் செய்யவும் கூடாது, தனது வேலைக்காரர்கள் நண்பர்கள் மற்றவர்களுடன் சண்டை சச்சரவு செய்யவும் தர்க்கம் செய்யவும் கூடாது.

ஹதீஸ்:- "ஒருவர் ஹஜ்ஜுச் செய்வதற்காக இஹ்ராம் கட்டி உடலுறவு கொள்வதையும் ஃபாஸிக்கான காரியங்களைச் செய்வதையும் விட்டு விடுவாராயின் அவர் அன்று பிறந்த பாலகனைப் போல் பாவத்தை விட்டுச் சுத்தமாகி விடுகிறார்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

யமன் தேசத்திலுள்ள சிலர் வழிப்பயணத்திற்கு வேண்டிய பொருட்கள் எதையும் தயார் செய்து கொள்ளாமல், 'அல்லாஹு தஆலா எங்களுக்கு உணவளிப்பான்' என்று கூறிக் கொண்டு ஹஜ்ஜுக்கு வந்ததுடன் ஜனங்களிடம் தங்கள் உணவுக்காக யாசகம் கேட்டு அவர்களைத் தொந்தரவும் செய்தார்கள். இதில் போதிய அளவு கிடைக்காததால் களவு, கொள்ளை முதலிய காரியங்களையும் செய்தார்கள். ஆகவே, இதனைக் குறித்து இறைவன் **"நீங்கள் (வழிப்பிரயாணத்திற்காக) கட்டமுது (தயார்) செய்து கொள்ளுங்கள்"** என்ற ஆயத்தை அருளினான்.

அறிந்துகொள்:- இவ்வுலகில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதற்குக் கட்டமுது, தண்ணீர், பணம், பொருள் முதலியவைகள் தேவையாக இருப்பதுபோலே, மறு உலக யாத்திரை செல்வதற்கும் கட்டுச் சாதம் தேவையாக இருக்கிறது. அல்லாஹு தஆலாவை அறியும்படியான மெஞ்ஞானம் இறைவன்பால் பிரியம், அவனுக்கு கீழ்ப்படியும் விஷயத்தில் அவன் அல்லாத மற்றவைகளை விட்டுத் திரும்புதல், அவனுக்கு விருப்பமில்லாதவைகளைச் செய்யாது தவிர்த்தல் ஆகியவைகள் மறு உலக பயணத்திற்குரிய கட்டுச் சாதங்களாகும். இவை உலகத்தைய பிரயாணிக்கு வேண்டிய கட்டுச் சாதங்களைப் பார்க்கினும் சிறந்தவைகளாகும். ஏனெனில், இவ்வுலகத்தைய பிரயாணிகள் தங்களுக்கு உதவியாக வைத்துக்

கொள்ளும் கட்டுச் சாதம் முதலியவைகள் அழிந்து போகக் கூடியனவாகவும் முடிவுள்ள ஒரு கஷ்டத்தை நீக்குபனவாகவும் இருக்கின்றன. மறு உலக பயணத்திற் குரிய கட்டுச் சாதங்களாகிய மேற்கூறப்பட்டவைகள் நிரந்தரமானவைகளாகவும் என்றும் அழியாதனவாகவும் உள்ள இன்பத்தின்பால் சேர்ப்பனவாகவும், ஊழிகாலம் வேதனையில் அகப்படுவதை விட்டுக் காப்பாற்று வனவாகவும் இருக்கின்றன.

لَيْسَ عَلَيْكُمْ جُنَاحٌ أَنْ تَبْتَغُوا فَضْلًا مِنْ رَبِّكُمْ ۚ فَإِذَا أَفَضْتُمْ مِنْ عَرَفَاتٍ فَاذْكُرُوا اللَّهَ عِنْدَ الْمَشْعَرِ الْحَرَامِ ۖ وَاذْكُرُوهُ كَمَا هَدَاكُمْ وَإِنْ كُنْتُمْ مِنْ قَبْلِهِ لَمِنَ الضَّالِّينَ ۝

198. (ஹஜ்ஜுச் செய்யும்போது அவ்விடத்தில் வியாபாரம் செய்து) நீங்கள் உங்கள் ரப்பிடமிருந்துள்ள இலாபத்தைச் சம்பாதித்துக் கொள்வது உங்கள் மீது குற்றமில்லை. எனவே, நீங்கள் அரஃபாத்தை விட்டுப் புறப்பட்டால் மஷ்அருல் ஹராம் என்ற இடத்தில் (தங்கி) அல்லாஹ்வை ஞாபகம் செய்யுங்கள்; மேலும், இதற்குமுன் நீங்கள் வழி கெட்டவர்களில் ஆகியிருந்த போதிலும் உங்களுக்கு (அவன்) நேர்வழி காட்டியதுபோல அவனை ஞாபகஞ் செய்யுங்கள்.

ஹஜ்ஜுக்குச் சென்றவர்கள் ஹஜ்ஜுடைய காலத்தில் வியாபாரம் செய்து லாபம் சம்பாதிப்பதை சிலர் குற்றமாகக் கருதி வெறுத்தனர். இதனைக் குறித்து இறைவன் **"(வியாபாரம் செய்வதன் மூலம்) நீங்கள் உங்களது றப்பிடமிருந்துள்ள லாபத்தை சம்பாதித்துக் கொள்வது உங்கள் மீது குற்றமில்லை"** என்று கூறி இருக்கிறான்.

فَاذْكُرُوا اللَّهَ **அல்லாஹ்வை ஞாபகம் செய்யுங்கள்** என்பதற்கு தல்பியா ஓதுதல், லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கலிமா ஓதுதல், தஸ்பீஹு செய்தல், தஹ்மீது என்னும் ஸ்தோத்திரம் சொல்லல், பிரார்த்தனை புரிதல் முதலியவைகள் என்பது கருத்து.

மஷ்அருல் ஹராம் என்பது முஸ்தலிஃபாவிலுள்ள கஜஹ் என்னும் மலையைச் சுட்டிக் காண்பிக்கிறது. இதில் ஹாஜிகளுக்கு இமாமத்துச் செய்பவர் தங்குவார். இந்த மலையிலும் இதனைச் சேர்ந்த முஸ்தலிஃபாவிலும் ஹாஜிகள் தங்க வேண்டும்.

ثُمَّ أَفِيضُوا مِنْ حَيْثُ أَفَاضَ النَّاسُ وَاسْتَغْفِرُوا اللَّهَ ۚ إِنَّ اللَّهَ غَفُورٌ رَّحِيمٌ ﴿١٩٩﴾

199. பின்பு நீங்கள் மற்ற மனிதர்கள் செல்லுமிடத்திலிருந்து (அதாவது அரஃபாவிலிருந்து மக்காவுக்குச்) செல்லுங்கள். மேலும், அல்லாஹ்விடத்தில் பாவ மன்னிப்புக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பாவமன்னிப்புச் செய்பவன்; பேரன்புடையோன்.

இஸ்லாத்திற்கு முன்னர், அறபியர்கள் ஹஜ்ஜுச் செய்யும் போது அனைவரும் அறஃபாவில் போய் தங்குவார்கள். ஆனால், குறைஷியார்களும் அவர்களுடன் நேச உடன்படிக்கை செய்திருப் பவர்களும் அறஃபாவிற்குச் செல்லாமல் முஸ்தலிஃபாவிலேயே தங்கி விடுவார்கள். இவர்கள் ஹரம் ஷரீஃபுக்குள் அதாவது மக்காவில் குடியிருப்பதாலும் அல்லாஹு தஆலாவுக்கு உகந்தவர்களாக இருப்பதாகத் தங்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்ததாலும் ஹரமுக்கு வெளியிலுள்ள அறஃபாவில் மற்றவர்களுடன் சேர்ந்து தங்கி இருப்பது தங்களுக்கு இழுக்கு என்பதாகக் கருதிக் கொண்டிருந்தனர். ஜனங்கள் அறஃபாவிலிருந்து திரும்ப வரும்போது இவர்கள் முஸ்தலிஃபாவிலிருந்து திரும்ப வருவார்கள். இதனை மறுத்து இறைவன் இந்த ஆயத்தில் அனைவரும் எந்த இடத்திலிருந்து திரும்பிச் செல்கின்றனரோ அந்த இடத்திலிருந்து அதாவது அறஃபா விலிருந்து நீங்களும் திரும்பிச் செல்லுங்கள் என்பதாகக் கூறியுள்ளான்.

فَإِذَا قَضَيْتُم مَّنَاسِكَكُمْ فَاذْكُرُوا اللَّهَ كَذِكْرِكُمْ آبَاءَكُمْ أَوْ أَشَدَّ ذِكْرًا ۗ فَمِنَ النَّاسِ مَن يَقُولُ

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا وَمَا لَهُ فِي الْآخِرَةِ مِنْ خَلَاقٍ ﴿٢٠٠﴾

200. எனவே, (ஹஜ்ஜு சம்பந்தமான) உங்களுடைய வணக்கங்களை நீங்கள் நிறைவேற்றி விட்டால் (முற்காலத்தில்) உங்கள் மூதாதையர்களை நீங்கள் ஞாபகப்படுத்துவதேபோல் அல்லது அதைப்பார்க்கிலும் அதிகமாக அல்லாஹ்வை ஞாபகப்படுத்துங்கள்; ஆதலால், எங்கள் ரப்பே! (எங்களுக்குரிய பாக்கியத்தை) உலகத்திலேயே எங்களுக்குக் கொடுத்துவிடு என்று (பிரார்த்தித்துக்) கூறுவோரும் மனிதர்களில் உண்டு. ஆனால், அவர்களுக்கு (அவ்வாறே கொடுக்கப்படுவதால்) மறுமையில் எவ்விதப் பங்குமில்லை.

ஹஜ்ஜு முடிந்தவுடன் குறைஷியார் கஅபாவில் ஒன்று கூடி இருந்து கொண்டு தங்கள் மூதாதையரின் பெருமைகளையும் செல்வாக்குகளையும் பற்றிக் கூறுவார்கள். இப்படிப் பேசுவதன் மூலம் தங்களுக்குப் பிரபல்யத்தையும் உயர்வையும் தேடிக் கொள்வது அவர்களது கருத்தாக இருந்தது. ஆகவே, அதனைக் கண்டித்து இறைவன் உங்கள் மூதாதையரைப் பற்றிப் பேசாமல் அல்லாஹு தஆலாவுடைய புகழையும் ஸ்தோத்திரத்தையும் பற்றிக் கூறுங்கள் என்பதாக அறிவித்துள்ளான். முற்காலத்திலுள்ள அறபியர்கள் மினாவில் மலைக்கும் மஸ்ஜிதுக்கு மிடையிலுள்ள இடத்தில் ஒன்று கூடி மேற்கண்டவாறு தங்கள் மூதாதையரின் பெருமைகளைப் பற்றிக் கூறுவது வழக்கமென்றும் அதனைக் கண்டித்து இறைவன் இந்த ஆயத்தை அருளினான் என்றும் **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** எழுதப்பட்டிருக்கிறது.

நிராகரிப்பாளர்கள் முற்காலத்தில் ஹஜ்ஜுச் செய்யும் போது இவ்வுலகத்தில் தங்களுக்குச் செல்வம் பாக்கியம் முதலியவைகள் வேண்டும் என்பதாகப் பிரார்த்திப்பது வழக்கம். இவர்களது இவ்வழக்கத்தைக் குறித்து இறைவன் **"எங்கள் றப்பே!**

இவ்வுலகிலேயே எங்களுக்குக் கொடுத்து விடு என்பதாகக் கேட்போரும் மனிதரில் இருக்கிறார்கள்" என்று இவ்வசனத்தில் கண்டித்துக் கூறியுள்ளான்.

وَمِنْهُمْ مَنْ يَقُولُ رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ ۝

201. இன்னும், எங்கள் ரப்பே! எங்களுக்கு உலகத்திலும் நன்மையைக் கொடுப்பாயாக, இன்னும் மறுமையிலும் நன்மையை (க்கொடுப்பாயாக), இன்னும் நரக வேதனையை விட்டு எங்களைக் காப்பாற்றுவாயாக என்று (பிரார்த்தித்துக்) கூறுவோரும் அவர்களில் உள்ளனர்.

இந்த ஆயத்திலும் ஹஜ்ஜுக்குச் சென்றவர்கள் கேட்கும் பிரார்த்தனையின் விபரம் கூறப்பட்டிருக்கிறது. உலகத்தில் நன்மை என்பது உடல் ஆரோக்கியம், போதியளவு ஜீவனோபாயம் முதலியவை களாகும். மறு உலகில் நன்மை என்பது இறைவனால் அளிக்கப்படும் நற்கூலியும் கருணையுமாகும். **ஹஸனத்துன்** அதாவது நன்மை என்பது இரு உலகிலுமுள்ள சகல பாக்கியங்களையும் பொதிந் திருக்கிறது என்பதாக **தைஸீர்** என்ற கிரந்தத்தில் எழுதப் பட்டிருக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த துஆவை அதிகமாக ஓதிக் கொண்டிருந்தார்கள்.

أُولَٰئِكَ لَهُمْ نَصِيبٌ مِمَّا كَسَبُوا ۚ وَاللَّهُ سَرِيعُ الْحِسَابِ ۝

202. இவர்கள்தாம் - இவர்களுக்கே இவர்கள் சம்பாதித்ததிலிருந்து பங்கு இருக்கிறது. மேலும், அல்லாஹ் கேள்வி கேட்பதில் தீவிரமுடையவன்.

இந்த ஆயத்தில் இரண்டாவது வகைக்கூட்டத்தினர் கேட்ட துஆவுக் குரிய பரிகாரத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. முதலாவது வகைக் கூட்டத்தினர் கேட்ட துஆவிற்கு 200 வது ஆயத்திலேயே وَمَا لَهُ فِي الْآخِرَةِ مِنْ خَلَاقٍ **அவர்களுக்கு மறுமையில் (எவ்விதப்) பங்குமில்லை** என்பதாக கூறப்பட்டிருக்கிறது.

وَاذْكُرُوا اللَّهَ فِي أَيَّامٍ مَعْدُودَاتٍ ۚ فَمَنْ تَعَجَّلَ فِي يَوْمَيْنِ فَلَا إِثْمَ عَلَيْهِ وَمَنْ تَأَخَّرَ فَلَا إِثْمَ عَلَيْهِ ۚ لِمَنِ اتَّقَىٰ ۗ وَاتَّقُوا اللَّهَ وَاعْلَمُوا أَنَّكُمْ إِلَيْهِ تُحْشَرُونَ ۝

203. மேலும், எண்ணிக்கையுடைய மூன்று நாட்களில் நீங்கள் (மினா என்னுமிடத்திலிருந்து கொண்டு) அல்லாஹ்வை நினைவு கூருங்கள்; ஆனால், எவரேனும் (குறிப்பிட்ட மூன்று தினங்களை) இரண்டே நாட்களுடன் (முடித்துக் கொண்டு) துரிதமானால் (அதற்காக) அவர் மீது குற்றமில்லை. இன்னும், எவரேனும் (குறிப்பிட்ட நாட்களுக்குப்) பிந்தினால் (அதற்காகவும்) அவர் மீது எவ்விதக் குற்றமுமில்லை. (இது அல்லாஹ்வை) அஞ்சுபவர் களுக்காயிருக்கும். எனவே, நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். மேலும், நிச்சயமாக நீங்கள் அவனிடத்திலேயே (மரணத்திற்குப் பின்பும்) எழுப்பப் படுவீர்களென்பதை அறிந்து கொள்ளுங்கள்.

துல்ஹஜ்ஜு மாதம் 11,12,13 வது நாட்களில் ஹாஜிகள் மினாவிலிருந்து குறிப்பிட்ட இடத்தில் கல்லெறிய வேண்டும். குறிப்பிட்ட அந்தச் சில நாட்களில் கல்லெறியும் போதும், தொழுகைக்குப் பிறகும் அல்லாஹு தஆலாவினது தக்பீர் சொல்லும்படி இந்த ஆயத்தில் கூறப்பட்டிருப்பதுடன், இந்த மூன்று நாட்களில் இரண்டு நாட்கள் கல்லெறிந்தவுடன் மினாவை விட்டு மக்காவுக்கு வந்து விடுவது குற்றமில்லை என்பதையும் மூன்றாவது நாளில் கல்லெறிந்து விட்டு

மினாவை விட்டுப் புறப்பட்டு வருவதும் குற்றமில்லை என்பதையும் விளக்கி இருக்கிறான்.

وَمِنَ النَّاسِ مَن يُعْجِبُكَ قَوْلُهُ فِي الْحَيَوٰةِ الدُّنْيَا وَيُشْهِدُ اللَّهَ عَلَىٰ مَا فِي قَلْبِهِ وَهُوَ أَلَدُّ الْخِصَامِ

204. மேலும், மனிதரில் சிலருண்டு. அவருடைய சொல் உம்மை (இவ்) அற்ப (உலக) வாழ்வில் ஆச்சரியப்படுத்துகிறது. இன்னும், தனது இருதயத்திலிருப்பதைப் பற்றி அவன் அல்லாஹ்வை சாட்சியாக்குகிறான். இன்னும், அவன் (உம்மிடம்) வாக்குவாதஞ் செய்வதில் மிகக் கடுமையானவன்.

அக்னஸுப்னு ஷரீபித்தக்பீ என்ற பெயருள்ள ஒருவன் மிக அழகானவனாகவும், இனிமையாக பேசுபவனாகவும் இருந்தான். இவன் தன்னை முஸ்லிமென்றும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பால் தனக்கு அதிக அன்பு உண்டென்றும் சொல்லிக் கொண்டிருந்தான். ஆயினும் அகத்தில் முஸ்லிம்கள் பாலும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாலும் அதிகப் பகைமை கொண்டிருந்தான். இவனது இந்நயவஞ்சகத் (முனாஃபிக்)தனத்தை இந்த ஆயத்தின் இறைவன் வெளிப்படுத்தி இருக்கிறான்.

وَإِذَا تَوَلَّىٰ سَعَىٰ فِي الْأَرْضِ لِيُفْسِدَ فِيهَا وَيُهْلِكَ الْحَرْثَ وَالنَّسْلَ وَاللَّهُ لَا يُحِبُّ الْفَسَادَ

205. மேலும், அவன் (உம்மை விட்டுத்) திரும்பிச் செல்வானாயின், பூமியில் விஷமம் செய்வதற்காகவும், வேளாண்மையையும் (உயிர்ப்) பிராணியையும் அழிப்பதற்காகவுமே அதில் நடமாடுகிறான். ஆனால், அல்லாஹ் விஷமத்தை விரும்பமாட்டான்.

அல்லாஹு தஆலா ஜீவனோபாயங்களைச் சிருஷ்டித்த போது வெள்ளாண்மையிலும் பிராணிகளை வளர்த்து அவற்றின் வம்சத்தைப் பெருகச் செய்வதிலும் அபிவிருத்தி யென்னும் பரக்கத்தை வைத்திருக்கிறான் என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அவ்விரண்டையும் அழிப்பது மிகக் கடுமையான விஷமமாகும். இதற்கு முந்திய ஆயத்தில் கூறப்பட்டுள்ள அக்னஸுப்னு ஷரீபித் தக்பீ என்ற அந்த நயவஞ்சகன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது திருச்சமூகத்தை விட்டுச் சென்ற போது முஸ்லிம்களது பிராணிகளைக் கொன்றுவிட்டு, அவர்களது பயிர்களையும் நாசம் செய்து விட்டுச் சென்றான்.

وَإِذَا قِيلَ لَهُ اتَّقِ اللَّهَ أَخَذَتْهُ الْعِزَّةُ بِالْإِثْمِ فَحَسْبُهُ جَهَنَّمُ وَلَبِئْسَ الْمِهَادُ

206. மேலும், "அல்லாஹ்வை நீ அஞ்சிக்கொள்" என்று அவனுக்குக் கூறப்பட்டால், அவனுடைய பெருமை பாவத்தின் பக்கமே பிடித்துக் கொள்கிறது. எனவே அவனுக்கு நரகம் போதுமானது. மேலும், (நரகமாகிய) அந்தப் படுக்கை மிகக் கெட்டதாகும்.

"**அல்லாஹ்வை நீ அஞ்சிக் கொள் என்று அவனுக்கு கூறப்பட்டால் அவனுடைய பெருமை பாவத்தின் பக்கமே அவனைப் பிடித்துக் கொள்கிறது**" என்ற வசனத்திற்கு அவன் செய்யும் இவ்வடாச் செயலைப் பற்றி அவனைக் கண்டித்து இச்செய்கைகளைப் புரியும் விஷயத்தில் இறைவனை அஞ்சு என்று அவனிடம் கூறினால் அதனை அவன் விடாப் பிடியாக மீண்டும் மீண்டும் செய்கிறான்".

ஒருவனைப் பார்த்து "நீ அல்லாஹ்வை அஞ்சு" என்று கூறும் போது அதற்குப் பதிலாக அவன் "உன் வேலையை நீ பார்" என்று கூறுவானாயின், இப்படிக் கூறுவதைப் பார்க்கினும் பெரும் பாவம்

வேறொன்று மில்லை என்பதாக ஹளரத் அப்துல்லாஹிப்னு மஸ்ஊத் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَمِنَ النَّاسِ مَن يَشْرِي نَفْسَهُ ابْتِغَاءَ مَرْضَاتِ اللَّهِ ۗ وَاللَّهُ رَءُوفٌ بِالْعِبَادِ

207. இன்னும், அல்லாஹ்வின் திருப்திகளை நாடி (அதற்காக)த் தன் உயிரை விற்பவரும் மனிதர்களில் உண்டு. மேலும், அல்லாஹ் (தன்) அடியார்களின்பால் மிக்க கிருபையுள்ளவன்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா முனவ்வராவிலிருக்கும் போது ஸுஹைபுப்னு ஸனானிர்ரூமி ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களும் இன்னும் சில முஸ்லிம்களும் மக்காவை ஹிஜ்ரத்துச் செய்து மதீனா புரியை நோக்கிச் சென்றார்கள். அப்போது இவருக்கு வயது நூறு. மக்காவிலுள்ள இணை வைப்பாளர்கள் இவர்களைப் பின்றொடர்ந்து சென்று வழிமறித்து இவருடன் சென்றவர்களைக் கொன்று விட்டு ஹளரத் ஸுஹைப் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களை நோக்கி வந்தனர். அப்பொழுது அவர் தமது அம்பராக் கூட்டிலிருந்து அம்மை எடுத்துக் கொண்டு அவர்களை நோக்கி "குறைஷியரே! நான் அம்பெய்வதில் மிக வல்லவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் விடும் அம்பு தப்பவும் மாட்டாது. என்னிடம் இருக்கும் கடைசி அம்பு இருக்கும் வரை என்னை நீங்கள் பிடிக்க முடியாது. தவிரவும் அம்புகள் தீர்ந்தபின் என் வாள் ஆயுதத்தால் உங்களை வெட்டவும் செய்வேன். எனவே உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள். மேலும், நான் வயோதிகனாக இருப்பதால் உங்களுக்கு என்னால் பிரயோஜனமுமில்லை. ஆனால், மக்காவிலுள்ள எனது இல்லத்தில் என் பொருள்கள் இருக்கின்றன. ஆதலின், என்னையும் நான் இஸ்லாத்தைத் தழுவி இருக்கும் விஷயத்தையும் விட்டு விட்டு மக்காவிற்குச் சென்று அப்பொருள்களை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார். இதனைக் கேட்டதும் அவர்கள் அவரை மதீனாபுரிக்குச் செல்லவிட்டு விட்டு மக்கமா நகரம்

வந்து அப்பொருள்களை எடுத்துக் கொண்டனர். பின்னர், இவர் மதீனமா நகரம் வந்தபோது ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இவரைக் கண்டு "ஸுஹைபே! வியாபாரம் லாபத்தை அளித்து விட்டது" என்று கூறினார்கள். இவ்வாறு கூறியதற்குக் காரணமென்ன வென்று ஹளரத் ஸுஹைப் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் வினவியதற்கு ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அவரைக் குறித்து இந்த ஆயத்து அருளப் பட்டிருப்பதைக் கூறினார்கள். இதனால் அவர் மிக்க சந்தோஷ மடைந்தார்.

அறிந்துகொள்:- மூமின்களாகிய விசுவாசிகள் தங்கள் உயிர்களை விற்று, அதற்குக் கிரயமாக சுவர்க்கத்தை விலைக்கு வாங்கி இருக்கிறார்கள். வலிமார்கள் தங்கள் விருப்பப் படியே தங்களது உயிர்களை விலைக்கு விற்று, அதன் கிரயத்திற்குப் பதிலாக அல்லாஹு தஆலாவினது திருப்திகளை விலைக்கு வாங்கி இருக்கிறார்கள். எனவே, இவ்விரண்டிற்கு மிடையிற் அதிகம் வித்தியாசமிருக்கிறது. ஆகவே, பரமாதத்திகத்துறையில் செல்பவரான ஸாலிக் மனிதத்துவம் என்ற தமது ஊரை விட்டு பக்கத்தில் உள்ளவர்களது நகரங்களுக்குச் செல்லவேண்டியது அவசியமாகும். அதாவது, பழக்க வழக்கங்கள், இச்சைகள் முதலியவற்றைத் துறந்து சிருஷ்டிப் பொருள்களின் பாலுள்ள தமது சம்மந்தத்தை அறுத்துக் கொண்டு சிருஷ்டிக்கர்த்தாவின் பால் செல்லல் வேண்டும். இப்படிச் செய்பவர்தான் உண்மையான முஜாஹிதாகவும் ஷஹீதாகவும் ஆவார். இதனைக் குறித்துத்தான் இந்த ஆயத்திலும் **"அல்லாஹ்வின் திருப்திகளை நாடி தன் உயிரை விற்பவரும் மனிதரில் இருக்கின்றனர்"** என்று இறைவன் கூறி இருக்கிறான்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا ادْخُلُوا فِي السِّلْمِ كَافَّةً وَلَا تَتَّبِعُوا خُطُوَاتِ الشَّيْطَانِ ۚ إِنَّهُ لَكُمْ عَدُوٌّ مُّبِينٌ

208. விசுவாசிகளே! நீங்கள், இஸ்லாத்தில் முழுமையாக

நுழைந்து விடுங்கள். மேலும், ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக உங்களுக்கு அவன் பகிரங்க விரோதியாவான்.

இந்த ஆயத்து உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கள்ள விசுவாசிகளான நயவஞ்சகர்களைக் குறித்து அருளப்பட்டது. அவர்கள் புறத்தில் தங்களை விசுவாசிகள் என்று கூறிக் கொள்வதால் "விசுவாசிகளே" என்று அழைக்கப்பட்டிருக்கிறது "விசுவாசங் கொண்டிருக்கிறோம் என்று வெளிக்குக் கூறிக் கொள்பவர்களே அகத்திலும் புறத்திலும் இஸ்லாம் மார்க்கத்தினராக இருந்து அதன் விதிகளைக் கடைப்பிடித்தும் விலக்கல்களைத் தவிர்த்தும் நடந்து கொள்ளுங்கள்" என்பது இந்த ஆயத்தின் கருத்தாகும்.

மேலும், வேதக்காரர்களாக இருந்து இஸ்லாத்தைத் தழுவியவர்களான ஹளரத் அப்துல்லாஹிப்னு ஸலாம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு முதலிய ஸஹாபிகள் தங்களது பூர்வீக மதத்திலுள்ள சில சட்டங்களையும் பேணி நடப்பவர்களாக இருந்தனர். அதாவது சனிக்கிழமையை ஓய்வு நாளாகக் கொண்டாடியும், இஸ்லாம் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட ஒட்டகையின் இறைச்சி, அதன் பால் ஆகியவற்றை உபயோகிக்காமல் விலக்கியும் இருந்து வந்தார்கள். அத்துடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து "அல்லாஹ்வுடைய ரசூலே! தவ்ராத் வேதமும் அல்லாஹு தஆலாவால் அருளப்பட்டது. ஆதலின், இரவு நேரங்களில் அதிலுள்ள வசனங்களை ஓதித் தொழுது கொள்ள எங்களுக்கு அனுமதி தர வேண்டும்" என்றும் வேண்டிக் கொண்டனர். இதனைக் கண்டித்து இறைவன் இந்த ஆயத்தை அருளினான் என்றும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

فَإِنْ زَلَلْتُمْ مِّنْ بَعْدِ مَا جَآءَتْكُمُ الْبَيِّنٰتُ فَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ ﴿٢٠٩﴾

209. ஆதலின், நீங்கள் உங்களுக்குத் (தெளிவான) அத்தாட்சிகள் வந்த பின்னும், தவறிவிடுவீர்களாயின் நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றிலும்) மிகைத்தவன் விவேகமுள்ளவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி, அதனைப் பரிபூரணமாகப் பின்பற்றாமல் சில காரியங்களில் மட்டும் இஸ்லாமியச் சட்டங்களைப் பின்பற்றியும் சில விஷயங்களில் இதர வேதங்களைப் பின்பற்றியும் வருகிறவர்களுக்கு இந்த ஆயத்து கண்டிப்பான எச்சரிக்கையாகும்.

هَلْ يَنْظُرُوْنَ اِلَّآ اَنْ يَّاْتِيَهُمُ اللّٰهُ فِىْ ظُلَلٍ مِّنَ الْغَمَامِ وَالْمَلٰٓئِكَةُ وَقُضِىَ الْاَمْرُ وَاِلَى اللّٰهِ تُرْجَعُ الْاُمُوْرُ ﴿٢١٠﴾

210. அல்லாஹ்வு(டைய வேதனையு)ம், அமரர்களும் மேகத்தின் நிழல்களில் அவர்களிடம் வந்து (அவர்களுடைய) காரியங்கள் முடிக்கப்படுவதைத் தவிர்த்து (வேறு எதையும்) அவர்கள் எதிர்பார்க்கின்றார்களா? மேலும், அல்லாஹ்விடத்தில் (தான்) (அவர்களுடைய) சகல காரியங்களும் மீட்டப்படும்.

அல்லாஹு தஆலாவினால் அனுப்பப்படும் வேதனையையும் வருத்தத்தையும் தவிர வேறு எதையும் ஷைத்தானுடைய பாதையில் சென்றவர்கள் எதிர்பார்ப்பதற்கில்லை என்பது இந்த ஆயத்தின் கருத்தாகும்.

ரிவாயத்து:- முஹம்மதுப்னு வாஸிஉ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இந்த ஆயத்தை ஓதிவிட்டு, அவர் தமது வாழ்நாள் முழுவதிலும் ஆஹ்! ஆஹ்! என்று கவலைப்பட்டுக் கொண்டே இருந்தார்கள்.

ஹதீஸ்:- "அவர்களுக்காக நான் ஷைத்தானை விரட்டினேன். ஆ, அவர்கள் எனக்கு மாறு செய்து ஷைத்தானுக்கு கீழ்ப்படிகிறார்கள்

என்று அல்லாஹு தஆலா எனது உம்மத்தைக் குறித்து முறையிடுகிறான்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருப்பதாகக் கூறப்படுகிறது.

سَلْ بَنِيٓ إِسْرَآءِيلَ كَمْ ءَاتَيْنَٰهُم مِّنْ ءَايَةٍۭ بَيِّنَةٍ ۗ
وَمَن يُبَدِّلْ نِعْمَةَ ٱللَّهِ مِنۢ بَعْدِ مَا جَآءَتْهُ فَإِنَّ
ٱللَّهَ شَدِيدُ ٱلْعِقَابِ ۝

211. தெளிவான அடையாளத்தில் எத்தனையை நாம் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோமென்று (நபியே) நீர் இஸ்ராயீலின் சந்ததிகளைக் கேளும்; தவிர எவன் அல்லாஹ்வின் அருட் கொடையை அது அவனிடம் வந்த பின்னும் மாற்றுகிறானோ (அவனை) நிச்சயமாக அல்லாஹ் வேதனை செய்வதில் மிகக் கடுமையானவன்.

ஆயத் என்பதற்கு இந்த இடத்தில் பனீ இஸ்ராயீலில் உதித்த நபிமார்களால் வெளியான அற்புதச் செய்கைகள் என்பது, அல்லது இஸ்லாம் மார்க்கம் உண்மையான மார்க்கம்தான் என்பதையும் அதனை யாவரும் பின்பற்ற வேண்டுமென்பதையும் அறிவிக்கும் வேத வசனங்கள் என்பது கருத்து.

زُيِّنَ لِلَّذِينَ كَفَرُوا۟ ٱلْحَيَوٰةُ ٱلدُّنْيَا وَيَسْخَرُونَ
مِنَ ٱلَّذِينَ ءَامَنُوا۟ ۘ وَٱلَّذِينَ ٱتَّقَوْا۟ فَوْقَهُمْ يَوْمَ
ٱلْقِيَٰمَةِ ۗ وَٱللَّهُ يَرْزُقُ مَن يَشَآءُ بِغَيْرِ حِسَابٍ ۝

212. நிராகரிப்பவர்களுக்கு இவ்வற்ப (உலக) வாழ்வு அழகா(கக் காண்பி)க்கப்பட்டிருக்கிறது. இன்னும், அவர்களோ (இவ்வுலகைச் சதமென நம்பி) விசுவாசங் கொண்டவர்களைப் பரிகசிக்கின்றனர். ஆனால் (இணைவைத்தலைத்) தவிர்த்தவர்களோ இறுதிநாளில் (இணை வைப்பவர்களாகிய) அவர்களுக்கு மேலாக இருப்பார்கள். மேலும், அவன் நாடியவர்களுக்கு அல்லாஹ் கணக்கில்லாமல் கொடுப்பான்.

மறு உலக வாழ்க்கைக்குரிய விவசாய பூமியாக இவ்வுலகம் இருக்கிறது. ஆகவே, அறிஞர்கள் இவ்வுலகத்தைய செல்வத்தைக் கண்டு மமதை கொள்ளக்கூடாது. ஏழைகளைச் செல்வந்தர்கள் கேவலமாக மதிக்கவும் கூடாது. இப்படி எண்ணுவது நிராகரிப் பாளர்களின் தன்மையாகும்.

ஹளரத் அப்துல்லாஹிப்னு மஸ்ஊத், அம்மார், ஸுஹைப், ஹபீப், பிலால், ரலியல்லாஹுதஆலா அன்ஹும் முதலிய ஸஹாபிகளை நிராகரிப்பாளர்கள் கேவலமாக மதித்து ''இவர்கள் இவ்வுலக இன்பத்தைத் துறந்து வணக்கம் செய்வதன் மூலமாகத் தங்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்கிக் கொண்டார்கள்'' என்று கூறினார்கள். இதனைக் குறித்து இறைவன் இந்த ஆயத்தில் கூறி இருக்கிறான்.

كَانَ ٱلنَّاسُ أُمَّةً وَٰحِدَةً فَبَعَثَ ٱللَّهُ ٱلنَّبِيِّـۧنَ
مُبَشِّرِينَ وَمُنذِرِينَ وَأَنزَلَ مَعَهُمُ ٱلْكِتَٰبَ
بِٱلْحَقِّ لِيَحْكُمَ بَيْنَ ٱلنَّاسِ فِيمَا ٱخْتَلَفُوا۟ فِيهِ ۚ
وَمَا ٱخْتَلَفَ فِيهِ إِلَّا ٱلَّذِينَ أُوتُوهُ مِنۢ بَعْدِ
مَا جَآءَتْهُمُ ٱلْبَيِّنَٰتُ بَغْيًۢا بَيْنَهُمْ ۖ فَهَدَى ٱللَّهُ
ٱلَّذِينَ ءَامَنُوا۟ لِمَا ٱخْتَلَفُوا۟ فِيهِ مِنَ ٱلْحَقِّ بِإِذْنِهِۦ ۗ
وَٱللَّهُ يَهْدِى مَن يَشَآءُ إِلَىٰ صِرَٰطٍ مُّسْتَقِيمٍ ۝

213. மனிதர்கள் (யாவரும்) ஒரே வர்க்கமாக இருந்தனர். அப்பால் (அவர்களுக்குள் வேறுபட்டுப் பிரியவே விசுவாசிகளுக்குச்) சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் கூறுபவர்களாகவும் அச்சமூட்டுபவர்களாகவும் (அவர்களுக்கிடையே) நபிமார்களை அல்லாஹ் அனுப்பி, அவர்கள் எவ்விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்களோ அவ்விஷயத்தில் அவர்களுக்கிடையில் தீர்ப்புக் கூறுவதற்காக, அவர்களுடன் சத்தியத்தைக் கொண்டுள்ள வேதத்தையும் இறக்கினான். அவர்களுக்குத் தெளிவான) அத்தாட்சிகள் வந்தபின்னர், தங்களுக்குள் உள்ள பொறாமையின் காரணமாக வேதத்தைக் கொடுக்கப்பட்டவர்களைத் தவிர (வேறு எவரும்) அவ்விஷயத்தில் கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. எனவே, எதில் அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனரோ அந்த சத்தியதுதின்பால் அல்லாஹ் விசுவாசங் கொண்டவர்களுக்குத் தன்னுடைய அருளைக் கொண்டு நேர்வழி காட்டினான். மேலும், தான் நாடியவர்களுக்கு அல்லாஹ் நேரான வழியைக் காண்பிப்பான்.

ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் இருந்து ஹளரத் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களது காலம் வரை மனிதர்கள் எல்லோரும் விசுவாசங் கொண்ட ஒரே கூட்டத்தினராக இருந்தனர். அப்பால், அவர்கள் பிளவு பட்டு வெவ்வேறாகப் பிரிந்ததால் அவர்களிடம் நபிமார்களையும் வேதத்தையும் இறைவன் அனுப்பினான். ஆனால், அவர்கள் தங்களுக்குள் உள்ள பொறாமையின் காரணமாக, வேதம் கொடுக்கப்பட்ட பின்னர் அவ்வேதத்தில் விதர்ப்பம் செய்தனர். ஆனால், வேதத்தை விசுவாசித் தவர்களை இறைவன் நேர்வழியிற் சேர்த்தான். ஆகவே, ஜனங்கள் சத்தியத்திற்காக அல்லாமல் தங்களது சுய நலத்திற்காகவும் விரோதத்திற்காகவுமே வேதத்தை நிராகரிக் கிறார்கள் என்பது இந்த ஆயத்திலிருந்து நன்கு தெரியவருகிறது.

اَمْ حَسِبْتُمْ اَنْ تَدْخُلُوا الْجَنَّةَ وَلَمَّا يَاْتِكُمْ مَّثَلُ
الَّذِيْنَ خَلَوْا مِنْ قَبْلِكُمْ ؕ مَسَّتْهُمُ الْبَاْسَآءُ وَ

الضَّرَّآءُ وَزُلْزِلُوْا حَتّٰى يَقُوْلَ الرَّسُوْلُ وَالَّذِيْنَ
اٰمَنُوْا مَعَهٗ مَتٰى نَصْرُ اللّٰهِ ؕ اَلَآ اِنَّ نَصْرَ اللّٰهِ
قَرِيْبٌ ۝

214. உங்களுக்கு முன் சென்று விட்டவர்களுக்கு ஏற்பட்ட நிலைமை போன்று (சோதனைகள்) உங்களுக்கு வராமலேயே நீங்கள் சுவர்க்கத்தில் நுழைந்து விடலாமென்று எண்ணிக் கொண்டிருக்கின்றீர்களோ? அவர்களை வறுமையும் நோயும் பீடித்தன. இன்னும் (துங்களுக்கு அளிப்பதாகக் கூறப்பட்டுள்ள) அல்லாஹ்வின் உதவி எப்பொழுது (வரும்) என்று தூதரும் அவருடன் விசுவாசங் கொண்டவர்களும் கூறும் வரையில் அவர்கள் (பல்வேறு கஷ்டங்களால்) ஆட்டி வைக்கப்பட்டனர். அறிந்துகொள்; நிச்சயமாக, அல்லாஹ்வின் உதவி சமீபத்தில் இருக்கிறது.

ஸஹாபாக்கள் அல்லாஹு தஆலாவுடையவும், அவனது ரசூல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களினுடையவும் திருப்தியை அடைய வேண்டுமென்று மக்காவிலுள்ள தங்கள் வீடு வாசல் சொத்துச் சுகம் முதலிய யாவற்றையும் இணை வைப்பாளர் களிடம் விட்டு விட்டு ஹிஜ்ரத்துச் செய்து மதீனமா நகருக்குச் சென்ற பின் யூதர்களுடைய பகையாலும், நயவஞ்சகர்களின் தீங்காலும் பல விதத் துன்பத்தை அடைந்தனர். அப்போது இறைவன் இந்த ஆயத்தை அருளி அவர்களுக்கு நிம்மதியளித்தான்.

يَسْـَٔلُوْنَكَ مَاذَا يُنْفِقُوْنَ ؕ قُلْ مَآ اَنْفَقْتُمْ مِّنْ خَيْرٍ
فَلِلْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنِ وَابْنِ السَّبِيْلِ ؕ
وَمَا تَفْعَلُوْا مِنْ خَيْرٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ ۝

215. (நபியே) அவர்கள் உம்மிடம் எதைச் செலவு செய்ய வேண்டுமென்று வினவுகின்றனர்; நன்மையிலிருந்து நீங்கள் எதைச் செய்தாலும், அது பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்குமாக இருக்குமென்று சொல்லும். ஆதலால், நன்மையிலிருந்து நீங்கள் எதைச் செய்தாலும் அதை நிச்சயமாக அல்லாஹ் மிகவும் அறிந்தவன்.

தர்மம் கொடுக்கும்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது ஸஹாபாக்களைத் தூண்டிய போது அம்ருப்னுல் ஜமூஹ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்பவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "எங்களது பொருள்களில் நாங்கள் செலவு செய்ய வேண்டியது எது? யார் யாருக்குக் கொடுக்க வேண்டும்" என்று வினவினார். இவர் மிகவும் வயோதிகராகவும் செல்வந்தராகவும் இருந்தார். ஆகவே, இவ்வினாவிற்கு பதிலாக இறைவன் இந்த ஆயத்தை அருளினான். இந்த ஆயத்தில் மேற்கண்ட இரண்டு கேள்விகளுக்கும் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நல்லதைச் செலவு செய்ய வேண்டும் என்பது ஒன்று, இன்னின்னாருக்குச் செலவு செய்யவேண்டும் என்பது மற்றொன்று. தவிரவும், பெற்றோர்களுக்கு நன்றி செய்வதையும், ரத்த பந்தங்களை ஆதரித்தல் தேவையுள்ளவருக்கு அவரது தேவையை நிறைவேற்றுதல் ஆகியவற்றையும் பற்றித் தூண்டுதல் செய்யப் பட்டிருக்கிறது.

كُتِبَ عَلَيْكُمُ الْقِتَالُ وَهُوَ كُرْهٌ لَّكُمْ ۚ وَعَسَىٰ أَن
تَكْرَهُوا شَيْئًا وَهُوَ خَيْرٌ لَّكُمْ ۚ وَعَسَىٰ أَن
تُحِبُّوا شَيْئًا وَهُوَ شَرٌّ لَّكُمْ ۗ وَاللَّهُ يَعْلَمُ وَأَنتُمْ
لَا تَعْلَمُونَ ۝

216. உங்கள் மீது யுத்தத்தை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது உங்களுக்கு அதிருப்தியாக இருக்கிறது. மேலும், நீங்கள் உங்களுக்கு நன்மையாக இருக்கிற ஒரு பொருளை நீங்கள் வெறுக்கவும் கூடும். இன்னும் உங்களுக்குத் தீமையாக இருக்கிற ஒரு பொருளை நீங்கள் நேசிக்கவும் கூடும். ஆயினும் (நல்லதையும் தீயதையும்) அல்லாஹ் அறிவான். மேலும் நீங்கள் அறியமாட்டீர்கள்.

இந்த ஆயத்து நிராகரிப்பாளர்களை எதிர்த்து யுத்தம் செய்வதைப் பற்றி அருளப்பட்டது. ஜிஹாது செய்வது ஜனாஸாத் தொழுகை, ஸலாம் சொன்னவருக்குப் பதில் ஸலாம் சொல்லுதல் ஆகியவற்றைப் போல் ஃபர்லு கிஃபாயாவாக இருக்கிறது என்பது ஜும்ஹூருடைய (பெரும்பாலருடைய) கருத்தாகும்.

يَسْأَلُونَكَ عَنِ الشَّهْرِ الْحَرَامِ قِتَالٍ فِيهِ ۖ قُلْ قِتَالٌ
فِيهِ كَبِيرٌ ۖ وَصَدٌّ عَن سَبِيلِ اللَّهِ وَكُفْرٌ بِهِ
وَالْمَسْجِدِ الْحَرَامِ وَإِخْرَاجُ أَهْلِهِ مِنْهُ أَكْبَرُ عِندَ اللَّهِ ۚ
وَالْفِتْنَةُ أَكْبَرُ مِنَ الْقَتْلِ ۗ وَلَا يَزَالُونَ يُقَاتِلُونَكُمْ
حَتَّىٰ يَرُدُّوكُمْ عَن دِينِكُمْ إِنِ اسْتَطَاعُوا ۚ وَمَن
يَرْتَدِدْ مِنكُمْ عَن دِينِهِ فَيَمُتْ وَهُوَ كَافِرٌ
فَأُولَٰئِكَ حَبِطَتْ أَعْمَالُهُمْ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ ۖ
وَأُولَٰئِكَ أَصْحَابُ النَّارِ ۖ هُمْ فِيهَا خَالِدُونَ ۝

217. (நபியே) உம்மிடம் அவர்கள் கண்ணியமான மாதத்தில் யுத்தம் செய்வது பற்றி வினவுகின்றனர்; அதில் யுத்தம் புரிதல் பெரும் பாவம்; இன்னும் அல்லாஹ்வின் மார்க்கத்தையும் மஸ்ஜிதுல்

ஹராமையும் விட்டுத் தடுப்பதும், அவனுக்கு இணைவைப்பதும், அதிலிருப்பவர்களை அதைவிட்டு வெளியேற்றுவதும் அல்லாஹ் விடத்தில் மிகப் பெரிய பாவமாகும்; மேலும் குழப்பம் செய்வது யுத்தத்தைப் பார்க்கினும் பெரியது என்று கூறுவீராக. (நிராகரிப்பவர் களான) அவர்கள் சக்தி பெற்றிருந்தால் உங்களது மார்க்கத்தை விட்டு உங்களைத் திருப்பும்வரை உங்களுடன் அவர்கள் யுத்தஞ் செய்து கொண்டே இருப்பார்கள்; எனவே, உங்களிலிருந்து எவனேனும் தன்னுடைய மார்க்கத்தை விட்டுத் திரும்பி அவன் நிராகரிப்பவனாக இருக்கும் நிலைமையில் மரணிப்பானாயின் அப்பொழுது இத்தகையவர்களின் (நற்) செயல்கள் இம்மையிலும் மறுமையிலும் அழிந்து விடுகின்றன. இன்னும் இவர்கள் நரகவாசிகளே; அதில் அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்துல்லாஹிப்னு ஜஹஷ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களையும், அவருடன் சில ஸஹாபிகளையும் மக்கத்துக் குறைஷியரின் நடமாட்டத்தை அறிந்து வேவு பார்த்து வருவதற்காக மக்காவின் திசையை நோக்கி அனுப்பினார்கள். இவர்கள் தாயிஃபிற்கும் மக்காவிற்கு மிடையிலுள்ள பத்னே நக்லா என்ற இடத்தில் தங்கி இருக்கும் போது ஒரு வர்த்தகத் தாவளக்காரரைச் சந்தித்து அம்ருப்னுல் ஹல்றமீ என்பவரைக் கொன்று, வேறு இருவரைக் கைதி செய்து, வர்த்தகப் பொருட்களையும் பறிமுதல் செய்து கொண்டு மதீனா முனவ்வராவுக்கு வந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதனைக் கண்டதும் அப்துல்லா ஹிப்னு ஜஹஷ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களை நோக்கி "கொல்லும்படி உங்களை நான் ஏவவில்லையே" என்று கூறினார்கள். பிறகு, அவ்விரு கைதிகளையும், பறிமுதல் செய்யப்பட்ட பொருள் களையும் குறித்து இறைவனிடமிருந்து உத்தரவு வருவதை எதிர்பார்த்து ஒன்றும் செய்யாதிருந்தார்கள். இந்தச் சம்பவம் ஜமாதுல் ஆகிர் மாதத்தின் கடைசித் தினத்தில் நிகழ்ந்தது. ஆனாலும், மக்கத்துக் குறைஷியர்கள் ஹிஜ்ரத்துச் செய்யாமல் அங்கு தங்கி இருக்கும் முஸ்லிம்களிடம் "முஹம்மது புனிதமான மாதத்திலும் கூட கொன்று

விடுவதை அனுமதித்து விட்டார்" என்று குறையாகக் கூறினார்கள். இச்செய்தி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தெரிந்த போது அந்த ஸஹாபியை அழைத்து விசாரித்தார்கள். அப்பொழுது அவர் "நாங்கள் இப்னு ஹல்றமியை கொன்ற போது ரஜப் மாதத்துப் பிறை இருந்தது" என்று கூறினார்கள். இதற்கு மறுமொழியாக இறைவன் இந்த ஆயத்தை அருளி, மக்கத்துக் குறைஷியர்கள் செய்து கொண்டிருக்கிற பாவங்கள் ரஜப் போன்ற புனிதமான மாதத்தில் யுத்தம் செய்கிற பாவத்தைப் பார்க்கினும் மிகப் பெரியனவாக இருக்கின்றன என்பதை அறிவித்திருக்கிறான்.

إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَاجَرُوا وَجَاهَدُوا
فِي سَبِيلِ اللَّهِ أُولَٰئِكَ يَرْجُونَ رَحْمَتَ اللَّهِ ۚ وَاللَّهُ
غَفُورٌ رَحِيمٌ

218. நிச்சயமாக விசுவாசங் கொண்டவர்களும், ஹிஜ்ரத்து செய்தவர்களும், அல்லாஹ்வின் பாதையில் யுத்தஞ் செய்தவர்களும் ஆகிய இவர்கள் அல்லாஹ்வின் அருளை ஆதரவு வைத்திருக் கின்றனர். எனவே, அல்லாஹ் (விசுவாசிகளுக்குப்) பாவமன்னிப்பு அளிப்பவன், (இன்னும் அவர்கள்பால்) பேரன்புடையவன்.

ஹளரத் அப்துல்லாஹிப்னு ஜஹஷ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது தலைமையில் வேவு பார்க்கச் சென்ற அந்தப் படையினர் அம்ருப்னுல் ஹல்றமீயைக் கொன்றதற்காகப் பாவத்திற்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்ற விஷயம் இதற்கு முந்திய ஆயத்தில் அறிவிக்கப்பட்டு விட்டது. ஆனாலும், அவர்கள் எடுத்துக் கொண்ட இம்முயற்சிக்கு மறுமைப்பலன் உண்டா இல்லையா என்ற விபரம் தெரியவில்லை. ஆகவே, அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இதனைக் குறித்து வினவினார். அதற்கு இறைவன் இந்த ஆயத்தை அருளி அவர்கள் மார்க்கத்தைக் காப்பதற்காக யுத்தம் செய்தவர்கள்தாம் என்பதையும், அவர்கள் செய்த

இம்முயற்சிக்காக இறைவனது கருணை தங்களுக்குக் கிடைக்கும் என்று அவர்கள் ஆதரவு வைக்கத் தக்கவர்கள்தாம் என்பதையும் அறிவித்துள்ளான்.

يَسْـَٔلُونَكَ عَنِ الْخَمْرِ وَالْمَيْسِرِ ۖ قُلْ فِيهِمَا إِثْمٌ كَبِيرٌ
وَمَنَافِعُ لِلنَّاسِ وَإِثْمُهُمَا أَكْبَرُ مِن نَّفْعِهِمَا ۗ
وَيَسْـَٔلُونَكَ مَاذَا يُنفِقُونَ قُلِ الْعَفْوَ ۗ كَذَٰلِكَ
يُبَيِّنُ اللَّهُ لَكُمُ الْآيَاتِ لَعَلَّكُمْ تَتَفَكَّرُونَ

219. மதுவையும், சூதாட்டத்தையும் பற்றி உம்மிடம் வினவுகின்றனர். அவைகளிரண்டிலும் பெருந்தீமையிருக்கிறது; இன்னும், ஜனங்களுக்கு நன்மைகளும் இருக்கின்றன. ஆனால், அவ்விரண்டின் தீமை அவ்விரண்டின் நன்மையைப் பார்க்கினும் மிகப் பெரிது என்று (நபியே நீர்) கூறும். இன்னும் அவர்கள் செலவு செய்வ(தன் அளவான)து என்ன என்பதைப் பற்றியும் அவர்கள் உம்மை வினவுகின்றனர். (தேவைக்குமேல்) உபரியாவதை (ச் செலவு செய்ய வேண்டும்) என்று கூறும். இவ்விதமே அல்லாஹ் நீங்கள் ஆராயும் பொருட்டுத் (தனது) வசனங்களை உங்களுக்கு விளக்கிக் காட்டுகிறான்.

ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு மஆது ரலியல்லாஹுதஆலா அன்ஹு முதலிய ஸஹாபிகள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரவர்களே! மது குடிப்பது சம்மந்தமாக எங்களுக்கு மார்க்கத் தீர்ப்பளியுங்கள். ஏனெனில், அது அறிவைப் போக்குகிறது" என்று கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது இந்த ஆயத்து இறைவனால் அருளப்பட்டது.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஸஹாபிகளைப் பார்க்கினும் சிறந்தவர்களை நான் பார்க்கவில்லை. அவர்கள் பதின்மூன்று காரியங்களைப் பற்றித்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவி இருக்கிறார்கள். அவையனைத்தும் திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றன. மேலும், அவர்கள் தங்களுக்கும் ஏனைய முஸ்லிம்களுக்கும் பிரயோஜனமுள்ளவைகளைக் குறித்தே கேட்டிருக்கிறார்கள் என்பதாக ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

இந்த ஆயத்து அருளப்பட்ட பின் சிலர் மதுபானம் அருந்துவதையும், சூதாடுவதையும் விட்டு விட்டார்கள். சிலர் இரண்டையும் விடவில்லை. ஏனெனில் இவ்விரண்டின் தன்மைகளைப் பற்றி மட்டும் இங்கு கூறப்பட்டிருக்கிறதேயன்றி இவற்றை விட்டு விடவேண்டுமென்று இந்த இடத்தில் கண்டிப்பான விலக்கல் வரவில்லை. இதுபோல மதுபானம் அருந்துவதைப் பற்றி சூறத்துல் மாயிதா 90,91 ஆகிய ஆயத்துகளில் அருளப்பட்டிருக்கின்றன.

فِي الدُّنْيَا وَالْآخِرَةِ ۗ وَيَسْأَلُونَكَ عَنِ الْيَتَامَىٰ ۖ
قُلْ إِصْلَاحٌ لَّهُمْ خَيْرٌ ۖ وَإِن تُخَالِطُوهُمْ فَإِخْوَانُكُمْ ۚ
وَاللَّهُ يَعْلَمُ الْمُفْسِدَ مِنَ الْمُصْلِحِ ۚ وَلَوْ شَاءَ اللَّهُ
لَأَعْنَتَكُمْ ۚ إِنَّ اللَّهَ عَزِيزٌ حَكِيمٌ

220. இவ்வுலகிலும் மறுமையிலும் (என்ன பலன்களைத் தரும் என்பதைப் பற்றி நீங்கள் தெளிவு பெறுவதற்காக தன் வசனங்களை இவ்வாறு விளக்குகிறான்) இன்னும் அனாதைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் வினவுகின்றனர். (அதற்கு) அவர்களைச் சீர்திருத்துவது நன்மையாக இருக்குமென்று (நீர்) கூறுவீராக. மேலும், நீங்கள் அவர்களிடம் சேர்ந்திருப்பீர்களாயின் (அவர்கள்) உங்களுக்குச் சகோதரராவர். இன்னும், அல்லாஹ்

சீர்திருத்தக்காரனில் உள்ள விஷமியைப் பிரித்து அறிகின்றான். மேலும் அல்லாஹ் நாடினால் உங்களைக் கஷ்டப்படுத்திவிடுவான். நிச்சயமாக அவன் மிகைத்தவன் விவேகமுள்ளவன்.

அனாதைகளின் பொருள்களை அநீதியாகப் புசிப்பவர்களைக் கண்டித்து இறைவன் தனது கட்டளையை வஹீமூலம் அறிவித்ததில் இருந்து ஸஹாபிகள் தங்களிலுள்ள அனாதைக் குழந்தைகளைத் தங்களுடன் சேர்த்துக் கொள்வதை விட்டு விட்டனர். ஒருவர் தமது மேல்பார்வையின் கீழ் ஒரு அனாதைக் குழந்தை இருக்குமாயின் அக்குழந்தைக்காக தனி வீடும் தனி உணவும் ஏற்படுத்தி விடுவார். இப்படி இருக்கும் போது ஒரு நாள் ஹளரத் அப்துல்லாஹிப்னு ரவாஹா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "அல்லாஹ்வுடைய தூதர் அவர்களே! எங்களில் ஒவ்வொருவருக்கும் பல வீடுகளில்லை. அப்படியிருந்தாலன்றோ நாங்கள் அனாதைகளைத் தனியே பிரித்து வைக்க முடியும்? தவிரவும் எங்களில் ஒவ்வொருவருக்கும் போதியளவு உணவும் பானகமுமில்லை. அப்படி யிருந்தாலன்றோ அவர்களுக்கு நாங்கள் தனி உணவு அளிக்க முடியும்?" என்று முறையிட்டார். இவரது இம்முறை யீட்டிற்குச் சமாதானமாக இந்த ஆயத்து அருளப்பட்டது.

وَلَا تَنكِحُوا الْمُشْرِكَاتِ حَتَّىٰ يُؤْمِنَّ ۚ وَلَأَمَةٌ مُّؤْمِنَةٌ
خَيْرٌ مِّن مُّشْرِكَةٍ وَلَوْ أَعْجَبَتْكُمْ ۗ وَلَا تُنكِحُوا
الْمُشْرِكِينَ حَتَّىٰ يُؤْمِنُوا ۚ وَلَعَبْدٌ مُّؤْمِنٌ خَيْرٌ مِّن
مُّشْرِكٍ وَلَوْ أَعْجَبَكُمْ ۗ أُولَٰئِكَ يَدْعُونَ إِلَى النَّارِ ۖ
وَاللَّهُ يَدْعُو إِلَى الْجَنَّةِ وَالْمَغْفِرَةِ بِإِذْنِهِ ۖ
وَيُبَيِّنُ آيَاتِهِ لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَذَكَّرُونَ ۝

221. மேலும், இணைவைக்கும் பெண்களை – அவர்கள் விசுவாசம் கொள்ளும்வரையில் – நீங்கள் திருமணஞ் செய்து கொள்ள வேண்டாம். இன்னும், இணைவைக்கும் பெண் உங்களைப் பரவசப்படுத்தியபோதிலும், அவளை விட (அல்லாஹ்வை) விசுவாசிக்கும் அடிமைப் பெண் மேலானவள். மேலும், இணைவைக்கும் ஆடவர்களுக்கு அவர்கள் (அல்லாஹ்வை) விசுவாசிக்கும் வரை (உங்கள் பெண்களை) திருமணம் செய்து கொடுக்காதீர்கள். இணைவைக்கும் ஆடவன் உங்களைப் பரவசப்படுத்திய போதிலும் அவனைவிட (அல்லாஹ்வை) விசுவாசிக்கும் அடிமை மேலானவன். (இணை வைப்பவர்களாகிய) அவர்கள் உங்களை நரகத்தின் பக்கம் அழைக்கின்றனர். ஆனால், அல்லாஹ் தன் கட்டளைப்படி (உங்களைச்) சுவர்க்கத்தின் பக்கமும் (பாவ) மன்னிப்பளவிலும் அழைக்கின்றான். இன்னும், அவர்கள் நல்லுபதேசம் பொருட்டு அவன் தன்னுடைய வசனங்களை (மனிதர்களுக்கு) விவரிக்கின்றான்.

இணைவைத்து வணங்கக் கூடியவர்களுடன் முஸ்லிம்கள் பெண் கொள்ளுதல், பெண் கொடுத்தல் ஆகியவற்றைப் பற்றி இந்த ஆயத்தில் விலக்கப்பட்டிருக்கிறது. ஆனால் யூத, கிறிஸ்துவர்களாகிய வேதக்காரர்களுடன் சம்மந்தம் செய்து கொள்வதைப் பற்றி இதில் கூறவில்லை. இவர்களைப் பற்றி சூரத்துல் மாயிதா 5 வது ஆயத்தில் விபரிக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம்களுக்கு இவ்வுலகத்தைய செல்வத்தையும் மற்ற வசதிகளையும் பார்க்கினும் மறு உலகத்திற்கான விஷயங்களும் மார்க்கமும்தான் பிரதானமானவை. ஆகவே, இஸ்லாத்திற்கு நேர்மாறாகவுள்ள இணை வைத்து வணங்குபவர்களுடன் திருமண சம்மந்தம் வைத்துக் கொள்வதால் எவ்வளவு தீங்கேற்படும் என்ற விஷயத்தையும் இந்த ஆயத்தில் காணலாம்.

وَيَسْأَلُونَكَ عَنِ الْمَحِيضِ ۖ قُلْ هُوَ أَذًى فَاعْتَزِلُوا
النِّسَاءَ فِي الْمَحِيضِ ۖ وَلَا تَقْرَبُوهُنَّ حَتَّىٰ

يَطْهُرْنَ ۚ فَإِذَا تَطَهَّرْنَ فَأْتُوهُنَّ مِنْ حَيْثُ أَمَرَكُمُ
اللَّهُ ۚ إِنَّ اللَّهَ يُحِبُّ التَّوَّابِينَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِينَ ۝

222. இன்னும், மாதவிடாயைப் பற்றி அவர்கள் உம்மை வினவுகின்றனர்; அது அருவறுப்பு என்று (நபியே) நீர் கூறும். எனவே, மாதவிடாய் காலத்தில் பெண்களைப் பிரித்து விடுங்கள்; அப்பெண்கள் சுத்தமாகும் வரை அவர்களை அணுகாதீர்கள்; அவர்கள் சுத்தமாகி விட்டால், அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிட்ட விதமாக அவர்களிடம் பிரவேசியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பாவமன்னிப்புத் தேடுகிறவர்களை நேசிக்கிறான். இன்னும் பரிசுத்தவான்களையும் நேசிக்கிறான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னுள்ள (ஜாஹிலிய்யத்தான) அறியாமைக் காலத்தில் மாதவிடாய் காலத்தில் பெண்களை ஒதுக்கி வைப்பதும், அவர்களுடன் சேர்ந்து உணவு உண்ணாமல் பிரித்து வைப்பதும் வழக்கம். பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அபுத்தஹ்தாஹ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் "அல்லாஹ்வின் தூதரவர்களே! பெண்கள் மாதவிடாய் உள்ளவராக இருக்கும் போது அவர்களிடம் நாங்கள் நெருங்கலாமா அல்லவா?" என்பதாக வினவினார்கள். அதற்கு இறைவன் இந்த ஆயத்தை அருளினான். இந்த ஆயத்து அருளப்பட்ட பின் சில ஸஹாபிகள், "பெண்களை மாதவிடாய்க் காலத்தில் தவிர்த்துக் கொள்ளுங்கள்" என்ற வசனத்திற்கு அதன் புறப்பொருளை மட்டும் கவனித்து, அவர்களை அக்காலத்தில் தங்கள் வீட்டை விட்டுப் புறம்பே ஒதுக்கி வைத்திருந்தனர். இப்படிச் செய்வதால் ஏற்படும் சிரமங்களைக் குறித்து "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! குளிரோ அதிகமாக இருக்கிறது. ஆடைகளோ கொஞ்சமாக இருக்கின்றன" என்று கிராமப்புறத்து அரபிகள் அறிவித்துக் கொண்டனர். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "மாதவிடாய்க் காலத்தில் பெண்களுடன் நீங்கள் உடலுறவு

கொள்ளுவதைத்தான் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்று நீங்கள் ஏவப்பட்டிருக்கிறீர்கள். அறபியல்லாதவர்களாகிய அஜமிகள் செய்வது போல், அவர்களை நீங்கள் வீட்டை விட்டு வெளியேற்றும்படி ஏவப்பட வில்லை" என்பதாக பதில் கூறினார்கள். எனவே, இஸ்லாம் மார்க்கம் விதித்துள்ள இந்தச் சட்டம் அளவுக்கு மிஞ்சி யூதர்கள் செய்வதைப் போல் இல்லாமலும், கிறிஸ்துவர்கள் செய்வதுபோல் ஒன்றும் கவனிக்கப்படாமலும் இல்லாமல் நடுத்தரமாக இருக்கிறது அதாவது யூதர்கள் மாதவிடாய் காலத்தில் பெண்களை வீட்டிற்குப் புறம்பில் ஒதுக்கி வைத்து விடுவார்கள். கிறிஸ்துவர்கள் மாதவிடாயையும் கவனியாமல் அவசியப்படும் போது அவர்களுடன் உடலுறவு கொள்வர்.

نِسَاؤُكُمْ حَرْثٌ لَكُمْ فَأْتُوا حَرْثَكُمْ أَنَّىٰ شِئْتُمْ ۖ
وَقَدِّمُوا لِأَنْفُسِكُمْ ۚ وَاتَّقُوا اللَّهَ وَاعْلَمُوا أَنَّكُمْ
مُلَاقُوهُ ۗ وَبَشِّرِ الْمُؤْمِنِينَ ۝

223. உங்கள் (மனைவிகளாகிய) பெண்கள் உங்களுக்கு வேளாண்மை (ஸ்தலம்) ஆகும். எனவே, உங்கள் வேளாண்மைக்கு நீங்கள் நாடிய விதத்தில் வாருங்கள். ஆனால், உங்களுக்காக (நல்ல காரியங்களை) முற்படுத்திக் கொள்ளுங்கள். மேலும், அல்லாஹ்வுக்குப் பயபக்தி செலுத்துங்கள்; இன்னும், நிச்சயமாக நீங்கள் அவனைச் சந்திக்கிறவர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்; எனவே, (நபியே நீர்) விசுவாசிகளுக்கு (சுவர்க்கம் உண்டென்று) நற்செய்தி கூறுவீராக.

حَرْثٌ **ஹர்து** என்ற பதத்திற்கு விதைத்தல் என்பது பொருளாகும். இந்த விதையை முளைக்கச் செய்வதற்கு **ஜர்உ** என்று சொல்வார்கள். இவ்விருபதங்களும் கிட்டத்தட்ட ஒரே கருத்துள்ளன போலிருப்பதால் சில இடங்களில் இவ்விரு பதங்களுக்கும் ஒரேவிதமான அர்த்தம் செய்வதுமுண்டு. "நீங்கள் நாடிய விதத்தில் வாருங்கள்" என்று கூறி இருப்பதில் சிலர் தவறான அர்த்தம் செய்து

கொண்டு பெண் குறியைத் தவிரவுள்ள மற்றைய இடங்களிலும் பெண்களுடன் கூடலாம் என்பதாகக் குதர்க்கவாதம் செய்வதுண்டு. இவர்களது இவ்வாதம் சரியானதன்று. ஏனெனில், அல்லாஹுத் தஆலா **ஹர்து** விதைக்குமிடம் என்று கூறி இருப்பதால் பெண்குறியைத் தவிர வேறு இடங்களில் பெண்களிடம் பிரவேசிக்கக் கூடாதென்று நன்கு வெளியாகிறது. மேலும், ஆடுமாடுகளைப்போல் பின்புறமிருந்து பெண்களிடம் உடலுறவு கொள்வதால் கருத்தரிக்கும் குழந்தை ஒன்றைக் கண் பொட்டையாகப் பிறக்குமென்று யூதர்கள் கூறினர். அவர்களது இக்கூற்றையும் மறுத்து இறைவன் இந்த ஆயத்தை அருளினான்.

وَلَا تَجْعَلُوا اللّٰهَ عُرْضَةً لِّاَيْمَانِكُمْ اَنْ تَبَرُّوْا وَتَتَّقُوْا وَتُصْلِحُوْا بَيْنَ النَّاسِ ۗ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ۝

224. மேலும், நீங்கள் நன்மை செய்வதற்கும், பயபக்தியுடன் இருப்பதற்கும், ஜனங்களுக்கிடையிற் சமாதானஞ் செய்து வைப்பதற்கும் (நீங்கள் செய்து கொண்டுள்ள) உங்களுடைய சத்தியங்களுக்கு அல்லாஹ்வைத் தடையாக ஆக்கிக் கொள்ள வேண்டாம். இன்னும் அல்லாஹ் (உங்கள் சத்தியங்களை) கேட்பவன் (உங்களது எண்ணங்களை) மிக அறிந்தவன்.

புஷைருப்னு நுஃமான் ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்ற ஒரு அன்ஸாரி தமது மனைவியை விவாக ரத்துச் செய்துவிட்டார். இவரது மனைவி ஹளரத் அப்துல்லா ஹிப்னு ரவாஹா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது சகோதரியாக இருந்ததால், அவர் தமது மைத்துனரான புஷைரிடம் செல்வதில்லை என்றும், பேசுவதில்லை என்றும் அவருக்கும் அவரது மனைவிக்கு மிடையில் சமாதானம் செய்து வைப்பதில்லை என்றும் அல்லாஹு தஆலாவின் மீது சத்தியம் செய்து கொண்டார். இது சம்மந்தமாக எவரேனும் அவரிடம் பேசவந்தால் "நான் அல்லாஹுத் தஆலாவின் மீது சத்தியம்

செய்திருப்பதால் இதில் நான் தலையிட முடியாது" என்று கூறிக் கொண்டிருந்தார். ஆகவே, நன்மையான காரியங்களில் அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்வது அக்காரியத்திற்குத் தடையாக இருக்காது என்பதையும், அப்படிச் சத்தியம் செய்தாலும் அதனை முறித்து விட்டு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதையும், குறித்து இறைவன் இந்த ஆயத்தை அருளி இருக்கிறான்.

ஆனால், இப்படி முறிப்பதற்குரிய பரிகார முறை சூரத்துல் மாயிதா 89 ஆயத்தில் கூறப்பட்டிருப்பது காண்க.

لَا يُؤَاخِذُكُمُ اللّٰهُ بِاللَّغْوِ فِيْٓ اَيْمَانِكُمْ وَلٰكِنْ يُّؤَاخِذُكُمْ بِمَا كَسَبَتْ قُلُوْبُكُمْ ۗ وَاللّٰهُ غَفُوْرٌ حَلِيْمٌ ۝

225. உங்கள் சத்தியங்களில் (நீங்கள் அறியாமலே) வீணான (வார்த்தைகள் வந்து விடுவ)தைக் கொண்டு அல்லாஹ் உங்களைக் (குற்றம்) பிடிக்க மாட்டான். ஆனால், உங்களுடைய இருதயங்கள் நாடிச் செய்ததைக் கொண்டுதான் உங்களை (அல்லாஹ் குற்றம்) பிடிப்பான். மேலும், அல்லாஹ் மிகவும் (துவறுகளை) மன்னிப்பவன் மிக்க சாந்தமானவன்.

சத்தியங்களில் வீணான வார்த்தைகளைக் கொண்டு இறைவன் குற்றம் பிடிக்க மாட்டான் என்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனாலும், வீணான வார்த்தைகள் யாவை என்று நிர்ணயிக்கும் விஷயத்தில் ஹனஃபீ ஷாஃபிஈ மதுஹபுகளுடைகிடையில் நீண்ட விவாதங்களும் கருத்து வேறுபாடுகளும் இருந்து வருகின்றன.

لِلَّذِيْنَ يُؤْلُوْنَ مِنْ نِّسَآئِهِمْ تَرَبُّصُ اَرْبَعَةِ اَشْهُرٍ ۚ فَاِنْ فَآءُوْ فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ ۝

226. தங்களுடைய மனைவியரிடம் (விலகியிருப்பதாகச்) சத்தியம் செய்தவர்களுக்கு நான்கு மாதங்கள் எதிர்பார்த்தல் (தவணை) உண்டு. ஆகவே, அவர்கள் (தங்கள் சத்தியத்தின் முறிவுக்குரிய பரிகாரங்களைச் செய்து நான்கு மாதங்களுக்குள்) மீண்டு கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவன் பேரன்புடையவன்.

இஸ்லாம் மார்க்கம் தோன்றுவதற்கு முன் ஜனங்கள் தங்கள் மனைவியரை விரும்பவில்லையானால் அவர்கள் தங்கள் மனைவியுடன் கூடுவதில்லை என்று சத்தியம் செய்வது வழக்கம். இப்படிச் செய்வதால் அவளுடைய கணவனும் அவளைக் கவனிப்பதில்லை. அவள் அவனை விட்டு விலகி வேறு ஆடவரை மணந்து கொள்ளவும் முடியாது. ஆதலால் இவ்வண்ணம் சத்தியம் செய்வது பெண்களுக்கும் பெருத்த சங்கடத்தை விளைவிப்பதாக இருந்தது. பெண்களுக்கு ஏற்பட்டிருந்த இக்கொடுமையை இஸ்லாம் மார்க்கம் அகற்றி, இவ்வண்ணம் சத்தியம் செய்தவர்களுக்கு நான்கு மாத காலதவணை அளித்திருக்கிறது. அந்நான்கு மாதத்திற்குள் அவர்கள் தங்கள் மனைவியரை அழைத்துக் கொள்ள வேண்டும், இல்லையேல், அவளை விட்டுப் பிரிந்து விட வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறது.

وَإِنْ عَزَمُوا الطَّلَاقَ فَإِنَّ اللَّهَ سَمِيعٌ عَلِيمٌ

227. மேலும், அவர்கள் (நான்கு மாதத்துக்குள் சேர்த்துக் கொள்ளாமலிருப்பதன் மூலம்) விவாகரத்தை நாடுவார்களாயின் நிச்சயமாக அல்லாஹ் மிகக் கேட்பவன் மிக அறிபவன்.

இந்த ஆயத்தும் மேற்கண்ட ஆயத்துடைய விதியுடன் சம்மந்தப் பட்டது. கர்பத்திலிருக்கும் சிசுகளுக்கு ஆன்மா ஊதப்படும் காலம் நான்கு மாதங்கள் என்பதால் நான்கு மாதம் எதிர்பார்க்க வேண்டும் என்று தவணை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

وَالْمُطَلَّقَاتُ يَتَرَبَّصْنَ بِأَنْفُسِهِنَّ ثَلَاثَةَ قُرُوءٍ

وَلَا يَحِلُّ لَهُنَّ أَنْ يَكْتُمْنَ مَا خَلَقَ اللَّهُ فِي أَرْحَامِهِنَّ إِنْ كُنَّ يُؤْمِنَّ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَبُعُولَتُهُنَّ أَحَقُّ بِرَدِّهِنَّ فِي ذَٰلِكَ إِنْ أَرَادُوا إِصْلَاحًا وَلَهُنَّ مِثْلُ الَّذِي عَلَيْهِنَّ بِالْمَعْرُوفِ وَلِلرِّجَالِ عَلَيْهِنَّ دَرَجَةٌ

وَاللَّهُ عَزِيزٌ حَكِيمٌ

228. இன்னும், விவாக ரத்துச் செய்யப்பட்ட பெண்கள் தங்களுக்காக மூன்று மாதவிடாய் எதிர்பார்க்க வேண்டும். மேலும், அவர்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விசுவாசித்தவர்களாக இருந்தால், தங்களுடைய கற்பக் கோளறைகளில் அல்லாஹ் சிருஷ்டித்திருப்பதை மறைப்பது அவர்களுக்குக் கூடாது. இன்னும், அவர்களின் கணவர்கள் (அவர்களை திரும்ப அழைத்துக் கொள்வதன் மூலம்) இணக்கமானதை நாடியிருந்தால் அதில் (மூன்று மாதவிடாய் காலத்திற்குள்) அவர்களை (மனைவியராக) மீட்டிக் கொள்வதற்கு அதிக உரிமையுள்ளவர்கள்தாம். மேலும், (பெண்களாகிய) அவர்கள் மீது (ஆடவர்களுக்கு) முறைப்படி (கடமைகள்) இருப்பது போன்று (மனைவியராகிய) அவர்களுக்கும் (ஆடவர்மீது) கடமை இருக்கிறது. மேலும், ஆடவர்களுக்கு (பெண்களாகிய) அவர்கள் மீது ஒரு தகுதி (அதிகமாகவே) இருக்கிறது. இன்னும், அல்லாஹ் மிகைத்தவன் விவேகமுள்ளவன்.

கர்உ என்ற பதத்திற்கு சுத்தம் என்றும், மாதவிடாய் என்றும் இரண்டு அர்த்தங்கள் உள்ளன. ஹனஃபி மதுஹபினர் இந்த இடத்தில் இப்பதத்திற்கு மாதவிடாய் என்று பொருள் செய்து கொண்டு தங்களது சட்டத்தை (பிக்ஹு மஸ்அலாவை) இயற்றி இருக்கின்றனர். ஷாஃபிஈ மதுஹபினர் இந்த இடத்தில் இப்பதத்திற்கு சுத்தம் என்பதாகப் பொருள்

செய்து கொண்டு தங்களது சட்டத்தை இயற்றி இருக்கின்றனர். இவ்விருபிரிவினரும் இப்பதத்திற்கு நேர் விரோதமான அர்த்தம் செய்து கொண்டிருப்பதால் ஷாஃபிஈ மதுஹபின் படி சில சந்தர்ப்பத்தில் இத்தா இருக்க வேண்டிய காலம் குறைந்துவிடும், ஹனஃபி மதுஹபின்படி சில சந்தர்ப்பத்தில் இத்தா இருக்க வேண்டிய காலம் அதிகமாக இருக்கும்.

விவாக ரத்துச் செய்யப்பட்டவர்கள் என்பதற்கு கணவனுடன் இல்லறம் நடத்தி வாழ்ந்த பெண்கள் என்பது கருத்து. கணவனுடன் வீடு கூடி வாழ்ந்த அடிமைப் பெண்களையும், கணவனுடன் சேர்ந்து வாழாத சிறு பெண்களையும் பற்றி இங்கு விவரிக்கப்படவில்லை.

اَلطَّلَاقُ مَرَّتٰنِ ۖ فَاِمْسَاكٌۢ بِمَعْرُوْفٍ اَوْ تَسْرِيْحٌۢ
بِاِحْسَانٍ ۗ وَلَا يَحِلُّ لَكُمْ اَنْ تَاْخُذُوْا مِمَّآ اٰتَيْتُمُوْهُنَّ
شَيْـًٔا اِلَّآ اَنْ يَّخَافَآ اَلَّا يُقِيْمَا حُدُوْدَ اللّٰهِ ۖ فَاِنْ
خِفْتُمْ اَلَّا يُقِيْمَا حُدُوْدَ اللّٰهِ ۙ فَلَا جُنَاحَ عَلَيْهِمَا
فِيْمَا افْتَدَتْ بِهٖ ۗ تِلْكَ حُدُوْدُ اللّٰهِ فَلَا تَعْتَدُوْهَا ۚ
وَمَنْ يَّتَعَدَّ حُدُوْدَ اللّٰهِ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ ۝

229. (இத்தகைய மீட்டுக் கொள்ளக் கூடிய) விவாக ரத்து என்பது இரண்டு முறை(தான்). நல்ல முறையில் (இத்தா தவணை முடிவதற்குள் மனைவியாகவே மீட்டுத் தன்னிடமே) தடுத்து வைத்துக் கொள்ளலாம், அல்லது (அப்பெண்ணுக்கு இடையூறு செய்யாமல்) நல்ல முறையில் (பிரிந்து) விட்டு விடலாம். இன்னும் (மனைவியரான) அவர்களுக்கு நீங்கள் கொடுத்ததிலிருந்து எந்தப் பொருளையும் (திரும்ப) வாங்குவது உங்களுக்குக் கூடாது. அவ்விருவரும்

அல்லாஹ்வின் வரம்புகளை நிலைநிறுத்த முடியாதென நீங்கள் பயந்தால் தவிர; மேலும், அல்லாஹ்வுடைய சட்ட வரம்புகளை நிலைநிறுத்த மாட்டார்களென்று (நியாயம் வழங்குவோராகிய) நீங்களும் அஞ்சினால், அப்பொழுது (கணவனுக்கு) அவள் ஈடாக எதைக் கொடுக்கிறாளோ, அதில் (அதைக் கணவன் பெற்றுக் கொள்வதில்) அவ்விருவர் மீதும் எவ்விதக் குற்றமுமில்லை. இவைகள் அல்லாஹ்வின் வரம்புகளாகும். எனவே, இவற்றை நீங்கள் மீற வேண்டாம். மேலும், எவர் அல்லாஹ்வின் வரம்புகளை மீறுகிறாரோ அவர்கள்தாம் அநியாயக்காரர்கள்.

இதற்கு முந்தின ஆயத்தில் இறைவன் ரஜஇயான அதாவது திரும்ப மீட்டிக் கொள்வதற்குத் தகுதியான விவாக ரத்தைப் பற்றி கூறியிருக்கிறான். ஆதலின், இந்த ஆயத்தில் அதற்குரிய விதிகளைக் கூறி இருக்கிறான். இரண்டு முறை ரஜஇயான விவாக ரத்துச் செய்தால் மறுபடியும் அவளை மீட்டிக் கொள்ளலாம். மூன்றாவது முறையும் அதே விவாக ரத்துச் செய்து விட்டால் அவளை மீட்டிக் கொள்வதற்கு இயலாது. தம்பதிகளிருவரும் சேர்ந்திருந்தால் திருமணத்தின் மூலமாக ஏற்படும் கடமைகளை நிறைவேற்ற முடியாது என்பதை உணர்ந்தால் அவ்விருவரும் குல்உ என்னும் விவாகப் பிரிவனை செய்து கொள்ளலாம், அதாவது கணவனிடம் இருந்து பெற்ற மஹர்த் தொகையில் எவ்வளவையேனும் விட்டுக் கொடுத்துத் தனது கணவனை ராஜிப்படுத்தி விவாக ரத்துச் செய்யும்படி அவள் செய்து கொள்ளலாம். ஆனால், இவ்வாறாக ஏற்படும் பிணக்கு பெண்ணால் ஏற்பட வேண்டும். கணவனால் இப்பிணக்கேற்பட்டால் அப்பொழுது அவன் கொடுத்த மஹர்த் தொகையைத் திரும்ப வாங்குவது தகாது.

فَاِنْ طَلَّقَهَا فَلَا تَحِلُّ لَهٗ مِنْۢ بَعْدُ حَتّٰى تَنْكِحَ
زَوْجًا غَيْرَهٗ ۗ فَاِنْ طَلَّقَهَا فَلَا جُنَاحَ عَلَيْهِمَآ
اَنْ يَّتَرَاجَعَآ اِنْ ظَنَّآ اَنْ يُّقِيْمَا حُدُوْدَ اللّٰهِ ۗ وَتِلْكَ

حُدُوْدُ اللّٰهِ يُبَيِّنُهَا لِقَوْمٍ يَّعْلَمُوْنَ ۝

230. எனவே, அவளை (மூன்றாம் முறையாக) அவன் விவாக ரத்துச் செய்துவிட்டால் அதன் பிறகு அவனல்லாத வேறொரு கணவனை அவள் மணந்து கொள்ளும் வரை (அவள்) அவனுக்கு திருமணத்துக்கு உரியவள் ஆகமாட்டாள். எனவே, (இரண்டாம் கணவனாகிய) அவன் அவளை விவாக ரத்துச் செய்து விட்டால்; (அப்பெண் முதற் கணவன்)அல்லாஹ்வின் வரம்புகளை நிலைநிறுத்தலாம் என அவ்விருவரும் கருதினால் அப்பொழுது அவ்விருவரும் (திருமணத்தின் மூலம்) மீண்டுகொள்வது அவ்விருவருக்கும் குற்றமல்ல; மேலும், இவைகள் அல்லாஹ்வின் வரம்புகளாகும். அறிந்து கொள்ளும் கூட்டத்தினருக்கு இவற்றை (அல்லாஹ்) விவரிக்கின்றான்.

ஒருவன் மூன்று முறை தனது மனைவியை விவாக ரத்துச் செய்துவிட்டால், அப்புறம் அவள் வேறு ஒருவனை மணந்து அவ்விரண்டாவது கணவனும் அவளை விவாக ரத்துச் செய்து இத்தாவும் கழிந்த பிறகு முதலாவது கணவன் அவளை மறுபடியும் திருமணம் செய்து கொள்ளலாம். மற்றொரு ஆடவனை அவள் மணந்து கொள்ளாமல் முதலாவது கணவனே அவளைத் திரும்பவும் மீட்டிக் கொள்ளவோ அல்லது திருமணம் செய்து கொள்ளவோ கூடாது. விவாக ரத்துச் செய்யும் உரிமையை ஆடவர்களுக்கு இறைவன் அளித்திருந்தாலும் அற்பக் காரணங்களுக்காக அடிக்கடி தனது மனைவியை ஆடவன் விவாக ரத்துச் செய்வதைத் தடுக்கும் பொருட்டு "முத்தலாக்கும் சொல்லப்பட்ட பெண் வேறொரு ஆடவனை மணந்து அவனிடமிருந்து விவாக ரத்துப் பெற்றுக் கொள்ளாத வரையில் தன்னுடைய முதல் கணவனை மணந்து கொள்ளக் கூடாது" என்பதற்காக விதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தவிரவும் இந்த ஆயத்தில் வேறொரு கணவனை மணந்து கொள்வதைத்தான் கூறப்பட்டிருக்கிறதேயன்றி அக்கணவனுடன் வீடு கூடி இருப்பதைப் பற்றிச் சொல்லப்படவில்லை. ஆனால், ஹதீஸில் இதனைப்பற்றி விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, முத்தலாக்கும் சொல்லப்பட்ட ஒரு பெண் வேறொருவனை மணந்து அவனுடன் வீடு கூடி இருக்க வேண்டும் என்பது இஜ்மாஉப்படி விதியாக இருக்கிறது.

وَاِذَا طَلَّقْتُمُ النِّسَآءَ فَبَلَغْنَ اَجَلَهُنَّ فَاَمْسِكُوْهُنَّ
بِمَعْرُوْفٍ اَوْ سَرِّحُوْهُنَّ بِمَعْرُوْفٍ ۚ وَلَا تُمْسِكُوْهُنَّ
ضِرَارًا لِّتَعْتَدُوْا ۚ وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ فَقَدْ ظَلَمَ
نَفْسَهٗ ۚ وَلَا تَتَّخِذُوْٓا اٰيٰتِ اللّٰهِ هُزُوًا ۚ وَّاذْكُرُوْا
نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ وَمَآ اَنْزَلَ عَلَيْكُمْ مِّنَ
الْكِتٰبِ وَالْحِكْمَةِ يَعِظُكُمْ بِهٖ ۚ وَاتَّقُوا اللّٰهَ
وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ بِكُلِّ شَىْءٍ عَلِيْمٌ ۝

231. மேலும், நீங்கள் (உங்கள்) மனைவிகளை விவாக ரத்துச் செய்து அவர்களும் தங்கள் (இத்தாவின்) தவணையை (முடிக்கும் காலத்தை) அடைந்துவிட்டால் அப்பொழுது அவர்களை நல்ல முறையில் நீங்கள் (மனைவியராக மீட்டு உங்களிடம்) தடுத்து வைத்துக் கொள்ளுங்கள். அல்லது அவர்களை நல்லமுறையில் விட்டு விடுங்கள். (அவ்வாறின்றி அப்பெண்கள் மீது) நீங்கள் வரம்பு மீறி கஷ்டப்படுத்துவதற்காக அவர்களை (மனைவியராக) தடுத்து வைத்துக் கொள்ளாதீர்கள். மேலும், எவன் இதைச் செய்கிறானோ அவன் தனக்குத்தானே அநியாயஞ் செய்து கொண்டான். மேலும், அல்லாஹ்வின் வசனங்களைப் பரிகாசமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். மேலும், உங்களுக்கு (அருளியுள்ள) அல்லாஹ்வின் அருட்கொடையையும், வேதத்திலிருந்து அவன் உங்களுக்கு இறக்கியதையும் (அதன்) கட்டளையையும் எண்ணிப்